விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 மாசி 28 செவ்வாய்க்கிழமை (12.03.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 083

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

# அரசாங்கத்துக்கு காணி வழங்க

# வலி.வடக்கு மக்கள் முன்வருகை!

## 3 ஆயிரம் ஏக்கரே மக்களுக்குச் சொந்தம் என்கிறார் காணி அமைச்சர்

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள 6 ஆயிரம் ஏக்கர் காணியில் மூவாயிரம் ஏக்கர் காணி அரசாங்கத்திற்கு சொந்தமானது என காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார். அத்தோடு மிகுதி, பொது மக்களுக்கு சொந்தமான 3 ஆயிரம் ஏக்கர் காணிகளில் பல காணிகளை அரசாங்கத்திடம் வழங்க பொதுமக்கள் முன்வந்துள்ளனர் எனவும் தெரிவித்தார். (20ஆம் பக்கம் பார்க்க)



ஜனதா கட்சி தலைவர் சுப்பிரமணிய சுவாமி, ராஜபக்ஷவை சந்தித்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழக மாணவர்கள், அவர்களது உருவ பொம்மைகளை எரித்த போது...

## இந்திய ஆலோசனையை நிராகரித்தது இலங்கை

(கொழும்பு)

அமெரிக்காவுடன் பேச்சு நடத்த வேண்டும்என்ற இந்தியாவின் ஆலோசனையை இலங்கை நிராகரித்து விட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐ.நா மனித உரிமை தீர்மானம் தொடர்பாக இலங்கை, அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தி அனைவரும் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில்தீர்மானம் கொண்டுவரப்பட வேண்டும் எனஇலங்கைக்குசுதந்தவரம் இந்தியா ஆலோசனை வழங்கியிருந்தது.

இதனை இலங்கை நிராகரித்து விட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. இது தொடர்பாக இலங்கையின் ரவிநாத்ஆரியசிங்க, அமெரிக்கதீர்மானத்தின் சாராம்சத்தை நாங்கள் நிராகரிக்கின்றோம்.

அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்துநாங்கள்உத்தேசிக்கவில்லை. கடந்தாண்டுமார்ச்மாதம்அமெரிக்காகொண்டு வந்த தீர்மானத்தையும் இலங்கை அங்கீகரிக்கவில்லைஎனக் கூறியுள்ளதாகதகவல்வெளியாகியுள்ளது. (எ-11)

## அமெரிக்க யோசனைக்கு ஆதரவளிக்க வலியுறுத்து

(புதுடில்லி)

இலங்கை தொடர்பாகஅமெரிக்காவினால் முன்வைக்கப்படவுள்ள மனிதவுரிமை தொடர்பான பிரேரணையின் போது இந்திய வெளிவிவகார கொள்கையானது நீண்டகால நலனைக்கருத்தில் கொண்டு முன்னெடுக்கப்பட வேண்டும்.

இதன் போது உள்நாட்டின் அரசியல் நோக்கங்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டிய அவசியம் இல்லை என த ஹிந்து நாளிதழின் ஆசிரியர் தலையங்கம் தெரிவித்துள்ளது.

ஜெனிவாவில் அமெரிக்க யோசனைக்கு ஆதரவு அளிக்க வேண்டும் எனக் கோரி தமிழகத்தில் பாரிய எதிர்ப்புகள் வெளிக்காட்டப்பட்டு வருகின்றன.

இதனைக் கருத்தில் கொண்டு த ஹிந்து செய்தித்தாள் இந்தக் கருத்தை முன்வைத்துள்ளது.

இதேவேளை இலங்கை அரசாங்கம் சர்வதேச செய்தியாளர்களுக்கும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளருக்கும் சுதந்திரமாகச் சென்று பணியாற்றக் கூடிய நிலைமையை தமது நாட்டுக்குள் உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என இந்தியாவின் த பயினியர் செய்தித்தாள் கோரிக்கை விடுத்துள்ளது. (எ-11)

## ஜெனிவா கூட்டத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம்

(வவுனியா)

ஐக்கிய நாடுகள் சபையின் ஜெனிவாக் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவரவுள்ள தீர்மானத்தை எதிர்த்து வவுனியாவில் ஒரு ஆர்ப்பாட்டத்தை நடத்த இலங்கை அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை இன்று வவுனியாவில் நடத்த ஏற்பாடு செய்யப்படுகிறது.

இதற்கான தீவிர நடவடிக்கைகளில் இலங் கைப் படையினரும் அரச ஆதரவுக் கட்சிகளும் ஈடுபட்டுள்ளதாக வன்னியில் இருந்து தகவல் கிடைத்துள்ளன.

இந்நிலையில் இரணைமடுவில் படையினரின் தலைமையகத்திற்கு அருகில் உள்ள பண்ணை, முழங்காவிலுக்கு போகும் வழியில் ஜெயபுரத்திற்கு அருகாமையில் உள்ள பண்ணை, விசுவமடுப் பகுதியில் உள்ள படையினரின் பண்ணை (20ஆம் பக்கம் பார்க்க)

## பொது பல சேனா அமைப்பின் போராட்டம் தொடருமாம்

(கொழும்பு)

ஹலால் சான்றிதழ் தொடர்பில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலாமாவின் அறிவிப்பையிட்டு நாம் மகிழ்ச்சியடைந்தாலும் எமது இலக்கினை நோக்கி தொடர்ந்து பயணிப் போம் என பொது பல சேனா தெரிவித்துள்ளது.

ஹலால் விவகாரத்தில் நாங்கள் வெற்றி பெற்றுவிட்டோம். அடுத்தடுத்த விவகாரங்கள் தொடர்பில் எதிர்வரும் காலங்களில் தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என பொது பல சேனா அமைப்பின் தலைவர் கிரம விமலஜோதி தேரர் தெரிவித்தார்.

எமது அடுத்த போராட்டம் இம்மாதம் 31-ம்திகதிக்கு முன்னர் ஆரம்பமாகும். கண்டியில் எதிர்வரும் 17-ம் திகதி நடைபெறும் மாநாட்டில் விசேட அறிவிப்பொன்றை மேற்கொள்ளவுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.

இது ஒரு பௌத்த நாடு. பௌத்தர்கள் ஹலால் உண்ணத் தேவையில்லை. அதேபோல முஸ்லிம் பெண்கள் அணி (20ஆம் பக்கம் பார்க்க)

## வைகோ தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம்

(சென்னை)

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வலி யுறுத்தியும் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரன் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்தும் வைகோ தலைமையில் ஆர்ப்பாட்டம் இடம் பெறவுள்ளது.

எதிர்வரும் 20ஆம் திகதி காலை 11.30 மணிக்கு மும்பை ஆசாத் மைதானத்தில பா.ஜனதா கவுன்சிலர் தமிழ்ச் செல்வன் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு ஏற்பாடுகள் செய்துள்ளார்.

ஆர்ப்பாட்டத்தில் சிவசேனா எம்.பி. சஞ்சய்ராவுத், மும்பை பா.ஜனதா தலைவர் ராஜ் புரோகித், மராட்டிய நவ நிர்மான் சேனா எம்.எல்.ஏ.நந்காவ்ங்கர் மற்றும் மும்பையில் உள்ள அனைத்து தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர்.

இத்தகவலை பாண்டுப் தமிழ்ச் சங்கத்தலைவர் எஸ்.எஸ்.தாசன் தெரிவித்துள்ளார். (எ-11)

## இலங்கையில் பௌத்த மதத்தை தவிர மற்றைய மதங்களுக்கு அச்சுறுத்தல்

### கிழக்கு மாகாண சபை உறுப்பினர்

(மட்டக்களப்பு)

இந்த நாட்டில் பௌத்த மதம் தவிர்ந்த ஏனைய மத உரிமைகளுக்கு தொடர்ந்தும் அச்சுறுத்தல் இருப்பதையே அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் பௌத்த கடும் போக்காளர்களின் நடவடிக்கைகள் வெளிப்படுத்துவதாக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பிரசன்னா இந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு கிரான்குளம் கணபதிப்பிள்ளையார் ஆலய மடப்பள்ளி மற்றும் அலுவலக கட்டட அடிக்கல் நடும் நிகழ்வில் முதன்மை அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஆலய தலைவர் எ.குணலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ் (20ஆம் பக்கம் பார்க்க)

## பொதுநலவாய நாடுகள் மாநாடு இலங்கையில் தேவையில்லை?

### பிரிட்டன் வலியுறுத்தல்

(லண்டன்)

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாடு இலங்கையில் நடத்தப்படக்கூடாது என பிரித்தானியாவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் டேவிட் மில்லிபாண்ட் தெரிவித்துள்ளார்.

மனித உரிமைக் காரணங்களுக்காக இலங்கையில் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டை நடத்தக்கூடாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் அமர்வுகள் நடத்தப்படக்கூடாது என்ற நிலைப்பாட்டை வகிக்கும் நாடுகளுக்கே பிரித்தானிய அரசாங்கம் ஆதரவளிக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.


இலங்கை மீது சர்வதேச சமூகம் அழுத்தங்களைப் பிரயோகித்து வருவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்ள முடியாது எ (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியிடம் கூட்டமைப்பு சமர்ப்பித்த மீள்குடியேற்ற புள்ளிவிபரம் தவறானது!

## யாழ். கட்டளைத் தளபதி குற்றச்சாட்டு



வலி. வடக்கில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள காணிகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கையளித்த மகஜர் முற்றிலும் தவறான புள்ளிவிபரங்களைக் கொண்டது என யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் அலுவலகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு அலுவலகத்தைத் திறந்து வைத்தார்.

இதனையடுத்து மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே கட்டளைத் தளபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த மாதம் 12-ம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் யாழ்.ரில்கோ விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற யாழ்.மாவட்ட விசேட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி, ஜனாதிபதியிடம் மகஜர் ஒன்று கையளித்தார்.

அந்த மகஜரில் வலி.வடக்கில் 24 கிராம சேவையாளர் பிரிவில் மக்கள் இன்னும் மீள் குடியேற்றப்படவில்லை எனவும் சுமார் 28 ஆயிரத்து 270 பேர் மீள்குடியேற்றத்திற்காக பதிவுகளை மேற்கொண்டுள்ளனர் என ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக அடையாளப்படுத்தி புள்ளிவிபரத்துடன் மகஜர் கையளித்தார்.

இந்த மகஜரைப் பெற்றுக்கொண்ட ஜனாதிபதி, யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதியை அழைத்து அந்தக் கூட்டத்தில் வைத்தே மகஜர் தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமாறு கூறியிருந்தார்.

அத்தோடு வலி. வடக்கு காணி தொடர்பில் ஹத்துருசிங்க நடவடிக்கை எடுப்பார் எனவும் பகிரங்கமாக கூட்டத்தில் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

இந் நிலையில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அறிக்கை பொய்த் தகவல்களையும் புள்ளிவிபரத்தையும் கொண்டுள்ளது என குற்றம் சாட்டியதோடு ஊடகங்கள் மீதும் குற்றம் சாட்டியிருந்தார். (எ-6)

# சாளின் மீதான தாக்குதலுக்கு த.தே.ம. முன்னணி கண்டனம்

வலம்புரி செய்தியாளர் மீதான தாக்குதலுக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அவர்கள் வெளியிட்ட அறிக்கை வருமாறு:

வலம்புரி பத்திரிகையின் செய்தியாளர் உதயராசா சாளின்(வயது-22) நீராவியடிப் பகுதியில் சென்றுகொண்டிருந்தபோது ஆறு பேர் கொண்ட குழுவினால் வழிமறிக்கப்பட்டு கண்மூடித்தனமாகத் தாக்கப்பட்டு காயப்படுத்தப்பட்டுள்ளார்.

யாழ். குடாநாடு முழுவதும் இராணுவத்தினரது தீவிர கண்காணிப்பிலுள்ள நிலையில் இத்தாக்குதல் சம்பவம் நடைபெற்றுள்ளது.

காட்டுமிராண்டித்தனமானதும், மிலேச்சத்தனமானதுமான இத்தாக்குதல் சம்பவத்தினை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றது.

தமிழ் மக்களை தொடர்ந்தும் மரண பயத்தினுள் வைத்திருக்க வேண்டும் என்பதற்காக அரச பயங்கரவாதம் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்படுகின்றது. அதனைத் தமிழ் ஊடகங்கள் சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு கொண்டு வருகின்ற பணியை துணிச்சலுடன் மேற்கொள்கின்றன.

அதனைப் பொறுத்துக்கொள்ள முடியாத நிலையிலேயே தமிழ் ஊடகங்களை மௌனிக்கச் செய்ய வேண்டும் என்ற நோக்குடன் இவ்வாறான தாக்குதல் சம்பவங்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றது.

இத் தாக்குதல் கருத்துச் சுதந்திரத்தினையும், ஊடகச் சுதந்திரத்தினையும் கேலிக்கூத்தாக்கின்றது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ-11)


தேவை

வைத்திய நிலையமொன்றுக்கு

- அனுபவமுள்ள தாதிமார்கள் (பெண்கள்)
- 5 வருட அனுபவமுள்ள சாரதி

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்:- 0777750391 (2141)


# காணி விவகார கலந்துரையாடலில் ஊடகவியலாளர்கள் புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

காணி விவகாரம் தொடர்பாக யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதும் ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்படாமல் அவமதிக்கப்பட்டனர்.

காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் யாழ்.மாவட்ட அலுவலகம் மாவட்டச் செயலகத்தில் நேற்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இதனையடுத்து காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோனின் பங்கேற்புடன் அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் மாவட்டச் செயலகத்தில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க, யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் கருணாரட்ன மற்றும் பிரதேச செயலாளர்கள், அரச அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள் எனப் பலரும் பங்கு கொண்டிருந்தனர்.

இந்தக் கலந்துரையாடலின்போது செய்தி சேகரிக்கச் சென்ற செய்தியாளர்கள் தடுக்கப்பட்டதோடு புகைப்படம் எடுக்க மட்டும் ஒருசில நிமிடங்கள் அனுமதிக்கப்பட்டனர்.

இருப்பினும் அமைச்சர் மற்றும் பாதுகாப்புத் தரப்பினரின் புகைப்படப் பிடிப்பாளர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

மேலும் இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்படும் விடயங்கள் ஊடகங்களுக்கு வழங்கப்படக்கூடாது எனக் கூட்டத்தில் அதிதிகள் வரிசையில் அமர்ந்திருந்தவர்கள் சிலர் அதிகாரிகளுக்கு கண்டிப்பான உத்தரவிட்டுள்ளனர்.

அத்தோடு இந்தக் கூட்டம் தொடர்பில் அரசாங்க அதிபரிடம் தொடர்புகொண்டு கேட்ட போது, கூட்டத்தில் ஆராயப்பட்ட விடயங்களை மறைத்து மழுப்பலாகப் பதிலளித்தார்.

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரை மீள் குடியேற்றம் மற்றும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள காணிகள் தொடர்பில் இடம்பெறும் கூட்டங்களுக்கு ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்படாமல் தடுக்கப்படுவது தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)

# டெங்கை ஒழிக்க ஆசிய நாடுகள் இணைவு

டெங்கு நோயை ஒழிக்கும் பொருட்டு ஆசிய நாடுகளை ஒன்றிணைத்து திட்டங்களை செயற்படுத்த உலக சுகாதார நிறுவனம் தீர்மானித்துள்ளது.

ஒவ்வொரு நாடும் செயற்படுத்தும் ஒவ்வொரு திட்டங்களை ஒன்றிணைத்து திட்டத்தை வலுப்படுத்தவுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அதன்படி; இலங்கை, இந்தியா, பூட்டான், மாலைதீவு, பங்களாதேஷ், நேபாளம், தாய்லாந்து, இந்தோனேசியா, தீமோர் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளை இணைத்து இத் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

இது குறித்த விசேட மாநாடு நேற்று கொழும்பில் இடம்பெற்றது.

உலக சனத்தொகையில் வருடாந்தம் 100 மில்லியன் பேர் டெங்கு நோயால் பாதிக்கப்படுவதாக உலக சுகாத்ார நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. (எ-11)


காணியுடன் வீடு விற்பனைக்கு

சுன்னாகம் வீதி, நவக்கிரி புத்தூரில் காணி வீடு விற்பனைக்கு.

தொடர்பு:-0776607851 (சி-2656)





# ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட குடும்பங்களுக்கு அச்சுறுத்தல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் உறவுகள் காணாமல்போன குடும்பங்களுக்கு அச்சுறுத்தல்கள் தொடர்ச்சியாக விடுக்கப்பட்டு வருவதாக தெரியவருகின்றது.

கடந்த 05-ம் திகதி கொழும்பில் நடத்தப்படவிருந்த காணாமல்போனோர்களுக்கான ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய இடங்களிலிருந்து அவர்களின் உறவுகள் கொழும்பு நோக்கிச் சென்ற போது வவுனியாவில் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

இந்த நிலையில் இவர்கள் வவுனியாவில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தி தமது வேதனைகளை உலகிற்கு பறைசாற்றியதோடு தமக்கு நீதி வழங்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

இந்த நிலையில் இவ் ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டிந்த உறவுகளை தொலைத்தவர்களுக்கு புலனாய்வாளர்களால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அவர்கள் வீடுகளுக்கு அருகில் சென்று அவர்களது விபரங்களை பதிந்து வருகின்ற செயற்பாட்டால் மிகவும் அச்சமடைந்துள்ள உறவுகள் செய்வதறியாதுள்ளனர்.

மேலும் ஒரு சில குடும்பங்களுக்கு இவ்வாறான ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்ளக் [illegible] அச்சுறுத்தல் [illegible] புலனாய்வாளர்களால் விடுக்கப்பட்டுள்ளது. (எ-11)


வேலை வாய்ப்பு

சாதிக்கத் துடிக்கும் இளைஞர், யுவதிகளுக்கு அரியதோர் வேலைவாய்ப்பு, பருத்தித்துறையில் இயங்கி வரும் ASIA MULTI MARKETING (PVT) LTD நிறுவனம் தனது கிளைக்கு ஊழியர்களை விண்ணப்பம் கோருகின்றது.

தகைமை:- O/L

தகுதிக்கேற்ப அடிப்படைச்சம்பளம் வழங்கப்படும். வெளிமாவட்ட ஊழியர்களுக்குத் தங்குமிடவசதிஇலவசமாக வழங்கப்படும். தகுதியுடையோர் கீழக்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

T.P:-0778392959,0776417651,0771518168 (2144)

பிள்ளையார் இன்

25% கழிவு

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை. மாலையில் வழங்கப்படும்.

இன்றைய விசேட உணவு :-

பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/- சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

(C-1660) தொடர்புகளுக்கு : இல. 31. மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

வேலைவாய்ப்பு

A/C தொழில்நுட்பவியலாளர்

Split மற்றும் Auto A/C களை பராமரிப்பு மற்றும் திருத்தம் செய்வதில் முன்னனுபவம் உள்ளவர்கள் கீழ்க் குறிப்பிட்ட முகவரிக்கு நேரில் வரவும்.

ETM, கரந்தன் வீதி, ஊரெழு. (சி-2555)

மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்

Dr.P.ஆறுமுகம்

T.P.: 0719315664 , 0777569205

மீண்டும் யாழில்

12.03.2013 முதல் 17.03.2013 வரை 6 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

நாதன் இன்

(பழைய கமால் லொஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி,யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்) (பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்) (சி-2654)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## நிம்மதி

கடற்கரையோரமாக பெரியவர் ஒருவர் கையாலே மணலைக் கீறிக் கொண்டிருந்தார். எதையோ தேடுவது போலும் இருந்தது. மெதுவாக அவர் அருகில் சென்று, "எதைத் தொலைத்து விட்டுத் தேடுகிறீர்கள்?" என்று கேட்டேன்.

அவர் சாவகாசமாக என்னை நிமிர்ந்து பார்த்து; "நிம்மதியைத் தேடிக் கொண்டிருக்கிறேன்" என்றார்.

இவர் கூறியதைக் கேட்டதும் எனக்கு ஒரு மாதிரியாகி விட்டது. இருந்தாலும் ஒருவாறு சமாளித்துக் கொண்டு, நிம்மதி இந்த மணலிலே கிடைக்காது" என்றேன்.

"சரி... இன்று வசமாக நம்மிடம் ஒருவர் மாட்டிக் கொண்டார். அவருடன் கதைக்கலாம் என்று ஒரு பக்கமாகச் சென்று கதை கூற ஆரம்பித்தேன்.

ஒரு பெரிய ராஜா இருந்தார். அவருக்கு அனைத்து வசதிகளும் இருந்தது. இருந்தாலும் ஒரேயொரு குறை. அது என்னவென்றால் நிம்மதி இல்லை என்ற குறை.

அவர் நிம்மதியைத் தேட ஆரம்பித்தார். உடனே அதற்கான முயற்சிகளிலே தீவிரமாக இறங்கி மேதைகளை அழைத்து, "நிம்மதி எங்கே இருக்கிறது?" என்று விசாரித்தார்.

ராஜாவின் கேள்விக்கு ஒவ்வொருவரும் வெவ்வேறு கோணத்தில் விளக்கங்களை வழங்கினார்கள்.

எந்தப் பதிலும் ராஜாவுக்குத் திருப்தி அளிக்கவில்லை. ஆதலால், அவர்கள் அனைவரையும் "போய் வருமாறு" சொல்லி அனுப்பி வைத்து விட்டார்.

நாட்கள் கடந்த நிலையில்; ஒருநாள் அவர் மாளிகையின் உப்பரிகையிலே நின்று கொண்டிருந்தார்.

அச்சமயத்தில் தெருவிலே ஒரு பிச்சைக்காரன் மிகவும் உல்லாசமாக பாட்டுப்பாடிக் கொண்டு போய்க் கொண்டிருந்தான். குரலிலே ஒரு சந்தோசம். நடையிலே ஒரு மிடுக்கு. அவனிடம் சற்றுகூட கவலை தென்படவில்லை.

உடனே ராஜா இதை அவதானித்து விட்டு தனது ஏவலாளிகளை கைதட்டி அழைத்தார். "உடனே ஓடிப்போய் அந்த யாசகனை அழைத்து வருமாறு" உத்தரவு பிறப்பித்தார்.

இவர்கள் போய் அழைத்ததும் அவன் வர மறுத்து விட்டான்.

இவர்கள் ராஜாவிடம் வந்து விடயத்தைச் சொன்னார்கள்.

ராஜாவுக்கோ மிகவும் ஆச்சரியம்.

"சரி அவன் என்னதான் சொல்கிறான்?" என்று விசாரித்து வருமாறு ஏவலாளிகளை மீண்டும் அனுப்பினார்.

"என்னைப் பார்க்க வேண்டுமென்றால், ராஜாவைத் தெருவிற்கு வரச் சொல்லுங்கள்" என்று பதிலனுப்பினான்.

அதை வந்து ராஜாவிடம் சொன்னார்கள். இருந்தாலும் ராஜாவுக்கு கோபம் வரவில்லை. இவ்வளவு சுதந்திர வேட்கையோடு, இருக்கிறவன் சாதாரண மனிதனாக இருக்க முடியாது என்று தன்னுள் நினைத்தார்.

உடனே தெருவோரம் வந்து அந்தப் பிச்சைக்காரன் அருகில் சென்று "நீ கவலைப்படாமல்– சந்தோஷமாக பாடிக்கொண்டு போகிறாயே... அது எப்படி உன்னால் முடிகிறது?" என்று கேட்டார்.

"ஏன் அப்படி கேட்கிறீர்கள்?"

"எனக்கு அரண்மனையிலே அனைத்து சுகபோகங்களும் இருந்தும் நிம்மதி இல்லை. இது ஏன் என்று தெரியவில்லை. உன்னைக் கேட்டால் தெரியுமென்று நினைத்தேன். ஆதலால் உன்னை அழைத்தேன்– அதற்கு நீ மறுத்து விட்டாய்" என்றார்.

பிச்சைக்காரன் கடகடவென்று சிரித்தான்.

"மகிழ்ச்சிக்குத் தடையாக இருப்பது இந்த மாளிகைதான். இதை உதறி எறிந்து விட்டு வெளியே வந்தால் நிம்மதி தானாகவே தேடி வந்து விடும்" என்றான்.

"நான் அரசன். எனக்கு கடமைகள் இருக்கிறது... அதை விட்டுவிட்டு எப்படி வர முடியும்?" என்று ராஜா கேட்டார்.

"இரண்டும் ஒரே நேரத்திலே எப்படி கிடைக்கும்? என்னைப் பாருங்கள்; என்னிடம் எதுவுமே கிடையாது, நிம்மதியாக வாழ்கிறேன்" என்றான்.

ராஜா சந்தோஷப்பட்டு தன்னுடைய மேலங்கியை எடுத்து அவனுக்குப் பரிசாகக் கொடுத்தார். அவன் சிரித்தவாறே அதை "வாங்கமாட்டேன்" என்றான்.

"இதை நீங்கள் எனக்கு கொடுப்பதால் எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை. இந்தப் போர்வையை வாங்கிக் கொண்டால் அதைப் பெற்ற நேரத்தில் இருந்து அதைக் காப்பாற்றுவதற்கு கவலை வந்து விடும். அதன்பின் தூக்கம் வராது" என்று கூறி விட்டு அவன் சந்தோஷமாக போய் விட்டான்.

இப்போது நிம்மதி எங்கே இருக்கிறது என்பதை ராஜா தெரிந்து கொண்டார். அந்த இடத்திற்கு தன்னாலே போக முடியாது என்பதையும் புரிந்து கொண்டார்.

இப்படி இந்தக் கதையை கடற்கரை மணலிலே கீறிக்கொண்டு அந்தப் பெரியவர் சொல்லி முடித்தார்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# உருத்திரபுரம் பிரதான வீதி முழுமையாக புனரமைக்கப்படுமா?

## மக்கள் கேள்வி

(சிவநகர்)

உருத்திரபுரம் பிரதான வீதியின் சில பகுதிகள் புனரமைக்கப்படவில்லை என சுட்டிக்காட்டப்படுகின்றது. இவ்வீதியின் கரடிப்போக்கு சந்தி வரையான ஒரு கிலோ மீற்றர் வீதி மட்டும் ஓரளவு புனரமைக்கப்பட்டு காணப்படுகின்றது.

மேலும் அவ்வீதி வழியே ஏழாம் வாய்க்கால் வரையும் உள்ள வீதி மிகமோசமாக வாகனங்கள் பயணிக்க முடியாத அளவுக்கு சேதமாகியுள்ளது.

ஏழாம் வாய்க்காலில் இருந்து உருத்திரபுரம் மகா வித்தியாலயம் வரையான இடைப்பட்ட வீதி குன்றும் குழியுமாக இருந்தபோது வீதி அபிவிருத்தி திணைக்களம் புனரமைப்பு செய்தது. ஆயினும் அவ் வீதியும் தற்போது கற்கள் கிளறுண்டு காணப்படுகின்றது.

இதனால் இவ்வீதி புனரமைப்பு குறித்து மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர். மேலும் இம் மகா வித்தியாலயத்திற்கு அப்பால் செல்லும் இதே வீதி பயணிக்க முடியாதவாறு குன்றும் குழியுமாக காணப்படுவதாக குற்றம் சாட்டப்படுகின்றது. (அ-254)

# நிறுத்தல் அளவை கருவிகள் முத்திரையிடல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சி மன்ற எல்லைக்கு உட்பட்ட வியாபாரிகளது நிறுத்தல் அளவை கருவிகள் முத்திரையிடும் நடவடிக்கைகள் சாவகச்சேரி நகராட்சி மன்ற வளாகத்தில் இன்று செவ்வாய்க்கிழமையும் எதிர்வரும் 14,15 ஆம் திகதிகளிலும் நடத்தப்படவுள்ளது. யாழ். மாவட்ட செயலக அளவீட்டு அலகுகளும் நியமங்களும் சேவைகளும் பகுதியினரால் கருவிகள் பரிசோதிக்கப்பட்டு முத்திரையிடும் பணி கள் நடைபெறும் எனவும் குறிப்பிட்ட தினங் களில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை தங்களது கருவிகளுக்கு முத் திரை இடுமாறும் நகராட்சி மன்ற செயலாளர் சு.புத்திசிகாமணி அறிவித்துள்ளார். (அ-3-29)

# டெங்கு நோயை கட்டுப்படுத்த ஆசிய நாடுகள் ஒன்றிணைவு

(கொழும்பு)

டெங்கு நோயை ஒழிக்கும் பொருட்டு ஆசிய நாடுகளை ஒன்றிணைத்து திட்டங்களை செயற்படுத்த உலக சுகாதார நிறுவனம் தீர்மானித்துள்ளது.

இது குறித்து விசேட மாநாடு நேற்றைய தினம் கொழும்பில் இடம் பெற்றது. ஒவ்வொரு நாடும் செயற்படுத்தும் ஒவ்வொரு திட்டங்களை ஒன்றிணைத்து திட்டத்தை வலுப்படுத்தவுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அதன்படி இலங்கை, இந்தியா, பூட்டான், மாலைதீவு, பங்களாதேஷ், நேபாளம், தாய்லாந்து, இந்தோனேசியா, தீமோர், சிங்கப்பூர் ஆகிய நாடுகளை இணைத்து இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

உலக சனத்தொகையில் வருடாந்தம் 100 மில்லியன் பேர் டெங்கு நோயால் பாதிக்கப்படுவதாக உலக சுகாதார நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. (அ-2)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 170 | 180 | 160 | 170 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 200 | 240 | 250 | 200 |
| தக்காளி | 40 | 60 | 80-100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 | 40 |
| கோவா | 40 | 40 | 60 | 60 |
| கரட் | 100 | 140 | 140 | 140 |
| பூசணி | 50 | 60 | 60 | 60 |
| புடோல் | 50 | 70 | 80 | 60 |
| வாழைக்காய் | 40 | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 60 | 70 | 80 | 60-100 |
| பெரிய வெங்காயம் | 80 | 60 | 100 | 100 |
| பாகற்காய் | 100 | 120 | 140 | 120 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 | 80 | 80 |
| பயற்றங்காய் | 110 | 50 | 100 | 120 |
| லீக்ஸ் | 120 | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 90 | 40 | 80 | 100 |
| கறிமிளகாய் | 110 | 120 | 150 | 140 |
| முருங்கைக்காய் | 600 | 500 | 500 | -- |
| போஞ்சி | 100 | 120 | 100 | 150 |
| கத்தரிதம்புள்ள | 120 | 140 | 120 | -- |
| கீரை - 1 பிடி | 10 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 30 | 50 | 60 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 53 | 45-50 |
| இராசவள்ளி | 100 | 90 | 120 | 100 |
| வெங்காயப்பூ | 120 | 120 | 160 | 160 |

## இராசி பலன்

12.03.2013
(மாசி 28, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.20 மணிக்கு
பிரதமை பின்னிரவு 1.53 மணிவரை
பூரட்டாதி பிற்பகல் 12.55 மணிவரை
இராகுகாலம் 3.22-4.52 மணிவரை
சுபநேரம் 10.52-12.22 மணிவரை

**மேடம்** அம்பிகையை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், தொழில் நலன் கருதி வெளியூர் பயணம் ஒன்று உருவாகலாம், சொன்ன சொல்லை காப்பாற்ற துடிப்புடன் செயற்படுவீர்கள்.

**இடபம்** புதிய பொருட்கள் வாங்கி மகிழ்வீர்கள், எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி காண்பீர்கள், குடும்பததில் குதூகலங்கள் ஏற்படலாம், போசன நன்மை உண்டு, கௌரவமான நாள்.

**மிதுனம்** வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், தொட்ட காரியங்கள் வெற்றிபெறும், அரசு வழியில் அனுகூலமுண்டு, தந்தை வழி உறவில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும்,

**கடகம்** ஆன்மீக சிந்தனை மேலோங்கும், புகழ்மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுப்பீர்கள், உடல் நலம் சீராகும்.

**சிங்கம்** எடுத்த காரியங்களில் சில தாமதங்கள் ஏற்படலாம், சில விரயங்கள் தவிர்க்க இயலாமல் போகலாம், எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம்.

**கன்னி** பெண்களின் சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகலாம், பயணங்களால் பலனுண்டு, தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும்.

**துலாம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும், பழைய பாக்கிகளை நாசூக்காகப் பேசி வசூலிப்பீர்கள், எடுத்த கருமங்கள் கைகூடும், விழாக்களில் கலந்துகொள்ள அழைப்புக்கள் வந்து சேரும்.

**விருச்சிகம்** வியாபார விருத்தியுண்டு, பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, புதிய திட்டங்கள் கைகூடும், பொது விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், புத்திரரால் நன்மையுண்டு.

**தனுசு** பெற்றோர் மீது பிரியம்கூடும், திட்டமிட்ட காரியங்களைச் திட்டமிட்டபடியே செய்து முடிப்பீர்கள், வாகனங்களை பழுது பார்க்கும் எண்ணம் உருவாகும், அரசு வழியில் அனுகூலமுண்டு.

**மகரம்** உடன் பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டுவர், சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், பொருளாதார நிலை உயர்வடையும்.

**கும்பம்** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், கற்பனை மிகுதியான நாள், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், போசன நன்மை உண்டு.

**மீனம்** எப்படி நடக்கலாம் என நினைத்த காரியம் ஒன்று நல்லபடியாக நடைபெறலாம், திடீர் பயணத்தால் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சயன சுகமுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வதிரிப்பகுதி ஹயஸ் வெள்ளவத்தையில் மாயம்


(கரவெட்டி)

வடமராட்சி வதிரி பகுதியை சேர்ந்த வாகன உரிமையாளர் ஒருவரின் ஹயஸ் வான் கொழும்பு வெள்ளவத்தை சாளிமன் வீதியில் வைத்து கொள்ளையர்களினால் கொள்ளையடித்து செல்லப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது, வடமராட்சி வதிரியைச் சேர்ந்த சுப்பிரமணியம் தவச்செல்வம் என்பவருடைய இலக்கம் (G. E 8467)என்ற இலக்கமுடைய ஹயஸ் வாகனத்தை அவருடைய சாரதி கதிர்காமத்திற்கு பயணிகளை ஏற்றுக்கொண்டு சென்று விட்டு கொழும்பு வெள்ளவத்தை சாளிமன் வீதியில் நேற்றுக்காலை 2 மணியளவில் வாகனத்தை நிறுத்திவிட்டு சாரதி தங்குமிட அறையில் தூங்கச் சென்றுள்ளார்.

பின்னர் காலை வந்து பார்த்த சமயம் வாகனம் காணாததையடுத்து அதிர்ச்சி அடைந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக சாரதி வாகன உரிமையாளருக்கு தெரிவித்ததுடன் வெள்ளவத்தை பொலிஸாரிடமும் முறைப்பாடு செய்துள்ளார். இச்சம்பவம் போன்று யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்லும் யாழ். மக்களிடம் இருந்து பல கொள்ளைச் சம்பவங்கள் இடம் பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது. (அ-3-24)




## அனுமதி பெறாது கட்டடம் அமைத்தோர் மீது நடவடிக்கை

### சாவ.நகரசபை அறிவிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட அனுமதி பெறாத கட்டட உரிமையாளர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என நகராட்சி மன்ற தவிசாளர் இ.தேவசகாயம் பிள்ளை தெரிவித்தார்.

மன்ற எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் மன்றத்தின் அனுமதி இன்றி புதிய கட்டடங்கள், மதில் மற்றும் கட்டட நீடிப்புகள் செய்வது அனுமதிக்கப்படாது எனவும் கட்டடம் கட்ட இருப்பவர்கள் மன்றிற்கு விண்ணப்பித்து உரிய அனுமதியை பெற்ற பின் கட்டடங்களை அமைக்க வேண்டுமென அவர் தெரிவித்தார்.

பொதுமக்களின் புகார்களை அடுத்து நகரசபை உத்தியோகத்தர்கள் திடீர் பரிசோதனை மேற்கொண்டபோது பல கட்டடங்கள் மற்றும் மதில்கள் நகராட்சி மன்றத்தின் உரிய அனுமதி பெறாது கட்டப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

இவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-3-29)

## த.வி.கூட்டணியின் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக்கூட்டணியின் விசேட கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 3.30 மணியளவில் யாழ்ப்பாணத்தில் உள்ள கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

முக்கியமாக தற்கால அரசியல் நிலவரம் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளதால் அனைத்து அரசியல் அமைப்புகளினது உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், அரசியல் ஆர்வம் உள்ளோர் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தமிழர் விடுதலைக் கூட்டணி கேட்டுள்ளது. (அ)

# ஊடகவியலாளரை தாக்கியவரை சட்டத்தின் முன் நிறுத்துங்கள்!

## விந்தன் கனகரத்தினம் கண்டனம்



வலம்புரி பத்திரிகையின் செய்தியாளர் உ.சாளீன் மீது இனந்தெரியாத நபர்கள் என தங்களை அடையாளப் படுத்திய ஆறு பேர் கொண்ட கும்பல் அவரை நட்டநடு வீதியில் வைத்து பட்டப்பகலில் தாக்கிய ஈனச் செயலை நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு இச்சம்பவத்துடன் தொடர்புடைய சூத்திரதாரிகளை இன்று வரை கைது செய்யாததையிட்டும் நாம் வன்மையான கண்டனத்தை தெரிவிக்கிறோம் என யாழ்.மாநகரசபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

மிலேச்சத்தனமான மனித நேயத்திற்கும் அதன் நாகரிகத்திற்கும் மனித பண்பிற்கும் துளியேனும் ஒவ்வாத செயல்கள் யாழ்.மண்ணில் மீண்டும் மீண்டும் தொடர்ச்சியாக, தொடர்கதையாக அரங்கேற்றப்படும் நிகழ்வின் மற்றுமோர் அங்கமாகும் இச்செயல்.

யாழ்ப்பாணத்தில் கடந்த காலங்களில் சில பத்திரிகையாளர்கள் மீதும் பத்திரிகை நிறுவனங்கள் மீதும் பல்கலைக்கழக மாணவர்கள், அரசியலாளர்கள் மீதும் தொடர் தாக்குதல் நடத்தப்பட்டு வரும் நிலையில் இப்பொழுது இறுதியாக வலம்புரி பத்திரிகையின் செய்தியாளர் மீது தங்கள் கைவரிசையை காட்டியுள்ளனர்.

உண்மையாகவும் நேர்மையாகவும் நீதி தவறாமல் நடுநிலையாக இயங்கும் ஊடக நிறுவனங்கள் மீதும் அதன் செய்தியாளர்கள், பணியாளர்கள் மீதும் தாக்குதலைத் தொடுப்போர் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும்.

நீங்கள் மானமுள்ளவர்கள் என்றால் மனிதநேயமும் அதன் பண்புகளும் உள்ளவர்கள் என்றால் உண்மைக்கும் நேர்மைக்கும் நீதிக்கும் சத்தியத்திற்கும் தர்மத்திற்கும் கட்டுப்பட்டு உங்கள் அடிமனதில் கொஞ்சமாவது மனச் சாட்சிக்கு இடம்இருக்குமென்றால் இத்தோடு உங்கள் வஞ்சகச் செயல்களை நிறுத்திவிடுங்கள்.

காட்டுமிராண்டித்தனத்தையே உங்கள் தொழிலாகக் கொண்ட நீங்கள் அதிலே நன்கு பரீட்சயப்பட்டு பழகிவிட்ட தொழிலை உங்களாலும் உங்களை வழிநடத்தும் மனநோயாளிகளாலும் எளிதில் விட்டுவிட முடியாதுதான். நீங்கள் யார்? எந்த இனத்தவர்? எந்த மதத்தவர்? ஏன் இத்தகைய மிலேச்சத்தனமான செயல்களை புரிகிறீர்கள்? உங்கள் கொலை வெறித்தனம் மக்கள் மீது ஏன் தொடர்கின் றது? உங்களை யாரும் கைது செய்வதில்லை. சட்டத்தின் முன் நிறுத்துவதுமில்லை. தண்டிப்பதுமில்லை.

உங்களுக்கென்று மட்டும் இந்த நாட்டில் காட்டுச் சட்டம் சுதந்திரமாக வழி விடுகின்றது. சர்வதேசமும் உங்களை கண்காணித்து வருகிறது. காலப்போக்கில் இதன் எதிர்விளைவுகளை நீங்கள் எதிர்கொள்ள நேரிடும் என அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.(அ)



யாழ்.செய்திகள்

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மேற்கு கட்டுடை அரசடி வீரகத்தி விநாயகர் ஆலய நந்தன வருட மஹோற்சவ விஞ்ஞாபனம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் திருவிழா இடம்பெறவுள்ளது.

10 ஆம் திருவிழாவான 21 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 8 மணிக்கு மஞ்சத் திருவிழாவும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கு கைலாச வாகனத் திருவிழாவும் 23 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 8 மணிக்கு சர்பத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.


மஹோற்சவ13 ஆம் திருவிழாவான 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்கு சப்பறத் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை தேர்த்திருவிழாவில் முற்பகல் 9 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று 10.30 மணிக்கு தேர் வீதியுலாவும் இடம்பெறும். 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும். இத்திருவிழாவில் தினமும் முற்பகல் 9 மணிக்கும் பிற்பகல் 5 மணிக்கும் பூசைகள் ஆரம்பமாகும் எனவும் வசந்தமண்டபப் பூசைகள் முற்பகல் 11 மணிக்கும் பிற்பகல் 7 மணிக்கும் நடைபெறும் எனவும் ஆலய தர்மகர்த்தா சபை அறிவித்துள்ளது. (அ-5)

## கல்வி முதுமாணி விரிவுரைகள் பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தேசிய கல்வியற் கல்லூரியில் நடத்தப்பட்டு வரும் தேசிய கல்வி நிறுவக கல்வி முதுமாணி விரிவுரைகள் ஏற்கனவே திட்டமிட்டபடி எதிர்வரும் 16, 17 ஆம் திகதிகளில் நடைபெறாது. அதற்கு பதிலாக எதிர்வரும் 23, 24 ஆம் திகதிகளில் விரிவுரைகள் நடைபெறுமென கல்வி முதுமாணி பட்டநெறியின் இணைப்பாளர் எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார். (அ)








காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் திறப்பு விழா நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜானதென்ன பண்டார மற்றும் பிரதியமைச்சர் ஆகியோர் இணைந்து பெயர்ப்பலகையை திரை நீக்கம் செய்து வைப்பதையும் இக்கிளையின் பதவிநிலை உத்தியோகத்தர் ஆர்.சிவசுவாமி நியமனம் பெறுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- எஸ்.குமார், எஸ்.ஆர்.கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறக்குமதி செய்யப்பட்ட பெற்றோல் தரமானது

## ஐஓசி நிறுவனம் தெரிவிப்பு

(கொழும்பு)

திருகோணமலை துறைமுகத்திற்கு தரம் குறைந்த பெற்றோல் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக வெளியான செய்தியில் உண்மை இல்லை என ஐஓசி மறுத்துள்ளது.

திருகோணமலை துறைமுகத்திற்கு ஐஓசி நிறுவனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட 16 ஆயிரம் மெட்ரிக் தொன் பெற்றோல் தரமற்றது என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன தொழிற்சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இது குறித்து பரிசோதனை நடாத்தப்படும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நேற்று முன்தினம் அறிவித்தது.

இந்த நிலையில் இன்று அறிக்கை ஒன்றை விடுத்துள்ள இலங்கை- இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனம் (LIOC) தரம் குறைந்த பெற்றோல் இறக்குமதி குற்றச்சாட்டை நிராகரித்துள்ளது.

பெற்றோல் இறக்குமதி செய்து அதன் தரம் குறித்து உறுதி செய்யப்பட்டதன் பின்னரே ஐஓசி அதனை விநியோகிக்கும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# இந்திய மீனவர்களின் அத்துமீறல் விரைவில் கட்டுப்படுத்தப்படும்

## கடற்படை தளபதி தெரிவிப்பு

இலங்கை கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைந்து மீன் பிடிக்காதவாறு தடை செய்வதற்கான நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ளவுள்ளதாக வடமாகாண கடற்படைக் கட்டளைத் தளபதி அட்மிரல் உடவத்த தெரிவித்துள்ளார்.

பொன்னாலை கடற்படை முகாமில் நடைபெற்ற கடற்றொழிலாளர் சங்க பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரைநிகழ்த்துகையில்,

இந்திய மீனவர்களின் அத்துமீறலை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வடபகுதி கடற்பரப்பில் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்கள் மீது இறுக்கமான நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

தற்போது இலங்கை கடற்பரப்பில் கடற்படையின் படகுகள் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. ரோந்து நடவடிக்கையின் பின்னர் இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடித்தல் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் அவர்கள் மீண்டும் இலங்கை கடற்பரப்பிற்குள் தொழிலுக்கு வராதபடி இலங்கை கடற்படையினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் வடமாகாண கடற்படைக் கட்டளைத் தளபதி மேலும் கூறினார். (அ-2)

# வட்டக்கச்சி மருத்துவமனை சீராக இயங்குவதில்லை

(புளியம்பொக்கணை)

வட்டக்கச்சி பொது மருத்துவமனை சீராக இயங்கவில்லை என நோயாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த 1985 ஆம் ஆண்டு தொடக்கம் இயங்கி வரும் இவ்வைத்தியசாலையை நம்பி பெருமளவான நோயாளர்கள் இருக்கின்ற நிலையில் சீராக இயங்காமையால் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. வாரத்தின் இரண்டு நாட்கள் அதுவும் மாலை வேளையிலேயே இங்கு மருத்துவ சேவை இடம்பெறுகின்றது.

ஏனைய நாட்கள் நோயாளர்கள் எங்கு சிகிச்சை பெறுவது என்ற ஏக்கத்துடன் இருக்கின்றனர். கிளிநொச்சி கிழக்கு பகுதியில் உள்ள வட்டக்கச்சி இராமநாதபுரம், மாயவனூர் ஆகிய கிராம மக்கள் இவ்வைத்தியசாலையையே நம்பி இருக்கின்றனர்.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்களும் நோயாளிகளும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-263)

# பிலிப்பைன்ஸ் பிரஜை வெட்டிக்கொலை

கொழும்பு துறைமுக பண்டாரநாயக்க பகுதியில் நங்கூரம் இடப்பட்டுள்ள தாய்வான் நாட்டுக்கு சொந்தமாக கப்பலில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த கப்பலில் இருந்த சேவையா ளர்கள் இடையே நேற்று அதிகாலை இம்மோதல் ஏற்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

மோதலில் 37 வயதுடைய பிரே பின் மெகலோன்ஸ் பொனியுஸ் என்ற பிலிப்பைன்ஸ் நாட்டு பிரஜை கொல்லப்பட்டுள்ளார்.

நீதவான் மரண விசாரணை களை ஆரம்பித்துள்ளார்.

இந்த மோதல் சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் 6 பிலிப்பைன்ஸ் பிரஜைகள் தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் குறித்து கொழும்பு பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (அ-2)


## ஆயுர்வேத வைத்தியர்கள், மக்களின் கவனத்திற்கு!



- நீங்கள் இளநரை, முடி உதிர்வு, வாதம், கை, கால் விறைப்பு, மூட்டுவலி, முதுகு வலி, இடுப்பு வலி என்பவற்றால் அவதிப் படுகின்றீர்களா?
- இந்நோய்களுக்குப் பலவழிமுறைகளிலும் தீர்வு தேடிச் சலித்து விட்டீர்களா?
- இந்நோய்களுக்கான தீர்வாக ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட தைலங்கள் எம்மிடம் உண்டு

## ஆயுர்வேத வைத்தியர்களின் கவனத்திற்கு



- எம்மிடம் நீரிழிவு, கொலஸ்ரோல், இரத்த அழுத்தம், நரம்புத் தளர்ச்சி, சளி, வறட்டு இருமல் போன்ற பல வகை நோய்களுக்குரிய அரிஷ்ட ஆசவங்கள், குவாதங்கள், சூரணங்கள், சிரப் வகைகளை மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

**நீங்கள் நாட வேண்டிய இடம்**

சிவா நறுமணப் பூங்கா
இல - 288, ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்.
தொ.பேசி - 021 222 2567

(சு/2653)


## துமிந்த சில்வா குணமடைய மூன்று வருடங்கள் தேவை

நாடாளுமன்றஉறுப்பினர் துமிந்த சில்வா குணமடைவதற்கு இன்னும் இரண்டு தொடக்கம் மூன்று வருடங்கள் தேவைப்படும் என அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் நேற்றையதினம் அறிவித்தனர்.

இதனால் இவருக்கு பிணை வழங்குவதற்கான விண்ணப்பத்தினை சட்டமா அதிபர் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும் என நீதிமன்றம் தெரிவித்தது. (அ-2)


## பிறந்த நாள் வாழ்த்துக்கள்





எமது அன்புச் செல்வம்
செல்வன்
சிவபரன்
கிருத்திகன்
அவர்கள்
தனது 3 ஆவது
பிறந்த தினத்தை
தனது இல்லத்தில் 12.03.2013
இன்று வெகுசிறப்பாக
கொண்டாடுகிறார். அவரை
பல்லாண்டு காலம் வெகு
சிறப்பாக வாழ மல்லாகம்
வீரபத்திரர்
அருளாசியுடன் அன்புடன்
வாழ்த்தும் உள்ளங்கள்.



அப்பா சிவபாலன் மற்றும் உறவினர்கள்.

(2652)



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூராடம் 2<br>7 இல் செவ்<br>உயரம்: 5' 4"<br>தகைமை/தொழில்: BA, Teacher<br>தொ.இ: B -1401 | பிறப்பு: 1985 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அனுஷம் 4<br>உயரம்: 5'<br>12 இல் செவ்<br>தகைமை/ தொழில்: Accountant (Denmark-PR)<br>தொ.இ: G -1402 |
| பிறப்பு: 1982 Non RC<br>உயரம்: 5' 4"<br>தகைமை/தொழில்: B.Com, MBA. உதவிமுகாமையாளர்<br>தொ.இ: B -1395 | பிறப்பு: 1981 இந்து குருகுலம்<br>நட்சத்திரம்: திருவோணம் 3<br>உயரம்: 5'<br>கி.பா: 60, 2இல், சூரியன். செவ்,<br>தகைமை/ தொழில்: தேசிய டிப்ளோமா (ஆசிரியை)<br>தொ.இ: G-1310 |
| பிறப்பு: 1980 இந்து குருகுலம்<br>நட்சத்திரம்: பரணி 2<br>தகைமை/ தொழில்: O/L, பெயின்ரர்<br>தொ.இ: B -1396 | பிறப்பு: 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்தராடம் 1<br>கி.பா: 32, 12 இல் செவ்<br>உயரம்: 5' 2"<br>தகைமை/ தொழில்: BA, Teacher<br>தொ.இ: G -1406 |
| பிறப்பு: 1976 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மூலம் 4<br>உயரம்: 6' 2"<br>கி.பா: 41.25, 7இல் செவ்<br>தகைமை/தொழில்: Computer Electronic Engineer<br>தொ.இ: B -1400 | பிறப்பு: 1986 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சதயம் 1<br>உயரம்:- 5' 5"<br>கி.பா: 15 12 இல் செவ்<br>தகைமை/ தொழில்: A/L, வங்கி முகாமைத்துவம், வங்கியாளர்<br>தொ.இ: G -1407 |

சகல தொடர்புகளுக்கும்:-

**கல்யாண மாலை**


(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நினைவாற்றலின் இரகசியம்



நம்மில் பலருக்கு ஞாபகமறதி என்பது பெரும் பிரச்சினை. வாங்கிய கடனை மறக்கும் போது நமக்கு உதவும் ஞாபக மறதி, கொடுத்த கடனை மறக்கும் போது நம்மைப் பழிதீர்த்துக் கொள்கிறது. மனிதனின் ஞாபகசக்தியின் மூலத்தை அறிய உலகெங்கிலும் பல விஞ்ஞானிகள் முயன்று வந்தார்கள். இதில் வெற்றி பெற்றவர் கலிபோர்னியா பல்கலைக் கழக விஞ்ஞானி கேரிலின்ச்.

மூளையிலுள்ள கால்பெய்ன் என்ற நொதியே நீண்ட கால நினைவாற்றலுக்குக் காரணமாக இருக்கிறது. நாம் ஒரு பொருளைப் பார்க்கும் போதோ ஒரு விடயத்தைக் கேட்கும் போதோ ஏற்படுகின்ற உணர்ச்சிகளை மூளை பெற்றவுடன் அங்குள்ள புரதப் பொருட்கள் சிதைவடைகின்றன.

இதனால் உண்டாகும் இரசா




யன மாற்றம் புதுப்புது தொடர்புகளை ஏற்படுத்துகிறது. இதற்கு மூலகாரணமாக அமைவது கால்பெய்ன் ஆகும்.

ஒருவரின் பெயரையோ அல்லது பாடப் பகுதியையோ தொடர்ந்து சில நாட்களுக்குச் சொல்லிக் கொண்டே வந்தால் 20 ஆண்டுகள் கழித்தும் நினைவில் வைத்துக் கொள்ளக் கூடிய ஆற்றலை கால்பெய்ன் அளித்து விடுகிறது.

எலியின் மூளையிலுள்ள கால்பெய்னை ஊக்குவிக்கும் போது அதன் நினைவாற்றலில் மாறுபாடு ஏற்படுவதை கேரின்ச் கண்டு பிடித்தார்.

மின் தூண்டல் முறையில் கால்பெய்ன் நொதியை ஊக்குவிப்பதன் மூலம் மனிதனுடைய நினைவாற்றலையும் மாற்றியமைக்கலாம் என கேரிலின்ச் தெரிவித்துள்ளார்.

# உணவு வகையிலும் சார்ந்திருக்கும் கண்பார்வைத் திறன்



பொதுவாக உடல் ஆரோக்கியத்திற்கு காய்கறிகள் மிக முக்கியம். அதனால் தான் மருத்துவர்கள் உணவில் அதிக அளவில் பச்சை காய்கறிகளை சேர்த்துக் கொள்ள வேண்டும் என மருத்துவர்கள் அறிவுறுத்துகின்றனர். நம் அன்றாடம் உண்ணும் உணவிலேயே கண்களைப் பாதுகாக்கும் காய்கறிகளை சாப்பிட வேண்டும்.

பச்சை காய்கறிகளில் விற்றமின் ஏ மற்றும் விற்றமின் சி யும் இரும்பு மற்றும் கல்சியம் சத்துக்களின் முதன்மை ஆதாரங்களும் அடங்கி உள்ளன.

இவை கண்களுக்கு மிகவும் நல்லது. தினமும் ஏதாவது ஒரு கீரை வகை சேர்ப்பது உடல் நலத்துக்கு ஏற்றதாகும். குறைந்த பட்சம் வாரத்திற்கு இரண்டு தடையாவது கீரை சேர்க்க வேண்டும்.

அகத்திக் கீரை, பசலைக் கீரை, முருங்கை, முளக்கீரை, அரக்கீரை, வெந்தயக் கீரை ஆகிய கீரைகளில் இரும்பு போலிக் ஆசிட் மற்றும் விற்றமின் பி ஆகிய சத்துக்கள் அடங்கியிருப்பதால் இவற்றை அதிகம் சேர்த்துக் கொள்வது நல்லது.

பச்சைக் காய்கறிகளுடன் சாலட் மற்றும் எலுமிச்சை கண்பார்வையை பெரிதும் கூர்மையாக்குகிறது. விற்ற மின் ஏயில் கண்ணையும்மூளையையும் இணைக்கும் முக்கிய சத்து அடங்கியுள்ளது.

கண் விழித்திரையிலுள்ள ரொடெர்ப்சின் என்ற புரதத்தில் விற்றமின் ஏ உள்ளது. பார்வையில் இது முக்கிய பங்கு வகிக்கிறது. விற்றமின் ஏ சத்து பற்றாக்குறையால் முதலில் தோன்றும் அறிகுறி மாலைக் கண் நோய் ஆகும்.

கரட்டில் அதிகமான விற்றமின் ஏ உள்ளது. விற்றமின் ஏ யாக நம் உடலில் மாற்றம் அடையும் பீற்றா கரோற்றின் மற்றும் அதிநிற பழங்களிலும் பச்சைக் காய்கறிகளிலும் விற்றமின் ஏ உள்ளது.

கறிவேப்பிலை, கரட் கண்களை பாதுகாப்பதில் முக்கிய பங்காற்றுகிறது. இவை இரண்டும் கண்களின் காவலனாக விளங்குகிறது.

உடலில் அதிகமாக சுரக்கும் குளுக்கோசுவினால் கண்வில்லை சேதமடைவதிலிருந்து புரத அமிலங்கள் நம்மை காக்கின்றன.

இறைச்சி, மீன் மற்றும் பாலில் நமக்குத் தேவையான 8 முக்கிய அமினோ அமிலங்கள் உள்ளன. அரிசி, பட்டாணி, பீன்ஸ், அவரை, மொச்சை, துவரை, உளுந்து, பயறு போன்றவற்றில் இறைச்சியில் உள்ள அளவுக்கு அமினோ அமிலங்கள் உள்ளன.

இவற்றை அளவுள்ள முறையில் பயன்படுத்துவதன் மூலம் எமது கண்பார்வையை சிறப்புற அமைக்கலாம். எப்படியாயினும் மருத்துவர் ஒருவரின் நேரடி ஆலோசனை பெற்று மேற்படி உணவுகளை உள்ளெடுப்பதே எமது ஆரோக்கியத்திற்கு சிறந்ததாகும்.




# உள்ளூ. மன்றங்களை வட்டார ரீதியாக பிரிக்க நிர்ணயக்குழு நியமனம்

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களை வட்டார ரீதியாக பிரித்து எல்லைகளை நிர்ணயம் செய்வதற்காக குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது.

வவுனியா நகரசபை, வவுனியா வடக்கு பிரதேசசபை, வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேசசபை, வவுனியா தெற்கு சிங்களப் பிரதேச சபை, வெங்கலட்செட்டிகுள பிரதேச சபை ஆகிய ஐந்து உள்ளூராட்சி மன்றங்களை வட்டார ரீதியில் பிரித்து எல்லைகள் நிர்ணயம் செய்யப்படவுள்ளன. இக்குழுவினை உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல். எம். அதாவுல்லா நியமித்துள்ளார்.

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் எம்.கே. பந்துல ஹரிச்சந்திர, உதவி தேர்தல் ஆணையாளர் ஏ.எஸ். கருணாநிதி, சிங்களப் பிரதேச செயலர் எஸ்.ஜானக, சிரேஷ்ட நில அளவை உத்தியோகத்தர் பி.சிவதாஸ், புள்ளி விபர உத்தியோகத்தர் எம். தியாகலிங்கம், வவுனியா உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கே. உதயராசா முதலானவர்கள் இக்குழுவில் இடம் பெறு வதோடு இக்குழு எல்லை நிர்ணயம் தொடர்பான எல்லைத் திட்டங்களை ஆரம்பித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களை வட்டார ரீதியாக பிரித்து எல்லைகளை நிர்ணயம் செய்வதற்காக குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது.

துணுக்காய் பிரதேச சபை, மாந்தை கிழக்கு பிரதேசசபை, கரைதுறைப்பற்று பிரதேசசபை, புதுக்குடியிருப்பு பிரதேசசபை ஆகிய நான்கு உள்ளூராட்சி மன்றங்களை வட்டார ரீதியில் பிரித்து எல்லைகள் நிர்ணயம் செய்யப்படவுள்ளன. இக்குழுவினை உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஏ. எல். எம். அதாவுல்லா நியமித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் நா. வேதநாயகன், உதவி தேர்தல் ஆணையாளர் ஏ.எஸ். கருணாநிதி, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ந.பிரபாகரன், சிரேஷ்ட நில அளவை உத்தியோகத்தர் பி.சிவதாஸ், புள்ளிவிபர உத்தியோகத்தர் என். கெங்காதரன், சுகாதார திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் செய்யது முகமது ஜவாட் முதலானவர்கள் இக்குழுவில் இடம்பெறுவதோடு இக்குழு எல்லை நிர்ணயம் தொடர்பான எல்லைத் திட்டங்களை ஆரம்பித்துள்ளது.

(அ-2-250)

# அடிப்படை வசதிகளின்றி நாயாறு கிராம மக்கள்

முல்லைத்தீவு மாவட்ட செம்மலை கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள நாயாறு கிராமமக்கள் அடிப்படை வசதிகள் எதுவும் இன்றி அல்லற்படுவதாக கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த 2011 ஆம் ஆண்டு மீள் குடியேற்றம் செய்யப்பட்ட மேற்குறித்த கிராமத்தில் 72 குடும்பங்கள் வாழ்ந்துவரும் நிலையில் அடிப்படை வசதிகள் எதுவும் இன்றி அல்லற்படுகின்றனர்.

போரினால் அனைவரையும் இழந்து ஒரு அங்கத்தவரைக் கொண்ட 10 குடும்பங்கள் வாழ்ந்துவரும் நிலையில் இவர்கள் வாழ்வாதாரத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு முடியாது அல்லற்படுகின்றனர்.

நன்னீர் மீன்பிடி உபகரணங்கள் 13 குடும்பங்களுக்கு மட்டும் வழங்கப்பட்டுள்ளது. இங்கு 35 குடும்ப நிரந்தர வீடுகள் இன்றி கஷ்டமடைகின்றனர்.

பெண்களைத் தலைமைத்துவமாகக்கொண்ட 15 குடும்பங்கள் வாழ்ந்துவரும் நிலையில் இவர்களுக்கான உதவிகள் எவையும் வழங்கப்படவில்லை.

கணவனால் கைவிடப்பட்ட 2 குடும்பங்கள் வாழ்ந்து வரும் நிலையில் மிகவும் கஷ்ட நிலையை எதிர் கொண்டு வருகின்றனர்.

போரினால் பாதிக்கப்பட்ட 8 குடும்பங்களின் வீடுகள் திருத்தப்படாது உள்ளதால் மழை காலங்களில் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இங்கு அதிகமாக மீனவக் குடும்பங்களே வாழ்ந்து வருகின்றனர்.

இங்கு மின்சார வசதிகள் இன்றி மின்சாரத்தின் ஊடாக செயற்படுத்தப்படும் எந்தவித வேலைகளையும் முன்னெடுக்கமுடியாத நிலை காணப்படுகின்றது. 14 குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகள்கூட இல்லாது அல்லற்படுகின்றனர்.

இக்கிராமத்தில் உள்ள 7 வீதிகள் குன்றும்குழியுமாக உள்ளதால் போக்குவரத்து செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது மாற்றுத் திறனாளிகளைக் கொண்ட 7 குடும்பங்கள் உள்ள நிலையில் அவர்களுக்கு ஒருவரும் உதவ முன்வரவில்லை.

எனவே உரிய தரப்பினர் இதனைக்கருத்திற்கொண்டு தமக்கு உதவி வாழ்வில் ஒளியூட்ட முன்வரவேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.


(அ-3-267)






யாழ். கோண்டாவில் இந்து மகா வித்தியாலய ஆரம்ப பிரிவும் ஊட்டம் பாடசாலையான யா/ கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலையும் இணைந்து நடத்தும் ஆரம்பப்பிரிவு விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினரின் பாரியார் வெற்றி பெற்ற மாணவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





வடமாகாண கல்வி திணைக் களத்தின் ஏற்பாட்டில் ஆலோ சனை வழிகாட்டல் திட்டமிடல் செயலமர்வு அண்மையில் நடைபெற்றது. இதன் போது வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் முத்து இராதா கிருஸ்ணன் உரையாற்று வதையும் அருகில் யுனிசெப் நிறுவன அதிகாரி அமர்ந்திருப் பதையும் கலந்து கொண்டவ ர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பூந்தோட்டச் செய்தியாளர்)

# இலங்கை கடற்படையின் தாக்குதலை நிறுத்த ஹெலிகொப்டரில் கடல் ரோந்து நடவடிக்கை

## அமைச்சர் நாராயணசாமி தெரிவிப்பு

தமிழக மீனவர்களுக்கு பாது காப்பு அளிக்கும் வகையில் இந்திய- இலங்கை கடல் எல்லைப் பகுதியில் கடற்படையினரின் ரோந்து நடமா ட்டத்தை அதிகரிப்பதுடன் உலங்கு வானூர்தி மூலமும் நமது கடற்பகு தியில் ரோந்து பணியை மேற்கொ ள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என மத்திய அமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

காரைக்காலில் நிருபர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்தொடர்ந்துதெரிவிக்கையில்,

கடந்த சில தினங்களாக காரைக் கால் மீனவர்கள் இலங்கை கடற்ப டையினரால் தாக்கப்படும் சம்பவங் கள் நடைபெற்று வருகிறது. தமிழக மற்றும் காரைக்கால் மீன்வர்களை பாதுகாக்க இந்திய அரசு பலமுறை இலங்கை அரசுடன் பேசியுள்ளது.

ஆனாலும் இலங்கை அரசு அத ற்கு செவி சாய்க்காமல் அராஜக போக்குடன் நடந்து வருவது கண்ட னத்திற்குரியது. தமிழக காரைக் கால் மீனவர்களை பாதுகாக்க நமது கடற்பகுதியில் ரோந்து பணியை அதிகப்படுத்த வேண்டும். நமது மீன வர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் இந்திய- இலங்கை கடல் எல்லை பகுதியில் நமது கடற்படை யினரின் ரோந்து நடமாட்டத்தை அதிகரிக்க வேண்டும்.

மேலும் உலங்குவானூர்தி மூல மும் நமது கடற்பகுதியில் ரோந்து பணியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழகம் மற்றும் காரைக்கால் மீனவர்கள் தாக்கப்படுவதை தடுத்து நிறுத்தும் வகையில் இந்திய மீனவ சமுதாய தலைவர்கள் மற்றும் இல ங்கை மீனவ சமுதாயத் தலைவர்க ளும் சந்தித்து பேசி ஒரு ஒப்பந்த அடிப்படையில் வழி காண இலங்கை அரசை இந்திய அரசு கேட்டுக் கொண் டது. ஆனால் அதற்கு இலங்கை அரசு செவிசாய்க்காமல் இருந்து வந்தது.

இந்நிலையில் மத்திய அரசிட மிருந்து தமிழக தலைமைச் செய லருக்கு ஒரு கடிதம் அனுப்பப் ப ட்டது. அதில் இலங்கை மீனவர்கள் தமிழக மீனவ சமுதாயத்தினரை சந் தித்து பேசதயாராக உள்ளனர். எனவே அதற்கு தமிழக அரசு பூரண ஒத்து ழைப்பு தர வேண்டும். சுமுகமான சூழ் நிலையைஉருவாக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டி ருந்தது. ஆனால் தமிழக அரசு பதிலளிக் கவில்லை என்று தெரிவித்துள்ளார்.

மேலும் கடந்த 2009 ஆம் ஆண்டு இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவ த்தினருக்கும் இடையே நடைபெற்ற இறுதிக்கட்ட போரில் ஏராளமான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். இதற்காக இலங்கை அரசு மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐ.நா. சபையில் கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பு அமெரிக் காவால் தீர்மானம் கொண்டு வரப் பட்டது.

அப்பொழுது இலங்கை அரசை கண்டித்து இந்தியா வாக்களித்தது. தற்பொழுது அதில் மீதி உள்ள ஷரத் துகளை நிறைவேற்ற வேண்டும் என்று கோரிக்கை வைத்து மற்றொரு தீர்மானம் நேற்று முன்தினம் தாக் கல் செய்யப்பட்டுள்ளது.

ஐ.நா. சபை யில் அதன் மீதான விவாதம் நடத்தப்படும். அந்த விவாதத்தின் போது இந்தியா தனது முடிவை எடுக்கும் என்று தெரிவித் துள்ளார். (அ-5)

## மஹோற்சவம்

வவுனியாவில் கோவில்குளம் அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் திருக்கோவி லின் வருடாந்த மகோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதி னேழு நாட்கள் இடம்பெறும்.

எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயி ற்றுக்கிழமை சப்பரத்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை தேர் திருவிழாவும் நடைபெறும். எதிர்வரும் 26 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

மகோற்சவ கிரியைகளை ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ ரகுநாத கமலேஸ் வரக் குருக்கள்நடாத்துவார்.(அ-2-250)

# கனேடிய தமிழருக்கு எதிரான நடவடிக்கையை கைவிடுங்கள்

## அமெரிக்காவிடம் இலங்கை கோரிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளு க்காகநிதிசேகரித்தல், ஆயுதம்கொள் வனவு செய்தல் போன்ற குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள கனே டிய தமிழருக்கு எதிராக மேற் கொள் ளப்படும் சட்ட நடவடிக்கையை கைவி டுமாறு அமெரிக்காவிடம் இலங்கை அரசாங்கம் கேட்டுக் கொண்டுள் ளதாக கனடாவின் நசனல் போஸ்ட் நாளேடு தெரிவித்துள்ளது.

கனேடியத் தமிழர் மீது தீவிர வாத குற்றச்சாட்டின் மீது மேற்கொள் ளப்படும் சட்ட நடவடிக்கைகள் குறி த்து கவலை தெரிவித்து இலங்கை அரசாங்கம் அமெரிக்க இராஜாங் கத் திணைக்களத்துக்கு அசாதா ரணமான இந்த வேண்டுகோள் கடிதத்தை அனுப்பியுள்ளது.

கடந்த வாரம் குறித்த கனேடிய தமிழர் பிணையில் விடுவிக்கக் கோ ரும் மனு நியூயோர்க் மாவட்ட நீதி மன்றத்தில் விசாரணைக்கு வந்த போதே அவருக்கு எதிரான குற்றச் சாட்டுக்களை கைவிடக் கோரி அமெ ரிக்காவுக்கு இலங்கை எழுதிய கடி தம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

எனினும் இதனை அடிப்படை யாக வைத்து அவரது சார்பில் கோர ப்பட்ட பிணைக்கு நீதிபதி அனுமதி மறுத்துவிட்டார். லோட்டர்லு பல்க லைக்கழகத்தில் பொறியியல் பட்டம் பெற்ற இவர் விடுதலைப் புலிகளு க்காக அமெரிக்க வங்கிகள் ஊடாக 13 ஆயிரம் டொலர் நிதி சேகரித்த தாகவும் இரவுப் பார்வை கருவிகள், இலத்திரனியல் கருவிகள், நீர் மூழ்கி வடிவமைப்பு மென்பொருட்கள்ள வாங்க முயன்றதாகவும் அமெரிக்க சட்டவாளர்களால் குற்றம் சாட்டப் பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# பொருட்களின் விலையேற்றம் உலகிற்கே ஆச்சரியம்தான்

## கயந்த எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

மின்வலு மற்றும் எரிசக்தி அமை ச்சர் பவித்திரா வன்னியாராச்சி மின் கட்டணம் உயராது என கூறுகின்ற போதும் அரசாங்கம் மின் மற்றும் பஸ் கட்டணங்களை அதிகரிக்க தயா ராவதாக ஐ.தே.க. ஊடகப் பேச் சாளர் பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக தெரிவித்துள் ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெ ற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய போதே அவர் இவ் வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த் துகையில்,

அநாவசிய பொருட்களுக்கு வரி அறவிட்டு அத்தியாவசிய பொரு ட்களின் விலையை உயர்த்தி அபி விருத்தி எனும் எண்ணத்தை தோற் றுவித்துமக்களை கஷ்டத்தில் தள் ளும் அரசாங்கம் ஆசியாவின் ஆச் சரியத்தை நோக்கியல்லாது உல கின் ஆச்சரியத்தை நோக்கிச் செல் கிறது. மின் கட்டண அதிகரிப்பு குறி த்து பெறப்படும் மக்கள் கருத்தின் முடிவை எதிர்காலத்தில் வெளியிட வேண்டும் என்றும் மின் கட்டண அதிகரிப்புக்கு மக்கள் ஒருபோதும் இணங்கமாட்டார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

மக்களை கஷ்டத்தில் வீழ்த்தாது மத்தல மற்றும் அம்பாந்தோட்டை அபிவிருத்திகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் ஐ.தே.க ஆட்சி காலத்தில் அபிவிருத்தியோடு மக் கள் கஷ்டத்தில் தள்ளப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

## நம்பிக்கை கொள்வோம்; தயாராக இருப்போம்



முப்பத்தெட்டு ஆண்டுகளாய் உடல்நலமற்றிருந்த ஒருவரும் அங்கு இருந்தார். இயேசு அவரைக் கண்டு நெடுங்காலமாக அவர் அந்நிலையில் இருந் துள்ளதை அறிந்து நலம் பெற விரும்புகிறீரா? என்று அவரிடம் கேட்டார். எழுந்து உம்முடைய படுக்கையை எடுத்துக் கொண்டு நடந்து செல்லும் என்று இயேசுகூறும் வேதாகமப் பகுதி இன்று நமக்கு தரப்படுகின்றது.

பல வகையில் நோயுற்றோர் அனைவரும் இயேசுவைத் தேடி வந்து தங்களைக் குணப்படுத்துமாறு கேட்டுக் கொண்டார்கள் என வேதாகமப் பகுதியில் பல இடங்களில் வாசிக்கின்றோம். ஆனால் இந்நற்செய்தி பகுதியில் 38 ஆண்டுகளாய் உடல் நலம் குன்றி யிருந்தவரை இயேசு கண்டு நலம் பெற விரும்புகிறீரா என்று கேட்கிறார்.

வாழ்நாளில் பெரும் பகுதியை நோயினால் இழந்துவிட்ட மனிதரும் நிறை வாழ்வு வாழ வேண்டுமென்பது இயேசுவின் விருப்பம்.

நலமற்ற மனிதரிடம் நலம்பெறவேண்டும் என்னும் விருப்பம், ஆர்வம், அதற்கேற்ற நம்பிக்கை இருக்கிறதா என்று சோதித்துப் பார்த்த பின்னரே அந்த மனி தரைக் குணமாக்க இயேசு முன்வருகிறார். நலம் பெற விரும் புகிறீரா? என்று அந்த மனிதரிடம் கேட்டு அவருடைய விருப்பத்தையும்நம்பிக் கையையும் அறிந்தபின்னரே அவரைக்குணப்படுத்துகிறார்.

இத் தவக்காலத்தில் நாம் நலம் பெற விரும்பும் விரும்புகிறோமோ, மனமாற்றமடைய விரும்புகி றோமோ என்று நம்மையே கேட்டுக்கொள்வோம்.மனமாற்றத்திற்கான அடிப்படை ஆர்வமோ,விருப்பமோ இல்லா விட்டால் மனமாற்றத்தை இறைவன் எப்படித் தருவார்? நாம் விரும்புவோம் நம் விருப்பத்தை அறிக்கை இடுவோம். சில சமயங்களில் ஆண்டாண்டாக துன்பம் நம்மைத் தொடர்ந்து வரலாம். ஆம், முப்பத்தெட்டு ஆண்டுகள் அடுத்தவனோடு போட்டி போடவும் நமக்கு துணிவு, திறமை, வசதி இல்லாமல் இருக்கலாம். நல்லவர்கள் நான்குபேர் நமக்கு உதவி செய்ய முன்வராமல் இருக்கலாம். கவலைப்பட வேண்டாம். மனம் சோர்ந்து போக வேண்டாம். தெய்வம் நம்மைத் தேடி வரும். அந்த நேரத்திற்கு தயாராக இருப்போம். கடவுள் எம்மிடம் நலம் பெற விரும் புகிறீரா? என்று கேட்கும் போது எம் உடலும் உள்ளமும் தயாராக இருக் கட்டும். இயேசு நமக்குத் எல்லாம் தருவார். நம்பிக்கை கொள்வோம். தயாராக இருப்போம்.

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க
சுதந்திர பத்திரிகையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

395

## யாருடைய தவறு?



திரஞ்சனபுரத்தில் வசித்துவந்த முரளிக்கு வாழ்க்கையில் திடீரென அடித்தது யோகம்! வாரிசில்லாத அவன் தாய்மாமன் தன் சொத்துக்களை அவன் பெயருக்கு எழுதி வைத்துவிட்டு இறந்துபோனார்.

திடீரென இலட்சாதிபதியான முரளியை நண்பர்களும் உறவினர்களும் மொய்த்தனர். அவர்கள் அனைவரையும் விட அவனை மிகவும் கவர்ந்தது சந்தீப் என்ற நகர்ப்புறத்து புதிய நண்பன்! சர்க்கரையாகப் பேசி முரளியை அவன் மயக்க அவன் வார்த்தைகளை முரளி வேதவாக்காக எடுத்துக்கொள்ள ஆரம்பித்தான்.

தன் புதிய நண்பனின் ஆலோசனைப்படி முரளி வியாபாரத்தில் இறங்கினான். சந்தீப்பைத் தன் கூட்டாளி ஆக்கினான். சந்தீப் நகரத்தில் அமர்ந்து முரளியின் வியாபாரத்தைக் கவனிக்க முரளி சந்தீப் கேட்டபோதெல்லாம் வியாபாரத்திற்கு முதலீடாகப் பணம் கொடுத்துக்கொண்டேயிருந்தான். ஆரம்பத்திலேயே அவன் வியாபாரம் அமோகமாக நடந்து அவ


## அம்புலிமாமா கதைகள்

னுக்கு ஏராளமாக இலாபம் கிடைத்தது. உடனே சந்தீப் மேலும் பெரிய தொகையாக வியாபாரத்தில் முதலீடு செய்து வியாபாரத்தைப் பெருக்குமாறு ஆலோசனை கூற முரளி உடனே ஓரளவு நிலத்தை மட்டும் வைத்துவிட்டு மிச்சம் மீதி எல்லாவற்றையும் வியாபாரத்தில் முதலீடு செய்தபின் தானும் வீடு வாங்கிக்கொண்டு மனைவி, பிள்ளைகளுடன் நகரத்தில் தங்கினான். சில மாதங்கள் கழிந்தன.

திடீரென சந்தீப் ஒருநாள் வியாபாரத்தில் சிறிதளவு நட்டம் ஏற்பட்டதாகச் சொன்னவன் இதெல்லாம் வியாபாரத்தில் சாதாரணம் அப்பா! நீ எதற்கும் பயப்படாதே! இன்னும் கொஞ்சம் சிறிது முதலீடு செய்! எல்லாம் சரியாகி விடும் என்று தைரியமூட்டினான்.

இன்னும் சில மாதங்கள் சென்றன. மேலும் கணிசமான அளவில் நட்டம் ஏற்பட்டது.

வியாபாரம் ஒரேயடியாகப் படுத்துவிட்டதாக சந்தீப் அறிவித்தான். வழக்கப்படி சந்தீப் இன்னும் ஒரே வருடத்தில் இலாபத்தைப் புரட்டிவிடலாம் என்று ஆறுதல் கூறினான். ஆனால் முரளி முற்றுமாக நம்பிக்கை இழந்தான். இனியும் வியாபாரம் தேவையில்லை



என்று முடிவெடுத்து கிராமத்துக்குப் போய் மீண்டும் விவசாயம் செய்ய ஆரம்பித்தான்.

நாட்கள் சென்றன. நகரத்தில் இருந்து அவன் கிராமத்துக்கு வந்த சிலர் அவனைத்தேடிவந்து சந்தீப் அவனை நன்றாக ஏமாற்றிவிட்டான் என்றும் பொய்க்கணக்கு காண்பித்து நட்டம் ஏற்பட்டதாக பொய் சொல்லி பணத்தைச் சந்தீப்பே சுருட்டிக்கொண்டான் என்றும் புட்டுப் புட்டு வைத்தனர். உடனே நகரத்திற்குச் சென்று விசாரித்த போது சந்தீப்பின் வண்டவாளம் தண்டவாளம் ஏறியது. ஆரம்பத்தில் இலாபம் ஏற்பட்டது போல காட் டிய சந்தீப் பின்னர் மொத்தமாக பணத்தைச் சுருட்டுவதற்காகப் போட்ட திட்டம் அது என்றும் தொடக்கத்தில் இருந்தே அவன் தன்னை ஏமாற்றி இருக்கிறான் என்றும் புரிந்தது. தவிர பெரிய நட்டம் ஏற்பட்டு விட்டதாக பொய் சொல்லி இருக்கிறான் என்றும் நட்டமே ஏற்படவில்லை என்றும் தெரிந்தது. நேரடியாகவே சந்தீப்பை சந்தித்து அவன் மோசடியைப் பற்றிக் கேட்கப் போனான். முரளியைக் கண்டதும் கூழைக்கும்பிடு போட்ட சந்தீப் அவனுக்கு ராஜோபசாரம் செய்தான். முரளி தன் வியாபாரத்தில் பெரிய நட்டம் ஏற்பட்டதாக சந்தீப் சொன்ன பொய்யைப் பற்றி விசாரிக்க உடனே சந்தீப் அப்போது நட்டம் ஏற்பட்டதும் உண்மை! இப்போது நான் உன் வியாபாரத்தை நடத்தும்போது இலாபம் வருவதும் உண்மை! வியாபாரத்தில் இதெல்லாம் சாதாரணம் அப்பா என்று சப்பைக்கட கட்டுக் கட்டினான். அப்படியா! வியாபார இலாப நட்டம் கணக்குகளைக் காட்டுவாயா? என்று முரளி கேட்க நீ என்றைக்காவது கணக்கு வழக்குகளைப் பார்த்து இருக்கிறாயோ? திடீரென்று இன்று வந்து கேட்டால் நான் எப்படிக் காட்டுவேன்? பழைய கணக்குகளையெல்லாம் தூக்கி வீசிவிட்டேன் என்று அலட்சியமாகப் பதில் சொன்னான் சந்தீப். அப்படியே இடி விழுந்தது போல் ஆனான் முரளி. தன்னை சந்தீப் முழுமை



யாக ஏமாற்றி விட்டதை அறிந்து உடலில் தீப்பற்றியது போல் எரிச்சல் உண்டாகியது. உடனே தான் சந்திப்பவர்கள் அனைவரிடமும் தன் நண்பனின் துரோகத்தைச் சொல்லிச் சொல்லிப் புலம்பத் தொடங்கினான்.

அவ்வாறு ஊர் முழுவதும் அவன் சந்தீப் பற்றி பிரசாரம் செய்து வந்தபோது ஒருநாள் அவனது





பால்ய நண்பன் ராமனை சந்தி க்க நேரிட்டது. ராமனிடமும் சந்தீப் தன்னை ஏமாற்றியதைச் சொல்லிப் புலம்ப ராமன் தவறு முழுவதும் நீ செய்திருக்கும்போது சந்தீப்பை ஏன் குறை சொல்கிறாய்? என்று கேட்க முரளி திடுக்கிட்டான். தன் நண்பன் [illegible] புரிந்து பேசாமல் சந்தீப்பை ஆதரித்தது அவனுக்குப் புரியவில்லை.

ராமன் தொடர்ந்து தானே விளக்கம் அளித்தான். வியாபாரம் தொடங்கிய நாட்களிலிருந்து நீ ஒரு முறைகூட சந்தீப்பைக் கணக்கு வழக்குகளைப் பற்றிக் கேட்டது இல்லை அது ஏன் என்றான். நான் அவனை நம்பினேன். அதனால் கேட்கவில்லை என்றான் முரளி. உண்மை அது இல்லை. உனக்கு அவனைக் கேட்க தயக் கம். எல்லாம் சரியாக இருக்கும் என்ற அலட்சியப் போக்கு. வியாபாரம் உன்னுடைய முதலீட்டில் தொடங்கியது என்றால் கணக்கு வழக்குகளை கேட்பது உன் உரிமை. உனக்கு அதற்குப் பூரண அதிகாரம் உண்டு. ஆனால் நீ சந்தீப் உன்னை தவறாக நினைப்பானோ என்று கணக்கு கேட்கவே தயங்கினாய் என்பதுதான் உண்மை. உன் உரிமையை, அதிகாரத்தைப் பயன்படுத்தத் தவறினாய். அது முதல்தவறு.

பின்பு சந்தீப் என்னை ஏமாற்றிவிட்டான் என்று ஊர் முழுக்க டமாரம் அடித்தாய். அதிலிருந்து உனக்கு சாமர்த்தியம் இல்லை. சொந்த வியாபாரத்தில் பொறுப்பு இல்லை என்றுதான் ஊரார் கருதுவர். உண்மையாக வியாபாரம் செய்ய விரும்புபவன் உன்னைப் போல் ஏமாளியோடு கூட்டாளியாக சேரமாட்டான். ஏய்த்துப் பிழைப்பவன். உன்னைப் பசப்பு வார்த்தைகள் கூறி மறு படியும் வியாபாரத்தில் ஈடுபடுத்தி உன் பணத்தை சுருட்டுவான். ஒன்று சொல்கிறேன் கேள்! உன்னைப் போல் ஏமாறுபவர்கள் இருக்கும்வரை ஏமாற்றுபவர்களுக்கும் பஞ்சம் இருக்காது. ஏமாறுவது உன் தவறுதான்! ஏமாற்றுபவர்கள் மீது குற்றம் சாட்டாதே! என்று வினவினான் ராமன்.


முரளிக்கும் அப்போதுதான் ஞானோதயம் பிறந்தது. தான் ஏமாந்த கதையையே ஊர் முழுக்க சொல்லித் திரிவதற்குப் பதிலாக இனியாவது விழிப்புடன் இருக்க வேண்டுமென்று தீர்மானித்து புதுநம்பிக்கையுடன் மீண்டும் வியாபாரத்தில் இறங்கினான். தன் தவறுகளை உணர்ந்து திருந்திய முரளி இந்த முறை வியாபாரத்தில் முழு வெற்றியடைந்து இலாபமும் பெற்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் உலகப்போர்

**70**

## மானுடத்திற்கான திடக்கண்ணீர்!



முள்ளுவாயன் அவுக ஆத்தா பக்கவாதம் வந்து படுத்துக் கெடக்கா ரொம்ப நாளா. பச்சோந்தித் தைலத்தோட போயிட்டான் முத்துமணி. உடம்புல சரிபாதி விளங்காம அனத்திக்கிட்டே கெடக்கு அந்த அரை உசுரு. கட்டில்ல கிடந்த கெழவியப் பாயில தூக்கிப் போட்டான். தலையில இருந்து உள்ளங்கால் வரைக்கும் கசகச ன்னு தைலத்தை ஊத்தித் தேச்சுவிட்டான். சீல ஒதுங்குதேன்னு ஒரு பக்கம் மட்டும் வெக்கப்பட்டா கெழவி.

சூடு பறக்கத் தேச்சுக்கிட்டே சொல்றான்:

"மாப்ள முள்ளுவாயா... எண்ணி ஏழே வாரத்துல உங்காத்தாள எந்திரிச்சு ஓட வைக்கிறனா இல்லையா பாரு. சுருண்டு போன நரம்பையெல்லாம் சுண்டி இழுத்துரும் என் தைலம். ஆனா ஒண்ணு- செத்தா சொந்த வீட்டுல சாகணும்ன்னு சொல்லிக்கிட்டேயிருப்பா உங்காத்தா. நீ என்னைக்கு வீடு கட்டறது? வித்துரு நெலத்த; லச்சம் லச்சமா வாங்கித் தாரேன்; வீட்டைக் கட்டு; ஆத்தாளத் தூக்கி நடுமனையில உக்கார வையி. மிச்சத்த பேங்குல போடு. ஓடாத் தேயாத; ஒக்காந்து சாப்பிடு. என்ன சொல்ற?"

எண்ணை தேச்சதுதான் மிச்சம்; ஒண்ணும் சொல்லல முள்ளுவாயன்.

☆☆☆☆☆☆

ஒரு பண்ணைக்காட்டுப் பலாப்பழத்தோட போயி எறங்கிட்டான் தாவூது பாய்வீட்டுல.

"நிலத்தவச்சு என்ன சொகத்தக் கண்டீக அத்தா? உழுது பாத்தீக; ஒண்ணும் கையில நிக்கல. குத்தகைக்கு விட்டீக; அவன் மூணு வருசம் குத்தகையும் பாக்கி வச்சிட்டு உள்குத்தகைக்கு விட்டுட்டு ஓடியே போயிட்டான். தென்னமரத்துல அடிமரம் உங்களுக்கு; தேங்கா அவனுக்குங்கிற கதையாகிப் போச்சு உங்க கத. நான் பள்ளிக்கூடம் படிக்கிற காலத்துல இருந்து 'மெக்கா போகணும் மெக்கா போகணும்'னு சொல்லிக்கிட்டிருக்கீக. மெக்கா மேற்க இருக்குங்கறதத் தவிர வேற ஒண்ணும் தெரியாது உங்களுக்கு. உங்க நெலத்த வித்துருங்க. மெக்கா போயிட்டுச் சந்தோசமாத் திரும்பி வாங்க. லட்சலட்சமா வருது. என்ன அத்தா நான் சொல்றது? வயசான காலத்துலு வாழப் பாருங்க'

மத்த வீடுகள்ல ஒரு வார்த்தையும் பேசல. நல்ல வேளை தாவூது பாய் வாய் தெறந்தாரு:

"இன்ஷா அல்லா"

☆☆☆☆☆☆

ஒத்தவீட்டு மூளியத் தேடிப் பட்டுச் சேலையோட போயிட்டான் முத்துமணி.

கொண்டலாம்பட்டுச் சேலைய ஐந்நூறு ரூபாய்க்குதான் வாங்குனான். அட்டையப் பிச்செறிஞ்சுட்டு அஞ்சாயிரமுன்னு சொன்னாலும் நம்புவாக பொம்பளைக.

"யக்கா மூளியக்கா...! இன்னைக்கு விவசாயம் பண்ணுனா ஒட்டுத்துணி கூட மிஞ்சாதுன்னு ஊரு மந்தையில சொன்னவ் நீதானக்கா. நெலத்த விக்கிறேன்னு நீதான் முன்பணமும் வாங்குன. இப்பப் பின்வாங்குனா எப்பிடி? ஒண்ணு சொல்றேன் ஒனக்கு -இவங்கல்லாம் நல்ல காசை வாங்கிட்டு ஒன்னிய நட்டாத்துல விட்டுட்டுப் போயிருவாக. அப்பறம் பழைய சீலைய விக்கிற மாதிரி தான் உன் நெலத்த நீ விக்கணும். விவரமானவ நீயி; கோளாறாப் பொழச்சுக்க. சொன்னவிலைக்கு மேல வாங்கித் தாரேன்; சொன்ன சொல்லைக் காப்பாத்து"

முந்தானைய எடுத்து மூஞ்சிய அழுத்தித் தொடச்சிட்டு ஒத்தை வீட்டு மூளி பேச ஆரம்பிச்சா:

"ஏலே தம்பி முத்துமணி...! எத்தன வீட்டுக்குப் போயி என் வீட்டுக்கு வந்திருக்கியோ தெரியாது. நல்லாச் சொல்றேன் கேட்டுக்க"

"ஊருக்குள்ள ஒரு ஆளும் நெலத்த விக்கிற மாதிரி இல்ல. ஒரு சென்ட்டு நெலத்தையும் யாரும் விக்கக் கூடாதுன்னு உங்கப்பன் கருத்தமாயி சூடத்த அமத்திச் சத்தியம் வாங்கிட்டுப் போயிருச்சு. போ... போயி வேற வேலையப் பாரு. செத்தாலும் இனி நான் என் நெலத்துலதான். இந்தச் சீலைய எம் பொணத்து மேல வந்து போட்டுட்டுப்போயிரு; இப்ப எடுத்துக்க இந்தா"

கொடுத்தவன்கிட்டயே கொடுத்துட்டா கொண்டலாம்பட்டுச் சேலைய.

வெக்கம் புடுங்கித் திங்குது; ஒரு வெறி வந்து கண்ணை மறைக்குது முத்துமணிய.

☆☆☆☆☆☆



மண்சட்டியில தயிரு கடைஞ்சுக்கிட்டிருந்தா சிட்டம்மா. 'இப்பவெல்லாம் யாரு தயிரு கடையறது? பால்மாடும் இல்ல; அதுக்கான பண்டபாத்திரமும் இல்ல. வீட்டுப் பொருளா இருந்த பசுமாடு வியாபாரப் பொருளாகிப் போச்சு. பசுமாட்ட வித்துப்புட்டுப் பாக்கெட் பாலை வாங்கித் குடிக்குது சனமெல்லாம். ஏதோ இந்த ஊருல நானும் நாலஞ்சு பொம்பளைங்களும்தான் ஆத்தா அம்மாத்தாவழி அத்துப் போயிறக்கூடாதுன்னு இன்னும் கசகசன்னு கடைஞ்சிக்கிட்டிருக்கோம்.'

தயிரு கடையறதும் ஒரு சொகம்தான்.

பிரிமணை போட்டுத் தயிர் பானைய அதுல ஒருச் சாச்சு வச்சு, ரெண்டு காலையும் ஒண்ணுபோல நீட்டித் தயிர்ப் பானைக்கு ஒரு அணைவு கொடுத்து, தயிர் மேல லேசா ஒரு எளஞ்சூட்டுத் தண்ணிய விட்டு, மத்தெடுத்து உள்ள போட்டு உள்ளங்கையில உருட்டி உருட்டி அது அடியிலேயோ அட்டத்துலேயோ இடிச்சிராமச் செல்லமாக் கடையறப்ப, சும்மா வெள்ளிக் கொலுசு துள்ளித் தெறிக்கிற மாதிரி சல்லு சல்லுன்னு ஒரு சத்தம் கேக்கும் பாருங்க... உங்க சங்கீதமும் சரளி வரிசையும் என்னத்துக்காகும்?

சட்டிக்குள்ள சுரம் சொல்லிக்கிட்டே வெண்ணை திரள்ற சொகத்துல சொக்கிக் கிடந்த சிட்டம்மா தலையில இடி விழுந்த மாதிரி தடதடன்னு சத்தம் கேக்கவும் பயந்து பதறித் திரும்புனா.

பஞ்சாரத்த ஒரு எத்து எத்தி, வாசல்ல கழுவாமக் கெடந்த பாத்திரங்கள மிதிச்சு நசுக்கி, வாடிவாசல்ல தும்பு தெறிச்சு விட்ட சல்லிக்காட்டுக் காளை மாதிரி வந்து நிக்கிறான் முத்துமணி.

"ஏய் கெழவி...! எங்க உன் புருசன்?"

பெத்த பிள்ளை பேய்வேசம் கட்டி வந்திருக்குன்னு தெரிஞ்சுக்கிட்டு எகத்தாளமா ஒரு பார்வை பாத்தா சிட்டம்மா.

"ஏம்பா முத்துமணி .. அந்தாளு எனக்குத்தான் புருசனா? ஒனக்க அப்பன் இல்லையா?"

"அந்தாளு உனக்குப் புருசன்னு உனக்குத் தெரியும். எனக்குத் தகப்பனான்னு எனக்கு எப்படித் தெரியும்?"

"ஏண்டா இப்படிக் குத்திக் குத்திப் பேசற? ஆயிரம் சண்டை சத்தம் போட்டாலும் ஒனக்கு அந்தாளு அப்பன் இல்லேன்னு போயிருமா?"

"அப்பனாயிருந்தா என் பொழப்ப இப்பிடிக் கெடுப்பானா?"

"ஏன்? நீ குடிக்கிற கஞ்சியில மண்ணள்ளியா போட்டுட்டாரு அந்தாளு?"

"சோத்துல மண்ணள்ளிப் போடல கெழவி. என் பொணத்து மேல மண்ணள்ளிப்போட்ட கதையாவில்ல போச்சு"

"என்னடா சொல்ற?"

"என் வேலையைப் புடுங்கிவிட்டான் அரசாங்கத்துல. கேஸ் வேற நடக்குது கோர்ட்டுல. இருந்த பிச்சைக்காரச் சொத்தையும் கோயிலுக்கு எழுதி வச்சுட்டு வாயில வீபூதி போட்டுவிட்டான் என் மாமன். நெலத்த வித்துக் கொடுத்துக் கமிசன் காசுல காலத்த ஓட்டலாமுன்னு பாத்தா நெலத்த விக்காதேன்னு சூடத்த அமத்திச் சத்தியம் வாங்கிட்டு வந்துட்டான் உன் புருசன். கூப்புடு வெளிய... கொல்லாமவிடமாட்டேன்"

"ஏண்டா மகன் பேசற பேச்சா இது?"

"உன் புருசனைக் கேளு. அப்பன் செய்யிற காரியமாமா அது?"

"ஏண்டா இப்படித் தலப்பெரட்டுப் புடிச்சு அலையிற? என் வகுத்துல நான் புள்ளைய வளத்தனா புத்தை வளத்தனான்னு தெரியலையே? இப்படிப் பாம்பா வந்து பொறந்திருக்கியே..."

"பாம்புதான் கெழவி பாம்புதான். அதுலயும் அடிபட்ட பாம்பு; கடிக்காமப் போகாது"

"பெத்த பிள்ளயையாயிருந்தாலும் கடிக்க வர்ற பாம்ப அடிக்கத்தாண்டா பாப்பாக அப்பனும் ஆத்தாளும்'

"அடிச்சிருவியா? எங்க அடி பாப்போம்"

நாலு எட்டு முன்ன வச்சு வந்துட்டான் கிட்ட.

"ஏலே போக்கத்த பயலே... போடா; அடிச்சாலும் அடிச்சுப் புடுவேன்"

"அதுக்குத்தான வந்திருக்கேன். எங்க... அடிச்சுப் பாரு"

நெஞ்ச நிமித்திக்கிட்டுத் தயிர்ப்பானைய ஒட்டி நின்னுட்டான் முத்துமணி. பாதி வெண்ணை திரண்டு மெதக்குது. பத்துப் பதினைஞ்சு கடை கடைஞ்சா முழுவெண்ணையும் தெரண்டுரும். இவன ஒரு மனுசனா மதிக்காம மத்தெடுத்தா சிட்டம்மா தயிர் கடைய. அடிக்கத்தான் எடுக்குறா ஆத்தான்னு எத்துனான் ஒரு எத்து தயிர்ப்பானையை. கடைஞ்ச மோரும் கடையாத தயிரும் திரண்ட வெண்ணையுமா சில்லு சில்லாத் தெறிச்சு விழுந்து போச்சு தயிர்ப்பானை.

பயந்து பதறிப் புத்தி மாறிப் புலம்பிட்டா சிட்டம்மா.

"ஏலேய் அன்னத்தக் கால்; மிதிக்கிற பாவி... நீ அடிமாண்ட்டு போயிருவடா"

தலையில அடிச்சுக்கிட்டே கத்திக் கதறிட்டா.

"ஏற்கனவே செத்துச் சுண்ணாம்பாக் கெடக்கேன். சாபம்வேற கொடுக்கிறியா சாபம்?"

குனிஞ்சு ஆத்தா குடுமியப் புடிச்சான். அவ தலைய அங்கிட்டும் இங்கிட்டும் ஆட்டி மிசுங்கப் பாத்தா; குடுமிக்குள்ள போன கையிலயிருந்து ரெண்டு வெரலு அவ வளத்த காதுல மாட்டிக்கிருச்சு. ஆத்திரத்துல ஆத்தாள இழுக்கவும் அவன் கையோட சிக்குன காது அந்தே போச்சு. காதுல கெடந்த தண்டட்டி துண்டா உருண்டோடி விழுருது தூரத்துல. அலறித் துடிக்கிறா ஆத்தா. கொட்டுன ரத்தம் தயிர் மேல விழுகுது சொட்டுச் சொட்டா.

"ஏலேய்! ஒன்னிய தெய்வம் கொல்லாம விடாதுடா"

"தெய்வம் என்னியக் கொல்றதுக்கு முன்னால உங்கள நான் கொல்றனா இல்லையா பாரு. ஏ கிழவி... ஒன்னியக் காத மட்டும்தான் அறுத்தேன். என் பொழப்புல குறுக்க வந்தா உன் புருசன் கழுத்தை அறுக்காம விடமாட்டேன். சொல்லிப்புடு"

வெறிநாய் மாதிரி கத்தி வெளியேறிட்டான் முத்துமணி.

மறுபடியும் பஞ்சாரத்தை மிதிச்சவன் கீழ கெடந்த தண்டட்டிய ஒரு எத்து எத்தி உருட்டிட்டான்.

கண்ணுல கண்ணீரோட காதுல ரத்தத்தோட உடைஞ்ச தயிர்ப்பானைச் சில்லுகள ஒதுக்கி விட்டுட்டு விளக்கமாறு எடுத்துத் திண்ணையில சிந்திக் கிடந்த தயிரப் பெருக்கிக் கழுவி விட்டா சிட்டம்மா.

திரும்பிப் பாத்தா-

மகனைப்போலவே காணோம்-தண்டட்டியையும். (தொடரும்)

> "பெத்த பிள்ளையாயிருந்தாலும் கடிக்க வர்ற பாம்ப அடிக்கத்தாண்டா பாப்பாக அப்பனும் ஆத்தாளும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தேக நபரை துன்புறுத்திய பொறுப்பதிகாரிக்கு சிறை

சந்தேக நபர் ஒருவரை துன்புறுத்திய பொலிஸ் சோதனைச்சாவடி பொறுப்பதிகாரிக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது

களவுச்சம்பவமொன்று தொடர்பில் தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக குறித்த பொலிஸ் உயர் அதிகாரி சந்தேக நபரை துன்புறுத்தியமை நிரூபணமாகியுள்ளது.

சந்தேக நபரை துன்புறுத்திய பொலிஸ் உத்தியோகத்தருக்கு ஐந்து ஆண்டு கால கடூழிய சிறைத் தண்டனையும் பத்தாயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பாதிக்கப்பட்ட நபருக்கு ஒரு இலட்சம் ரூபா நட்ட ஈடு வழங்குமாறும் பொலிஸ் உத்தியோகத்தருக்கு மொனராகல உயர் நீதிமன்ற நீதவான் கிஹான் எச் குலதுங்க உத்தரவிட்டுள்ளார்.

அபராதம் மற்றும் நட்ட ஈட்டை வழங்கத் தவறினால் தலா 30 மாத மேலதிக சிறைத் தண்டனை விதிக்கப்படும்.

2003ஆம்ஆண்டுஆயித்திமலைபொலிஸ் சோதனைச்சாவடியின் பொறுப்பதிகாரியாக கடமையாற்றியவருக்கே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (அ)

# மத்தள வி.நிலையத்திற்கு 80 மில்லியன் டொலர் மேலதிகமாக செலவு

## ஜே.வி.பி.குற்றச்சாட்டு

மத்தள விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்கு 80 மில்லியன் அமெரிக்க டொலர் மேலதிகமாக செலவிடப்பட்டுள்ளதாக ஜே.வி.பி. கட்சி தெரிவித்துள்ளது.

மத்தள சர்வதேச விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்கு 209 மில்லியன் அமெரிக்க டொலர் செலவாகும் என அமைச்சரவை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததாக ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

எனினும் தற்போது மத்தள விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்காக 289 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்பட்டுள்ளது.

குறித்த விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்காக செலவான மெய்யான தொகையை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும்.

சீன நிறுவனமொன்றிடமிருந்து பாரியளவில் கடன் பெற்றுக்கொண்டே விமான நிலையம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

கடன்பெற்றுக்கொள்ளும் போர்வையில் இந்த அரசாங்கம் பாரியளவில் பணத்தைக் கொள்ளையிடுகிறது.

கெரவலபிட்டிய மின் நிலையத்தை நிர்மாணிப்பதற்கு 225 மில்லியன் அமெரிக்க டொலர் செலவாகும் என அறிவிப்பட்டது. எனினும் மின் நிலையத்தை நிர்மாணிப்பதற்கு 346 மில்லியன் செலவிடப்பட்டுள்ளதாக அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (அ-2)

# இன வன்முறையை தூண்டவே அநாமதேய துண்டுப்பிரசுரம்

(கொழும்பு)

இனங்களிடையே இனரீதியான வன்முறையை தூண்டும் வகையில் பொதுபல சேனா மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளின் பின்னணியில் இருப்பவர்களே மட்டக்களப்பில் வெளியாகியுள்ள அநாமதேய துண்டுப் பிரசுங்களின் பின்னணியிலும் இருப்பதான சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கோ. கருணாகரம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக வெளியாகிக் கொண்டிருக்கும் அநாமதேய துண்டுப்பிரசுரங்கள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கொண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர்,

கடந்த காலத்தில் பிட்டும் தேங்காய்ப்பூவுக்கும் ஒப்பிட்டு பேசப்பட்டுவந்த உறவுகள் சீர்குலைந்து பல இன்னல்கள் மத்தியில் இருந்து வருகின்றது.

கடந்தகால குரோதங்கள் காரணமாக வீரமுனைப் படுகொலை, காத்தான்குடி பள்ளி வாசல் படுகொலைகளைச் சந்தித்த எமது தமிழ் பேசும் இனம் மீண்டும் ஒரு தடவை அவ்வாறான சம்பவங்கள் நடைபெறுவதை எண்ணிப்பார்ப்பதையே தவிர்த்து வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இரு இனங்களுக்கும் இடையில் மீண்டும் கலவரத்தை தூண்டும் வகையிலும் பிளவுகளை ஏற்படுத்தும் வகையில் அநாமதேய துண்டுப்பிரசுரங்கள் எறியப்பட்டு வருகின்றன.

பொதுபலசேனா என்ற அமைப்பு இந்த நாட்டில் இனங்களுக்கிடையே கலவரத்தை ஏற்படுத்துவதற்காக மேற்கொண்டு வரும் நடவடிக்கையின் ஓர் அங்கமாகவே இதனை நான் நோக்குகின்றேன். இதன் பின்னணியில் பொதுபல சேனா என்ற பெயரில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருபவர்களும் இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது என்றார். (அ-2)

# அமெ.விமர்சனங்களை அரசு ஆக்கபூர்வமாக ஏற்க வேண்டும்

## சுமந்திரன் எம்.பி.வலியுறுத்து

உண்மையைக் கண்டறியாது என மெய்யான நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் தற்போதைய கொள்கைகள் மக்களின் அதிருப்தியையே சம்பாதித்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எல்லா நேரங்களிலும் மக்களை முட்டாளாக்க முடியாது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். குற்றச்செயல்களுக்கு தண்டனை வழங்குதல் தொடர்பிலான அரசாங்கத்தின் நிலைப்பாட்டை மக்கள் நீண்ட காலத்திற்கு ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். மேலும் குற்றச் செயல்கள் தொடர்பான சுயாதீன விசாரணைகளை அரசாங்கம் சர்வதேச சதித் திட்டமாக அடையாளப்படுத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

பக்கச்சார்பற்ற, வெளிப்படையான ஓர் பொறிமுறைமையின் மூலம் குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமானது. இதன் மூலமே நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும். மேலும் சர்வதேச சமூகத்துடன் ஒத்துழைப்புடன் செயற்படுவதன் மூலம் நன்மதிப்பை வென்றெடுக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

மறைப்பதற்கு எதுவுமில்லை என்றால் அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் அமெரிக்காவினால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானத்திற்கு ஆதரவளிக்க வேண்டும்.

விமர்சனங்களை ஆக்கபூர்வமாக ஏற்றுக் கொண்டு அவை தொடர்பில் நடவடிக்கை எடுக்க அரசாங்கம் பழகிக் கொள்ள வேண்டும் என்றார். (அ-2)

# கிறேசர் தூசு கும்பிகளுக்கு மறைப்பிடுமாறு கோரிக்கை

(சிவநகர்)

பளைப்பகுதியில் ஏ-9 வீதி திருத்த வேலைக்காக போடப்பட்டுள்ள கிறேசர் மூலமாக பரவுகின்ற தூசுகள் அவ் வீதியால் பயணிப்போருக்கு பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்துகின்றது.

அந்த கிறேசர் அமைக்கப்பட்டிருந்த பகுதியில் முன்னர் பிரதான வீதிக்கு தூசுகள் பரவாத வண்ணம் மறைப்புக்கள் போடப்பட்டிருந்தன.

தற்போது அந்த மறைப்புகள் எதுவும் இல்லாது உள்ளதால் அவ் வீதியால் பயணிக்கும் பயணிகள் அனைவரும் தூசியினால் சிரமங்களை எதிர்நோக்குவதை காணக்கூடியதாகவுள்ளது.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இதனை கருத்திற் கொண்டு கிறேசர் பகுதிக்கு முன்பாக மறைப்புக்கள் போடவேண்டும் என்று பயணிகளாலும் பொதுமக்களாலும் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (அ-3-254)

# இலங்கைக்கு எதிரான தரப்பினர் ஒன்றுகூடும் இடமாகி விட்டது ஜெனீவா

## பாதுகாப்பு செயலாளர் குற்றச்சாட்டு

தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் ஊடாக மேற்குலக நாடுகள் இலங்கை மீது அழுத்தங்களை பிரயோகிக்க முயற்சித்து வருவதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.


தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு நிதி உதவிகளை வழங்கி நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்த சில தரப்பினர் முயற்சித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் ஏற்படுத்தும் நோக்கில் மேற்குலக நாடுகள் தன்னார்வ தொண்டு நிறுவனங்களை பயனப்படுத்திக் கொள்கின்றன. நாட்டுக்கு எதிராக பிரசாரம் செய்து வரும் தரப்பினர் இந்த நிதி உதவியைக் கொண்டு மேலும் தீவிரமாக பிரசாரங்களை முன்னெடுப்பார்கள். இலங்கைக்கு எதிரான தரப்பினர் ஒன்றுகூடும் இடமாக ஜெனீவா மாற்றமடைந்துள்ளது. யுத்தம் இடம்பெற்ற காலத்திலும் சில ஊடகவியலாளர்களுக்கு பெருந்தொகைப் பணம் கிடைக்கப் பெற்றுள்ளன.

தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வரும் நிதி உதவிகள் குறித்து தீவிர கண்காணிப்பு செய்யப்பட வேண்டும் என்றார்.

மேலும் ஊடகவியலாளர் பாதுகாப்பு உள்ளிட்ட நலத்திட்டங்களுக்காக அண்மையில் அமெரிக்கா இரண்டு தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு பெருந்தொகை பணத்தை ஒதுக்கியிருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)





வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவனத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட தரவுத்தளம் தொடர்பான கணனி பயிற்சிப்பட்டறை வடமாகண முகாமைத்துவ பயிற்சி நிலையத்தில் நேற்று நடைபெற்றது. இதில் முகாமைத்துவ அபிவிருத்தி நிறுவனத்தின் பணிப்பாளர் பொ. வாகீசன் உரையாற்றுவதையும் அருகில் வடமாகாண ஆளுநரின் செயலர் இ.இளங்கோவன் உட்பட உயர் அதிகாரிகள் அமர்ந்து இருப்பதையும் பயிற்சிப்பட்டறையில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி மஹிந்த ஜப்பானுக்கு விஜயம்

(கொழும்பு)

மூன்று நாட்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று ஜப்பான் நாட்டுக்கு விஜயம் செய்யவுள்ளார் என்று ஜனாதிபதியின் பேச்சாளர் மொஹான் சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

இவ்விஜயத்தின் போது ஜப்பான் நாட்டின் பிரதமர் சின்கோ அபே உட்பட அந்நாட்டின் முக்கிய அரசியல் தலைவர்களுடன் இராஜதந்திர மட்டத்திலான பேச்சுவார்த்தைகளில் ஜனாதிபதி மஹிந்த ஈடுபடுவார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இப் பேச்சுவார்த்தைகளின் போது இரு பக்க உறவுகள் மேம்பாடு, பொருளாதார ஒத்துழைப்பு உள்ளிட்ட முக்கிய விடயங்களில் விசேட கவனம் செலுத்தப்படும் எனவும் அவர் கூறினார்.

இலங்கைக்கும் ஜப்பானுக்குமிடையிலான இராஜதந்திர உறவின் அறுபதாண்டு நிறைவின் நிமித்தமே ஜனாதிபதியின் விஜயம் அமைந்துள்ளது. (அ-2)

# குடும்ப ஆட்சி நடைபெறுவதில் எனக்கு உடன்பாடில்லை

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

இலங்கையில் குடும்ப அரசியல் இடம் பெறுவதில் தமக்கு உடன்பாடு இல்லை என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதனால் தமது இரண்டு பிள்ளைகளையும் அரசியலை தெரிவு செய்ய வேண்டாம் என்று தாம் அறிவுரை வழங்கியிருப்பதாகவும் தாம் ஆட்சியில் இருக்கும்போதே தமது சகோதரர்கள், பிள்ளைகள் எல்லோரும் அரசியலில் இருப்பதை தாம் விரும்பவில்லை.

தமது பிள்ளைகளும் இலங்கைமீது பற்று வைத்துள்ளனர்.

எனினும் இலங்கைக்கு சேவை செய்ய அரசியல் தவிர வேறு பல்வேறு வழிகள் உள்ளன என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கிடையில் தமது இரண்டு ஜனாதிபதி தவணையும் நிறைவடைந்துள்ள நிலையில் தாம் வெவ்வேறு வழிகளில் இலங்கைக்கு சேவையாற்றி வருவதாகவும் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதைய அரசியல்வாதிகள் நாட்டின் வளங்களை சுரண்டி வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். எம்பிலிப்பிட்டியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட போது சந்திரிக்கா இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

அரசியலை பிரதான வருமான வழியாகக் கொண்டு சிலர் செயற்படுகின்றனர். சமூகத் தொண்டு ஆற்றுவதற்கு அரசியல் அதிகாரம் அவசியமில்லை. சமூகசேவை மக்கள் தொண்டு என்ற போர்வையில் அரசியல்வாதிகள் நாட்டின் வளங்களை சுரண்டி வருகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# சர்வதேச குளுக்கோமா வாரம் இன்று ஆரம்பம்

சர்வதேச குளுக்கோமா தினம் இன்று செவ்வாய்க்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு நேற்று தொடக்கம் எதிர்வரும் 16 ஆம் திகதி வரையான காலப்பகுதியை தேசிய குளுக்கோமா வாரமாக சுகாதார அமைச்சு பிரகடனப்படுத்தியுள்ளது.

குளுக்கோமா எனும் கண்நோய் காரணமாக படிப்படியாக பார்வை இழக்கக்கூடிய நிலை ஏற்படும். முக்கியமாக குளக்கோமா ஏற்பட்டதும் அந்நோய்க்கான எவ்வித அறிகுறியையும் இது உடனடியாகக் காட்டுவதில்லை.

கண்ணில் ஏற்படும் அழுத்தம் அதிகரித்தல் அல்லது குறைதல், நீரிழிவு நோய் ஏற்படல் மற்றும் குடும்பத்தில் யாருக்காவது இந்நோய் ஏறபட்டிருத்தல், கண்ணை பாரதூரமாக ஏதாவது தாக்கியிருத்தல் அல்லது கண்ணில் ஏதேனும் புள்ளிகள் தோன்றியிருத்தல் காரணமாக குளுக்கோமா ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் இருப்பதாக சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித மஹிபால தெரிவித்தார்.

40 வயதுக்கு மேற்பட்ட எந்தவொரு நபரும் வருடத்துக்கு ஒருமுறை கண்களை பரிசோதித்துக் கொள்ள வேண்டும். அப்போது குளக்கோமா பரிசோதனையும் செய்து கொள்ள வேண்டியது அவசியம் என தெரிவித்தார். (அ-2)

# கடந்த வருடம் ஆயிரத்து 800 சிறார்கள் துஷ்பிரயோகம்

(கொழும்பு)

நாட்டில் கடந்த வருடம் மாத்திரம் ஆயிரத்து 800 பராயம் அடையாத சிறுவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகி இருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவற்றில் ஆயிரத்து 600 வரையான முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை நடத்தி தீர்வு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் இதில் 900 இற்கும் அதிகமான சம்பவங்கள் மிகவும் கொடுமையான பாலியல் பலாத்காரமாக உள்ளதாக பொலிஸ் ஊடக அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலும் இவ்வாறான சம்பவங்களில் குறித்த சிறுவர்களின் உறவினர்களே ஈடுபட்டுள்ளமையும் தெரியவந்துள்ளது.

இதற்கிடையில் கடந்த வருடம் பெண்களுக்கு எதிரான தீவிர வன்முறை சம்பவங்களாக 28 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# பௌத்த கொள்கைகளுக்கு உட்பட்டு மதக்கடமைகளை நிறைவேற்றலாம்

## பொதுபலசேனா சூளுரை

ஹலால் சான்றிதழ் எதிர்வரும் 31 ஆம் திகதியுடன் நாட்டில் இருக்கக்கூடாது. அவ்வாறு இருக்குமானால் மக்களை ஒன்று திரட்டி வீதியில் இறக்கி போராட்டம் முன்னெடுக்கப்படும் என பொதுபல சேனா எச்சரித்துள்ளது.

அடிப்படைவாத சக்திகளில் இருந்து பௌத்த மதத்தை பாதுகாக்கும் நோக்கில் என குறிப்பிட்டு பொதுபல சேனாவின் மாநாடொன்று நேற்று முன்தினம் மாலை மாலபேயில் இடம்பெற்ற போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய பொதுபல சேனாவின் செயலாளர் கலகொட அத்தே ஞானசாரதேரர் கூறுகையில்,

ஹலால் சான்றிதழ் என்பது எமது நாட்டுக்குத் தேவையில்லாததொன்று. அதனை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் நாட்டிலிருந்து முற்றாக அகற்றிவிட வேண்டும்.

இல்லையேல் மக்களை ஒன்று சேர்த்து இந்த அமைப்பினூடாக போராட்டத்தினை முன்னெடுக்க நாம் தயங்கமாட்டோம்.

ஹலால்சான்றிதழ் வழங்கும் விவகாரத்தை அரசிடம் பொறுப்பேற்றுகுமாறு சம்பந்தப்பட்ட அமைப்புகள் கோரிக்கை விடுத்தன. ஆனால் அரசாங்கம் அதனை ஏற்க மறுத்து விட்டது.

இது ஒரு சிங்கள பௌத்த நாடு இங்கு சிங்கள பௌத்த கொள்கைகளுக்கு உட்பட்டு ஏனையோர் தமது மதக் கடமைகளை நிறைவேற்ற முடியும். நாட்டில் உள்ள பிற மதங்களின் அடிப்படைவாதிகளின் ஊடுருவலினால் பௌத்த மதத்திற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில்பௌத்த மதத்தின் தர்மங்களை பாதுகாக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டதே இந்த பொதுபல சேனாவாகும். மாறாக இது ஒரு மதவாதம், இனவாதம் அல்லது ஒரு கட்சி சார்ந்த அமைப்போ கிடையாது.

இதேவேளை இவ்வாறான அடிப்படைவாத சக்திகளில் இருந்து பௌத்த மதத்தை பாதுகாப்பதற்கு எமது அமைப்பு நாடு தழுவிய ரீதியில் இவ்வாறான மாநாடுகளை முன்னெக்கும் என அவர் கூறினார். (அ-2)

# சிங்கள சனத்தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாம்

## பொதுபலசேனா கவலை

சிங்கள சனத்தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக பொதுபலசேனா அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

சிங்கள பௌத்த சனத்தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டு வரும் அதேவேளை முஸ்லிம் மக்களின் சனத்தொகை அதிகரித்துச் செல்வதாக பொதுபலசேனா அமைப்பின் தேசிய அமைப்பாளர் விதாரன்தெனிய நந்ததேரர் தெரிவித்துள்ளார்.

சிங்கள சனத்தொகையை திட்டமிட்ட அடிப்படையில் குறைக்கும் நடவடிக்கை 1980 ஆம் ஆண்டுகளில் இருந்து முன்னெடுக்கப்படுகின்றது.

இதேவேளை ஹலால் தொடர்பில் உலமாக்கள் செய்து வரும் பிரசாரம் பிழையானது என பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

புனித குர்ஆனில் ஹலால் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அதனை உலமாக்கள் பிழையாக வெளிப்படுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# பாலியல் தொழிலில் இலங்கைப் பெண்கள்?

இலங்கைப்பெண்கள்சிங்கப்பூருக்குஅழைத்துச் செல்லப்பட்டு பாலியல் தொழிலில் ஈடுபடுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு தெரிவிக்கின்றது. இது தொடர்பில் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக அதன் பணிப்பாளர் பொலிஸ் அத்தியட்சகர் ஜயந்த விக்கிரமசிங்க கூறினார்.

சிங்கப்பூரில் இலங்கைப் பெண்கள் சிலர் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனவே சிங்கப்பூருக்கு தொழில் நிமிர்த்தம் செல்வோர் கட்டாயமாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஊடாக செல்லவேண்டுமென சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் குறிப்பிட்டார்.

பணியகத்தில் பதிவு செய்த பின்னர் சிங்கப்பூருக்கு பயணிப்பதன்மூலம் இவ்வாறான ஆபத்துக்களிலிருந்து பாதுகாப்பு பெறமுடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)



சரசாலை வடக்கு நித்திலா மகளிர் ஐ.நா. சங்க 29 ஆவது ஆண்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இச்சங்கத்தில் அங்கத்துவம் வகிப்போரின் பிள்ளைகளில் 2011 ஆம் ஆண்டு க.பொ.த. (சா/த) சித்திபெற்ற பிள்ளைகளுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. பரிசில் பெற்ற மாணவர்களுடன் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதைப்படத்தில் காணலாம்

### நாட்டின் மொத்த வழக்குகளில் 65 வீதமானவை பாலியல் பற்றியவை சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

நாட்டில் விசாரணை செய்யப்பட்டு வரும் மொத்த வழக்குகளில் 65 வீதமானவை பாலியல் வன்கொடுமைகள் தொடர்பானவை என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மெதிரிகிரியவில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம், பெண்களுக்கு எதிரான வன்முறைகள் போன்றன தொடர்பில் அதிகளவில் வழக்குக்கு பதிவாகியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழம் - சாட்சியமற்ற போரின் சாட்சியங்கள்

ஆயிரக்கணக்கில் மக்களைப் பலியெடுத்த மிகவும் ஆக்ரோசமான இனப் பிரச்சினையைப் பற்றிய புத்தகம் ஒன்றை வெளியிடுதல் என்பது அமைதியான வாழ்க்கையொன்றைத் தேடும் பாதையல்ல. இலங்கையர்கள் அடிக்கடி பார்க்கும் இணையத்தளங்களில் இருக்கும் உங்கள் கருத்துக்கள் என்ற பகுதிகளை ஒரு முறை சென்றுபார்த்தால் புரியும் இலங்கைப் பிரச்சினை தொடர்பில் தமிழர்களது





ஈழம்- சாட்சிய மற்றபோரின் சாட்சியங்கள் நூலின் ஆசிரியரும் அபயஸ்தாபன ஊடக முன்னைநாள் அதிகாரியுமான பிரான்சிஸ் ஹரிசன் பிரசித்தமான ஹாபிங்டன்போஸ்ட் என்ற இணையத் தளத்திற்காக எழுதியது.

உணர்வுகள் இன்னமும் கொதிப்படைந்த நிலையில் தான் இருக்கின்றன என்பதனை.

இலங்கை தொடர்பாக பத்திகள் எழுதும் ஏனையோரைப் போலவே நானும் எனக்குரிய பங்கிற்கு இரண்டு சாராரிடமிருந்தும் இழிவு படுத்தலுக்கு உள்ளானேன். நான் கொலைக்களத்தில் கொல்லப்பட்ட குழந்தைகளின் குருதியில் மூழ்கியிருப்பதாகவும், கொல்லப்பட்டோரை வைத்துப் பணம் சம்பாதிப்பதாகவும் .மறுபுறத்தில் ஒரு *வெள்ளைப்புலி* என்றும், மனநோயால் பாதிக்கப்பட்ட பொய்காரி என்றும் தூஷிக்கப்பட்டிருக்கிறேன்.

ஆனால், உலகளாவிய ரீதியில் வாசகர்கள் எனக்கு அனுப்பும் பிரத்தியேக செய்திகள் என்ன என்பது பொதுமக்களிற்குத் தென்படாத விடயம் ஒரு சில தினங்களுக்கு ஒருமுறை எங்காவதிருந்து ஒரு இலங்கைப் பிரஜையிடமிருந்து வாழ்த்துச் செய்தி ஒன்று எனக்குக் கிடைக்கிறது. இவர்களில் அனேகமானோர் தமிழர்கள். சிலர் சிங்களவர்கள். சிலர் நான் நீண்ட ஆயுளுடன் வாழவேண்டுமென்று வாழ்த்தும் போது வேறு சிலர் நான் ஆயுளுள்ளவரை தங்கள் இதயத்தில் இடம் பிடித்திருப்பேன் என்று ஆசீர்வதிக்கிறார்கள்.

எனது புத்தக வெளியீட்டு நிகழ்வுகளில் சந்திக்கும் ஆண்களும் பெண்களும் என்னை ஆரத் தழுவி ஆராதிக்கிறார்கள். வேறு சிலர் தாம் எனது புத்தகத்தினை வாங்கிவைத்திருப்தாகவும், ஆனால், முன்னர் இடம் பெற்ற யுத்தத்திபோது அகதிகளாகத் தாங்கள் பட்ட வேதனைகள் ஆறாத ரணமாக அவர்களை வாட்டி வதைத்துக் கொண்டிருப்பதால், அந்தப் புத்தகத்தை வாசிக்கும் துணிவு தங்களுக்கு இல்லை என்று தெரிவிக்கிறார்கள்.

நான் சில சமயங்களில், இவர்களின் இந்தச் செய்திகளையும் ஆசிகளையும் இந்தப் புத்தகத்தில் வரும் உண்மையான கதாபாத்திரங்களுடன் பகிர்ந்து கொள்வதுண்டு. ஏனெனில் இந்தப் புகழ்ச்சிக்கும், வாழ்த்துக்கும் உண்மையாக உரித்துடையவர்கள் அவர்களேயொழிய, நானல்ல. இடம்பெற்ற பேரனர்த்தத்திற்குச் சாட்சியாக இருக்கும் தங்களின் தலையாய பொறுப்பை உணர்ந்து அவர்கள் பலத்த சவால்களையும் ஆபத்துக்களையும் துணிச்சலுடன் எதிர்கொண்டு என்னுடன் மனம்விட்டுப் பேசியிருக்கிறார்கள்.

*ஈழம்- சாட்சியமற்ற போரின் சாட்சியங்கள்* நூலில் வரும் வைத்தியரின் அசாத்தியத் துணிச்சலை மெச்சுகின்ற பெருவாரியான வாசகர்கள் அவரை வானளாவப் புகழ்கிறார்கள். கனடாவைச் சேர்ந்த தமிழ் அமைப்பொன்று அவருக்கு *வாழ்நாள் சாதனையாளர்* என்ற விருதினை வழங்கிக் கௌரவித்திருக்கிறது. இது தன்னுயிரைத் துச்சமென மதித்து பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிரைக் காப்பாற்றியதற்காக முதல் முதலாக அவருக்குக் கிடைத்த பகிரங்க அங்கீகாரமாகும். அவரது சுயபாது காப்புக் கருதி அந்த வைத்தியர் அநாமதேயமாக இருக்கவேண்டிய ஒரு சூழ்நிலை காரணமாக அந்த விருது லண்டனில் என்னிடம் கையளிக்கப்பட்டது. அதனைப் பின்னர் நான் அவரிற்கு அனுப்பி வைத்தேன். துரதிஷ்ட வசமாக அந்த விருது கண்ணாடியினால் செய்யப்பட்டிருந்த போதிலும், அதிர்ஷ்ட வசமாக அது பாதுகாப்பாக அவரிடம் சென்றடைந்துவிட்டது.

கடந்தவாரம், தலைநரைத்த தமிழ்ப் பெரியவர் ஒருவர் எனக்கருகில் வந்து இந்தப் புத்தகம் எவ்வாறு தன்னை இரண்டு நாட்களாக ஆட்கொண்டிருந்தது என்றும் ஒவ்வொரு சம்பவங்களும் இரத்தத்தை உறையவைப்பதாக இருந்தது என்றும் கூறினார். "எனக்கு இப்போது 70 வயது ஆனால், இந்தப் புத்தகத்தில் ஒவ்வொரு சம்பவங்களையும் அழுகையுடன்தான் வாசித்தேன்" என்று பெருமையுடன் கூறினார். இன்னொரு நபர் மெல்போனில் இருந்து எனது முகப்புத்தகத்தினூடாக ஒரு மடலை அனுப்பியிருந்தார்.

"அது . பனம்பழமல்ல, ஒரு குழந்தையின் தலை என்ற வரியை வாசித்தபோது என்னை அறியாமல் அழுதுவிட்டேன். நான் அப்போது ரயிலில் பயணம் செய்துகொண்டிருந்தேன். ஆனாலும் நான் அதனை ஒரு அவமானமாகக் கருதவில்லை. இதே போலவே, தனது தாயார் குண்டடிபட்டு இறந்திருப்பதை அறியாத பச்சிளங்குழந்தை அவளிடம் பால் குடித்துக் கொண்டிருந்தது என்ற வாக்கியத்தை வாசித்தபோதும் நான் அழுதுவிட்டேன். உங்களால் மட்டும் எவ்வாறு உணர்ச்சிகளைத் தக்கவைத்துக்கொண்டு இந்தப் புத்தகத்தை முழுமைசெய்ய முடிந்தது." என்று அவர் அந்த முகப்புத்தக மடலில் கேட்டு எழுதியிருக்கிறார்.

இலங்கையர்கள் மட்டுமல்ல, அயல் நாட்டிலுள்ள இந்தியாவிலிருந்துகூட தமிழர்கள் தாம் இலங்கையில் என்ன நடந்துகொண்டிருந்தது என்பது பற்றி அதிக அக்கறை கொள்ளாமல் இருந்துவிட்டோமே என்பதையெண்ணி வெட்கித் தலகுனிவதாக எனக்கு எழுதியிருக்கிறார்கள். தென்னிந்தியாவில் இருந்து ஒரு பட்டதாரி, தான் பல்கலைக்கழகத்தில் இந்த நூல் குறித்த கலந்துரையாடல் ஒன்றை ஒழுங்கு செய்திருந்ததாகவும், அதன் பின்னர் இதனை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லும் நோக்கில் மாணவர்களை ஏற்பாடு செய்ததாகவும் தெரிவித்தார். அந்த மாணவர்கள் இந்த நூலை இலங்கை ஏதிலிகள் தங்க வைக்கப்பட்டிருக்கும் முகாம்களுக்கும் எடுத்துச் சென்று அவர்களிடம் அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். "அங்கிருந்த ஏதிலி ஒருவர் இந்த நூலையும் அதிலுள்ள வரைபடங்களை[illegible] முகத்தில் ஒரு[illegible] அந்த நூலை எடுத்துத் தனது மனைவிக்கு இலங்கையின் விபரங்களை விலாவாரியாக, குறிப்பாக வடக்கின் செழுமை குறித்து விளக்கமளிக்கத் தொடங்கினான்" என்று அந்தப் பட்டதாரி என்னிடம் கூறினான்.

முன்னார் அகதியாக இருந்து தற்போது லண்டனில் வசிக்கும் தமிழரொருவர், இந்த நுலின் சுமார் 100 தமிழ்ப் பிரதிகளை இந்தியாவின் தமிழ் நாடு மாநிலத்திலுள்ள நூலகங்களிற்கு அன்பளிப்புச் செய்திருக்கிறார். இந்த நபர் தற்போது, தனது உறவினர் மற்றும் நண்பரொருவருடன் சேர்ந்து இந்த நூலின் 90 பிரதிகளை ஐ.நா.வின் இராஜதந்திரிகளுக்கு அனுப்பி வைத்துக் கொண்டிருக்கிறார். கனடாவிலும், லண்டனிலும் வசிக்கும் ஏனைய சிலர் தாம் இந்த நூலின் பிரதிகளை அரசாங்கத்தின் அமைச்சர்கள் குழாமிற்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனப்பிவைத்து அவர்களை அதனை வாசிக்கும்படி வலியுறுத்தியிருக்கிறார்கள்.

Still Counting the Dead வெளியிடப்பட்ட மூன்றாவது தினம், லண்டனில் இடம் பெற்ற நிகழ்வொன்றின் பின்னர், ஒரு தமிழரைச் சந்தித்தேன். இவர் அருகிலுள்ள புத்தகசாலை ஒன்றிற்கு சென்று எனது கையொப்பமிடப்பட்ட சுமார் 50 பிரதிகள் தேவைப்படுவதாகத் தனக்கு தெரிந்த ஆங்கிலத்தில் கேட்டிருக்கிறார். அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த பெண்மணி இவர், இந்த நூலை வியாபார நோக்கம் கருதிக் கொள்வனவு செய்ய முயற்சிக்கிறார் என்றும், விற்கப்படாத பிரதிகளை மீளளித்து பணத்தை மீளப்பெறும் நோக்கிலேயே கொள்வனவு செய்கிறார் என்றும் தவறாக விளங்கிக்கொண்டார். ஆனால், நல்லுள்ளம் படைத்த ஒருவர், தலையீட்டால் விடயம் தெளிவுபடுத்தப்பட்டது. பின்னர் தனது வங்கிக் கடனட்டையின் உதவியுடன் சுமார் 50 பிரதிகளைக் கொள்வனவு செய்த அந்த நபர் தமிழர்கள் செறிவாக வசிக்கும் பிரதேசங்களில் வீடுவீடாகக் காவிச் சென்று எனது இந்த நூலை வாங்குமாறு வேண்டியிருக்கிறார். இதனை அவர் இலாப நோக்கமின்றி, ஒரு சமூக சேவையாகவே செய்திருக்கிறார்.

எனது நூலின் ஆங்கிலப் பதிப்பு இலங்கையின் தலைநகர் கொழும்பிலுள்ள புத்தகசாலைகளில் வெளிப்படையாகவே விற்பனை செய்யப்படுகின்றபோதிலும், வடக்கில் வாழும் தமிழர்கள் அதனைக் கொள்வனவு செய்து தம்முடன் எடுத்துச் செல்ல மிகவும் அச்சப்படுவதாக நான் அறிகிறேன். ஏனெனில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்குச் செல்லும் வழியில் படையினரின் சோதனை நடவடிக்கைகளுக்கு முகம்கொடுக்க வேண்டியிருப்பதால், அவர்களுக்கு இருக்கக்கூடிய இந்த அச்சம் நியாயமானதே. ஆனாலும், அங்குள்ளவர்கள் இதனை வாசித்திருக்கிறார்கள் என்பதுடன் இதுகுறித்துக் கலந்துரையாடியும் இருக்கிறார்கள். இதனது லண்டன் வெளியீட்டின்போது, யாழ்ப்பாணத்திலுள்ள தமது உறவினர்களுக்கு அனுப்பி வைக்கவென, பலர் ஒன்றுக்கு மேற்பட்ட பிரதிகளைக் கொள்வனவு செய்வதனை அவதானித்தேன். சிங்களவர்கள் உள்ளிட்ட இலங்கையர்கள் பலர் என்னைப் பிரத்தியேகமாக அணுகி, கொடிய யுத்தத்தின் இறுதிக் காலகட்டத்தில் இடம்பெற்ற சம்பவங்களை வெளிக்கொணர்ந்திருப்பது மிகவும் அளப்பரிய விடயமென்று எனக்கு நன்றி நவின்றார்கள்.

இலக்கிய இதிகாசங்கள், கட்டுக் கதைகள் போன்றவற்றை உள்ளடக்கிய நூல்கள் பிரசுரம் செய்வதில் அதிக அனுபவம் கொண்ட எனது பிரித்தானிய வெளியீட்டாளர்கள், இந்தப் புத்தகத்தின் மவுசு மற்றும் அது கிளப்பியிருக்கும் உணர்வலைகள் குறித்து ஆச்சரியம் தெரிவித்தார்கள். லண்டனில் இந்த நூல் முதன் முறையாக வெளியிடப்படவிருந்த நிகழ்வுக்குரிய அனுமதிச் சீட்டுக்கள் முன்கூட்டியே விற்பனை செய்யப்பட்டமையையும் சுமார் 250 பேர் அரங்கத்தை நிறைத்திருந்ததையும் கண்டு அவர்கள் வாயடைத்துப்போனார்கள். எழுத்தாளருக்குரிய விலைக் கழிவுடன் சுமார் 100 பிரதிகளைத் தொகையாக இப்போதெல்லாம் நான் அவர்களிடம் கொள்வனவு செய்யும்போது அவர்கள் வியப்படைவதில்லை.

ஒவ்வொரு நாளும் யுத்த குற்றங்கள் குறித்து எழுதுவதும் உரையாற்றுவதும் கடினமானது மட்டுமல்ல, உயிரை உருக்கும் ஒரு கருமமாகும். ஆனாலும் யுத்தத்தினை நேரடியாக அனுபவித்தவர்களின் வேதனையோடு ஒப்பிடும் போது, இதனையொரு பொருட்டாக கருதவே முடியாது. அதன் மூலம் எனக்குக் கிடைக்கும் சில சௌகரியங்களையும் தட்டிக்கழிக்க முடியாது. சாதாரண மக்களிடமிருந்து கிடைக்கும் தூய அன்பும் , அரவணைப்புமே எனக்குக் கிடைக்கும் அந்த மிகப் பெரிய சௌகரியங்களாகும். இப்போது அவுஸ்திரேலியாவின் அடலெயிட் புத்தகக் கண்காட்சி விழாவிற்காக இங்கு வந்திருக்கும் நான். இந்த நிகழ்ச்சி முடிவடைந்ததும், இங்குள்ள சில இலங்கைத் தமிழர்களுடன் கதைக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அடுத்த ஒருசில விநாடிக்குள்ளேயே



அவர்கள் எனக்காக இராப்போசன விருந்தொன்றினையும் ஏற்பாடு செய்துவிட்டார்கள். எனது ஆவுஸ்திரேலியாவின் பிரசுரிப்பாளர்களால் இதனை நம்பவே முடியவில்லை. இவ்வாறான வரவேற்பும் மரியாதையும் வேறெந்த நூலாசிரியருக்கும் கிடைத்ததை இது வரை நான் காணவில்லை என்றார் எனது நூலின் அவுஸ்திரேலியப் பிரசுரிப்பாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசுக்கு எதிராக சர்வதேச விசாரணை தேவை

## டெசோ அமைப்பு வலியுறுத்தல்

ஐ.நா. மனித உரிமைப் பேரவைக் கூட்டத்தில் இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்க அரசு முன்மொழியவுள்ள வரைவுத் தீர்மானத்தில் சுயேட்சையான சர்வதேச விசாரணை வேண்டும் என்கிற திருத்தத்தைக் கொண்டு வரும்படி இந்திய அரசை வலியுறுத்தி டெசோ அமைப்பின் சார்பில் இன்று செவ்வாய்க் கிழமை தமிழகம் தழுவிய அளவில் பொது வேலைநிறுத்தம் நடைபெறுமென திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பவை வருமாறு,

ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் அங்கம் வகிக்கும் 47 உறுப்பு நாடுகளில் ஏறத்தாழ 30 நாடுகள் இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா முன்மொழிந்துள்ள தீர்மானத்தை ஆதரிப்பதாக வெளிப்படையாக அறிவித்துள்ளன. ஆனால், இந்திய அரசு தம்முடைய உறுதியான நிலைப்பாட்டை இன்னும் வெளிப்படுத்தவில்லை.

இந்திய நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நடைபெற்ற விவாதத்தின்போது தமிழகத்தைச் சேர்ந்த அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் அகில இந்திய அளவிலான பிற கட்சித் தலைவர்களும் உறுப்பினர்களும் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகக் குரல் எழுப்பினர்.

இந்திய அரசின் சிங்கள ஆதரவு நடவடிக்கைகளை சுட்டிக்காட்டியதுடன் தீர்மானத்தை ஆதரித்து வாக்களிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர். அத்துடன் மக்களவையில் வெளிவிவகாரத்துறை அமைச்சர் அளித்த பதிலுரை மனநிறைவு அளிக்கவில்லை எனக் கூறி விடுதலைச் சிறுத்தைகள், தி.மு.க., அ.தி.மு.க., தேசிய கட்சிகளான பா.ஜ.க. மற்றும் இடதுசாரிகள் உள்ளிட்ட அனைத்துக் கட்சியினரும் வெளிநடப்புச் செய்தனர். இதன் பின்னரும் இந்திய அரசு தன்னுடைய நிலைப்பாட்டினை தெளிவுபடுத்தவில்லை.

ஆகவே, இந்திய அரசு சிங்களவர்களுக்கு ஆதரவாக செயற்பட்டு விடக்கூடாது என்ற அடிப்படையிலும் அமெரிக்கா முன்மொழியவுள்ள தீர்மானத்தை ஆதரிப்பதுடன் சர்வதேச விசாரணைக்கான திருத்தத்தையும் கொண்டு வர வேண்டுமென வற்புறுத்துகிற வகையிலும் இந்தப் பொது வேலைநிறுத்தம் நடைபெறுகின்றது.

பொதுவேலைநிறுத்தத்தின் மூலம் இந்திய அரசை தமிழினத்திற்கு ஆதரவான நிலைப்பாட்டை மேற்கொள்ள வைப்பது சர்வதேச சமூக அரங்கில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான ஒரு சூழலை உருவாக்கும்.

ஆகவே, இந்தப் பொது வேலைநிறுத்தத்தை ஓர் இயக்கத்தின் போராட்டமாகக் கருதாமல் ஓர் இனத்தின் மீட்சிக்கான போராட்டமாகக் கருதி அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம் என அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# விரைவில் அரசியலுக்கு வருவார் துமிந்த சில்வா

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா விரைவில் அரசியலில் களமிறங்குவார் என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2011 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 8 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாரதலக்ஸ்மன் பிரேமசந்திர உள்ளிட்ட நான்கு பேர் கொல்லப்பட்டதுடன் துமிந்த சில்வா படுகாயமடைந்திருந்தார்.

பாரத கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபராக துமிந்த சில்வா மீது குற்றம் சுமத்தப்பட்டு வழக்குத் தொடரப்பட்டுள்ளது. துமிந்த சில்வா கடந்த வாரம் சிகிச்சை பெற்று நாடு திரும்பி தற்போது நவலோகா தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இவ்வாறான ஓர் பின்னனியில் துமிந்த சில்வா விரைவில் செயற்பாட்டு அரசியலில் களமிறங்குவார் என அவரது சட்டத்தரணி ஹேமந்த வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

துமிந்த சில்வாவிற்கு மேலும் மூன்று மாத காலம் பாராளுமன்றில் விடுமுறை அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# ஒல்லாந்தர் கோட்டையை படையினர் பொறுப்பேற்பு

(மன்னார்)

மன்னார் நுழைவாயில் பகுதியில் அமைந்துள்ள மிகவும் பழைமை வாய்ந்த ஒல்லாந்தர் கோட்டையை படையினர் பொறுப்பேற்க உள்ளதாக வன்னிப் பிரதேசத்துக்கான கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஒல்லாந்தர் கோட்டையின் பராமரிப்பு மற்றும் அதனை நிர்வகிக்கும் பொறுப்பு என்பனவற்றை படையினரிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக வன்னிப் பிரதேசத்திற்கான கட்டளைத் தளபதி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவத்தினரிடம் இந்தக் கோட்டை ஒப்படைக்கப்பட்டதன் பின்னர் உல்லாசப் பயணிகளைக் கவரும் வகையில் உணவகமொன்று அங்கு அமைக்கப்படும்.

தற்போது இந்த ஒல்லாந்தர் கோட்டை அதன் புராதனத் தன்மைக்குப் பங்கம் ஏற்படாதவாறு படையினரால் புனரமைக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# வெள்ளிமலை மீள்குடியேற்ற கிராமத்தில் அடிப்படை வசதிகள் சீராக்கப்படவில்லை

(மன்னார்)

முசலி வெளிமலை மீள்குடியேற்ற கிராமத்தில் வாழும் மக்களின் அடிப்படை வசதிகள் இன்னும் செய்து கொடுக்காமையினால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்த கால யுத்தத்தினால் எமது கிராமம் மற்றும் அயல் மீள்குடியேற்ற கிராமங்களான மணற்குள மான இலந்தைக்குளம் மற்றும் பண்டாரவெளி மோசமான பாதிப்புக்களை எதிர்கொண்ட கிராமங்கள் ஆகும். மிகவும் வறுமைக் கோட்டிற்கும் கடல் தொழில் மற்றும் விவசாய தொழில்களை நம்பி இம் மக்கள் வாழ்க்கை நடத்துகின்றனர்.

இக் கிராமத்திற்குள்ளே வருவதற்கு பல வீதிகள் இருந்து சில வீதிகள் செப்பனிடாமலும் செய்த வீதிகள் இன்னும் திருத்தப்படாமலும் இருப்பதன் காரணமாக பல வருடகாலமாக இம் மக்கள் பல பிரச்சினைக்கு முகம் கொடுக்கின்றனர். இப்பிரதேசத்திலுள்ள கிணற்று நீர் குடிப்பதற்கு உகந்ததாக இல்லை. முசலி பிரதேச சபைக்கு அதிகமான வருமானங்கள் வருகின்ற போதும் அக்கிராம மக்களுக்கு பணத்திற்கு குடி நீர் வழங்குகின்றனர்.

அதேபோன்று தேவையான வேளையில் குடிநீர் வழங்கப்படுவதும் இல்லை. குறிப்பு முசலி பிரதேச சபையினால் கடந்த வருடம் செப்பனிட்ட பண்டாரவெளி, பொற்கேனி, பிரதான வீதி தற்போது போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் உள்ளது.

அதேபோன்று முசலி பிரதேசத்தில் உள்ள அதிகமான வீதிகள் உடைந்து குன்றும் குழியுமாக காணப்படுகின்றன.

எனவே, இனிவரும் காலங்களில் பொது வேலைக்கு ஒப்பந்தக்காரர்களை நியமிக்கும் போது அவர்களின் வேலையின் தன்மையினையும் கவனம் செலுத்துமாறு அவர்கள் கேட்டுள்ளனர். (அ-2)

# மாத்தளை மனித எலும்புக்கூடுகள் குறித்த அறிக்கை அடுத்த வாரம்

(கொழும்பு)

மாத்தளை வைத்தியசாலையில் இருந்து மீட்கப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பான அறிக்கை அடுத்த வாரமளவில் வெளியிடப்படும் என பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் பேராசிரியர் ராஜ் சோமதெர தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார மாத்தளை வைத்தியசாலை வளா கத்தில் மீள்கப்பட்ட சடலங்கள் இயற் கையாக மரணித்தவர்களுடையது அல்ல என்று தெரிவித்திருந்தார்.

தமக்கு இது தொடர்பில் இரகசிய தகவல் கிடைத்துள்ளதாக கூறியுள்ளார்.

துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டவர்களுடைய சடலங்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

எனினும் இதனை நிராகரித்துள்ள பேராசிரியர் இறுதி அறிக்கையின் பின்னர் இது குறித்து உறுதியாக கூறமுடியும் என்று கூறியுள்ளார்.

இந்த அறிக்கை எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை அளவில் வெளியிடப்பட்டவுள்ளது.

இந்தப் பகுதியில் இருந்து 154 மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)




★ 1610-ஜேக்கப் டி லா கார்டி தலைமையில் சுவீடன் படைகள் மொஸ்கோவைக் கைப்பற்றின.

★ 1664-நியூ ஜேர்சி பிரித்தானியாவின் குடியேற்ற நாடானது.

★ 1879-ஆங்கிலோ-சூலு போர்: நூற் றுக்கும் அதிகமான ஆங்கிலப் படைகள் சூலுக்களினால் சுற்றிவளைக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டன.

★ 1894-முதற் தடவையாக கொக்ககோலா மென்பானம் கண்ணாடிப் புட்டியில் அடைத்து விற்கப்பட்டது.

★ 1913-அவுஸ்திரேலியாவின் வருங்கால தலைநகர் அதிகாரபூர்வமாக கான்பரா எனப் பெயரிடப்பட்டது. கான்பரா அமைக்கப்படும் வரையில் 1927 வரையில் மெல்போர்ன் தற்காலிகத் தலைநகராக இருந்து.

★ 1918-215 ஆண்டுகளாக ரஷ்யாவின் தலைநகராக இருந்த சென் பீட்டர்ஸ்பேர்க் தலைநகர் அந்தஸ்து மாற்றப்பட்டு மொஸ்கோ தலைநகராக்கப்பட்டது.

★ 1930-மகாத்மா காந்தி பிரித்தானிய ஆட்சியாளரின் உப்பு ஆதிக்கத்துக்கு எதிராக 200 மைல் நீள தண்டி யாத்திரையை ஆரம்பித்தார்.

★ 1938-ஜேர்மனியப் படைகள் அவுஸ்திரேலியாவை ஆக்கிரமித்தன. மறுநாள் இணைப்பு அறிவிக்கப்பட்டது.

★ 1940-குளிர்காலப் போர்: பின்லாந்து மொஸ்கோவுடன் அமைதி உடன்பாட்டிற்கு வந்தது. கரேலியாப் பகுதி முழுவதும் சோவியத் ஒன்றியம் பெற்றுக் கொண்டது. பின்லாந்துப் படைகளும் மீதமிருந்த மக்களும் உடனடியாக வெளியேறினர்.

★ 1968-மொரீசியஸ் பிரித்தானியாவிடம் இருந்து விடுதலை பெற்றது.

★ 1992-மொரீசியஸ் பொதுநலவாய அமைப்பினுள் குடியரசானது.

★ 2006-தென்னாபிரிக்கா ஒருநாள் சர்வதேச துடுப்பாட்ட மொன்றில் 438/9 ஓட்டங்களைப் பெற்று அவுஸ்திரேலியாவை (434) வென்று சாதனை படைத்தது.

பிறப்பு

★ 1925-லியோ எசக்கி, நோபல் பரிசு பெற்ற ஜப்பானியர்

இறப்பு

★ 1991-றாக்னர் கிறனிற், நோபல் பரிசு பெற்றவர் (பி.1900)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. தீர்மானம்!

# இலங்கையை இரகசியமாக காக்கும் இந்தியா!

இலங்கைப் பிரச்சினையில் இந்தியாவுக்கு இரட்டைமுகம்-இரட்டை நாக்கு என்று உங்கள் தமிழக அரசியல்வாதிகள் விமர்சிக்கிறார்கள். ஆனால், இந்தியாவுக்கு ஒரே முகம்தான்-ஒரே நாக்குதான். அது எப்போதும் இலங்கை அரசுக்கு ஆதரவாக இருக்கும் என்கிறார்கள் இந்தியத் தலைநகரத்தில் உள்ள உயரதிகாரிகள். அவர்களே மேலும் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் கொடூரமாக சுட்டுக்கொல்லப்பட்ட புகைப்படம் இந்திய நாடாளுமன்றம் வரை அதிர்வை ஏற்படுத்தியது.

அப்படி ஒன்று (பாலச்சந்திரன் படுகொலை) நடந்திருந்தால் அது எனக்குத் தெரிந்திருக்கும். இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் யாராவது அதை செய்திருப்பார்களேயானால் நான் அதற்குப் பொறுப்பேற்றுக் கொள்வேன். ஆனால், அப்படி ஒன்று நடக்கவேயில்லை. நாங்கள் அதை முழுமையாக மறுக்கிறோம் என்று இந்தியாவின் பிரபல ஆங்கில நாளேட்டிற்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அளித்த பேட்டி தலைப்புச் செய்தியாக வெளிவந்தது. அந்தப் பேட்டியிலேயே ஐ.நா.மனித உரிமை ஆணையத்தில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானத்தில் இந்தியாவின் நிலை பற்றி கருத்துக் கூறியிருக்கும் ஜனாதிபதி இலங்கைக்கு அருகில் உள்ள நாடு நட்பு நாடு என்ற அடிப்படையில் தான் என்ன செய்யவேண்டும் என்பதை இந்தியா உணர்ந்தே இருக்கிறது. நான் இந்தியாவுக்கு கட்டளையிட முடியாது என்றும் கூறியிருக்கிறார்.

தமிழகத்தில் உள்ள அத்தனை அரசியல் கட்சிகளும் தமிழுணர்வு அமைப்புகளும் ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்கவேண்டும் என்று குரல் கொடுத்து வரும் நிலையில் நட்பு நாடான இந்தியா தங்கள் பக்கம்தான் நிற்கும் என்று இலங்கையால் எப்படிப் பேசமுடிகிறது. அதுவும் இந்தியாவைச் சேர்ந்த ஆங்கில பத்திரிகையிலேயே எப்படி அதனை முன்பக்க செய்தியாக வெளியிடச் செய்யமுடிகிறது என்பதே டில்லியில் உள்ள பத்திரிகையாளர்களிடையே நடைபெறும் விவாதமாகும். அவர்கள் இது குறித்து வெளியுறவுத்துறை அதிகாரிகளிடம் பேசும்போது பல தகவல்கள் கிடைத்துள்ளன.

மனித உரிமை ஆணையத்தில் மார்ச் 4 ஆம் திகதியன்று அமெரிக்காவின் தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதற்கு முதல்நாளே (மார்ச் 3) அந்தத் தீர்மானத்தின் முக்கிய அம்சங்கள் புலம்பெயர்ந்த தமிழர்களிடமும் இந்திய அதிகாரிகளிடமும் கசியத் தொடங்கின. போர்க்குற்றங்கள் பற்றி விசாரிக்க ஐ.நா.சார்பில் சுய அதிகாரமுள்ள ஓர் அமைப்பை இலங்கைக்கு அனுப்பவேண்டும் என்பதும் இலங்கை அரசே நியமித்த எல்.எல்.ஆர்.சி.எனப்படும் போர்ப்படிப்பினைகள் மற்றும் நல்லிணக்கக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டும் என்றும் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் நல்வாழ்வுக்கான தன்னுடைய கடமைகளை நிறைவேற்றுவதில் தனக்குள்ள பொறுப்புக்களை உணர்ந்து இலங்கை அரசாங்கம் செயற்படவேண்டும் என்றும் அந்தத் தீர்மானங்கள் வரைவு செய்யப்பட்டிருப்பதாக கடந்த ஞாயிறன்று கசிந்த தகவல்களின் தொடர்ச்சியாக இவற்றுக்கு ஒத்துழைக்கவோ பொறுப்பேற்கவோ இலங்கை அரசாங்கம் தவறினால் ஈரானைப்போல இலங்கை மீது பொருளாதாரத் தடைகள் விதிக்க ஐ.நா. சபை மூலமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் கடுமையான வாசகங்கள் அந்தத் தீர்மானத்தில் இருப்பதாகவும் தகவல் வெளிவந்துள்ளது.


ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் உள்ள 47 நாடுகளில் அமெரிக்காவின் தீர்மானத்திற்கு ஐரோப்பிய நாடுகள் உட்பட 30 நாடுகளின் ஆதரவு உறுதியாகி விட்டது. மேலும் சில நாடுகளும் ஆதரிக்க முன்வந்துள்ளன. இந்த ஆணையத்தில் இலங்கையின் கூட்டாளிகளான சீனாவும் ரஷ்யாவும் இல்லை. இந்தியா மட்டும்தான் இருக்கிறது. அதனால் இந்தியா இந்தத் தீர்மானத்தை ஆதரிப்பது மிக முக்கியமானது என்பதை தமிழகக் கட்சிகள் மட்டுமல்ல. உலக நாடுகளும் எதிர்பார்க்கின்றன. ஆனால்,இந்தியா இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கும் நிலையில் இல்லை.

தமிழக எம்.பிக்கள் ராஜ்யசபாவில் கொண்டு வந்த சிறப்பு கவனயீர்ப்புத் தீர்மானத்தின் போது பதிலளித்த வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் இலங்கையின் உள் விவகாரங்களில் மத்திய அரசால் தலையிடமுடியாது. இலங்கைக்கு எதிராக அமெரிக்கா தீர்மானத்தைக் கொண்டு வருகிறது என்பதற்காக இந்தியாவும் அதைப்பின்பற்ற வேண்டிய அவசியம் கிடையாது என்று அதிரடியாகவே சொன்னார். தமிழகத்திற்கு வந்த மத்திய இணையமைச்சர் நாராயணசாமியும் இந்தத் தீர்மானத்தை ஆதரிப்பது தொடர்பாக இன்னும் இறுதி முடிவெடுக்கவில்லை என்ற உண்மையைச் சொல்லிவிட்டு பத்திரிகையாளர்களையும் தமிழர்களின் உணர்வையும் சமாளிக்கும் விதத்தில் கடந்த முறை என்ன நிலைப்பாடு எடுக்கப்பட்டதோ அதுவே இப்போதும் மேற்கொள்ளப்படும் என்றார்.

கடந்த முறை ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தைத் தி.மு.க. உள்ளிட்ட தமிழகக் கட்சிகளின் தொடர் அழுத்தத்தால் இந்தியா ஆதரித்தது என்றாலும் அதன் சாரத்தைக் குறைக்கும் வேலையையும் செய்தது என்கின்ற டில்லி அதிகாரிகள் இந்த முறையும் எப்படியாவது அமெரிக்கத் தீர்மானத்தின் வலிமையைக் குறைக்கும் வேலைகளில் இந்தியாவும் இலங்கையும் முழு மூச்சாக உள்ளன என்கின்றார்கள். அவர்களிடம் மேலும் விரிவாகப் பேசினோம்.

இந்தமுறை தீர்மானம் நிறைவேற்றப்படுவது உறுதி. 47 நாடுகளின் முழு ஆதரவுடன் ஒரு மனதாக நிறைவேற்ற வேண்டும் என வல்லரசான அமெரிக்கா எதிர்பார்க்கிறது. ஒரு மனதாக நிறைவேற்றும்போது வாக்கெடுப்புக்கு அவசியமிருக்காது. அது தான் தனக்கு நல்லது என இந்திய அரசும் நினைக்கிறது. வாக்கெடுப்பு இல்லாத தீர்மானம் என்றால் ஆதரவா எதிர்ப்பா என்ற தனது நிலையை இந்தியா வெளிப்படுத்த வேண்டியதில்லை. ஆனால், வாக்கெடுப்பு இல்லாத தீர்மானமாக இது நிறைவேறுவது இலங்கையின் கையில்தான் உள்ளது. கடந்த முறை தீர்மானத்தை எதிர்த்து வாக்களிக்கும்படி பல நாடுகளிடமும் இலங்கை செய்து தோல்வியடைந்தது. இந்தமுறை அப்படி செய்யவேண்டியதில்லை என்றும் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்ற அனுமதிப்பதே இப்போது தன்னைச்சூழ்ந்துள்ள அழுத்தத்தை எதிர்கொள்ள சரியான வழி என்றும் இலங்கை நினைப்பதாக டில்லி அதிகாரிகள் கூறினார்கள். தீர்மானம் நிறைவேறினால் இலங்கைக்குத்தானே நெருக்கடி என்று கேட்டதற்கு தீர்மானத்தில் உள்ள அம்சங்களை நிறைவேற்ற இலங்கை அரசு பொறுப்பேற்றுக்கொள்வதாகக்கூறும் உலக நாடுகளும் அதனை அனுமதிக்கும். இலங்கை இறையாண்மையுள்ள நாடு என்பதால் தன்னுடைய பொறுப்பை நிறைவேற்ற அவகாசம் தேவை எனக்கோரும் ஐ.நா.விதிகளின்படி இதற்கும் அனுமதி கிடைக்கும். அந்த அவகாச நேரம் என்பது அநேகமாக ஒன்றரை ஆண்டுகளாகக் கூட இருக்கலாம். இந்தக்கால இடைவெளியை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என இலங்கை அரசு நினைக்கிறது. அதற்கு இந்தியாவின் உதவியையும் நாடியிருக்கிறார். இந்தியாவும் இதைத்தான் விரும்புகிறது என விரிவாகவே விளக்கினர் வெளியுறவுத்துறை அதிகாரிகள்.

இந்திய வெளியுறவுத்துறை என்பது ஏனைய துறைகளைப் போல அந்தத்துறை அமைச்சரின் கட்டுப்பாட்டில் உள்ளது அல்ல ஆளுமைமிக்க அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. ஈழத் தமிழர்கள் பற்றி ஒருபோதும் கவலைப்படாமல் இலங்கையுடனான நட்புறவையே பெரிதாக நினைக்கும் அவர்கள் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறார்கள் என்ற தகவல் தலைநகர உயர் மட்டத்திலிருந்து கசிந்தது. அண்மையில் சுப்பிரமணியசுவாமி இலங்கை சென்று ராஜபக்ஷவை சந்தித்ததன் பின்னணியும் இதுதான் என்கிறார்கள். தமிழர் பிரச்சினையில் இந்தியாவுக்கு நெருக்கடி கொடுப்பது போன்ற வார்த்தைகளை வெளியிடவேண்டாம் என்றும் ஐ.நா. தீர்மானத்தைப் பொறுத்தவரை ஒரு கட்டத்தில் இலங்கைக்கு ஆதரவாக இந்தியா செயற்படும் வாய்ப்பும் உள்ளது என்றும் ராஜபக்ஷவிடம் சாமி பேசியிருப்பதாகக் கூறுகிறார்கள். மனித உரிமை ஆணையத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானம் ஐ.நா. பொதுமன்றத்திற்குச் செல்லும். அங்கு நிரந்தர உறுப்பு நாடுகளாக உள்ள சீனா, ரஷ்யா போன்றவற்றின் துணையுடன் வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்காமல் செய்யமுடியும் என்பதெல்லாம் இவர்களுக்கு இந்தியா அனுப்பியுள்ள தூது செய்திகளாம்.



சுப்ரமணியசாமி- ராஜபக்சே சந்திப்பு

தமிழக அரசியல் கட்சிகள் தங்களுடைய சொந்த நலன்களுக்காகப் பெயரளவில் போராட்டங்களை நடத்திக்கொண்டுதான் இருக்கும் என்பதே இந்திய அரசின் கணிப்பு. அவற்றைச் சமாதானப்படுத்தும் விதத்தில் ஒன்றிரண்டு தற்காலிக அறிவிப்புக்களை மட்டும் வெளியிட்டுவிட்டு நீண்டகால நோக்கில் இலங்கையைக் காப்பாற்றும் முயற்சிகளை இந்திய அரசு தொடர்ந்து மேற்கொள்ளும் என்று தலைநகர அதிகாரிகள் அரசின் தற்போதைய செயற்பாடுகளை விரிவாகவே சுட்டிக்காட்டினார்கள்.

டில்லியிலிருந்து அக்பர்

நக்கீரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களுக்கு எதிரான பிரசாரங்கள் நிறுத்தப்பட வேண்டும்-மேர்வின் சில்வா

இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் பிழையான பிரசாரங்கள் நிறுத்தப்பட வேண்டும். இஸ்லாமியர்கள் அவர்களது மதத்தை பின்பற்றுவது அவர்களுக்குள்ள உரிமையாகும். அதனை தடுப்பதற்கு முயற்சி செய்பவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க நேரிடும் என பொதுமக்கள் தொடர்பாடல் அமைச்சர் மேர்வின் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் யுத்த பாதிப்புக்குள்ளான பிரதேச பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 500 இற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கட்சனா மருதமடு பாடசாலையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த நிகழ்வில் அமைச்சர் உரைநிகழ்த்துகையில்,இன்று இந்தநாட்டில்யுத்தம் இல்லை. மக்கள் நிம்மதியாக வாழ்கின்றனர். ஆனால், முஸ்லிம்களுக்கெதிரான ஹலால் பிரச்சினையினை ஏற்படுத்தி அதன் மூலம் இனவாதத்தை விதைத்து மனித சுதந்திரத்தை தடுக்கப்பார்க்கின்றனர்.

அன்று விடுதலைப் புலிகள் இங்கிருந்த மக்களை வெளியேற்றினர். இன்று அவர்கள் இல்லை. எனவே, இவர்களால் வெளியேற்றப்பட்ட மக்கள் எங்கிருந்தாலும் தமது சொந்த மண்ணில் மீள்குடியேற்றத்திற்கு வாருங்கள் என்ற அழைப்பினை விடுக்கின்றேன். நீங்கள் மீள்குடியேற வருகின்ற போது அரசாங்கம் உங்களுக்கு தேவையானவற்றை செய்து தர தயராகவுள்ளது.

பெரியமடு கிராமத்தில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் தற்போது மீள்குடியேற்றம் செய்யப்பட்டு வருகின்றனர். மிகுதி மக்களை அங்கு குடியேற்றம் செய்ய அமைச்சர் றிசாத் பதியுதீன் நடவடிக்கையெடுக்கும் போது அந்த இடத்தில் மீள்குடியேற்ற முடியாதவாறு தடைகளை ஏற்படுத்துகின்றனர்.

அமைச்சர் றிசாத் அவர்களே! நீங்கள் தைரியமாக இந்த மக்களை மீள்குடியேற்றம் செய்யுங்கள். அதற்கு எதிராக வரும் தடைகளையும் சவால்களையும் நாம் எதிர் கொள்வோம். இந்த பணியினை மேற்கொள்ள எனது உதவியும் தேவையெனில் இரு வாரங்களுக்கு இங்கு வந்து உங்களோடு நின்று இந்த பணிக்கு உதவி செய்ய நான் தயாராகவுள்ளேன்.

அதேபோல் அரச அதிகாரிகள் மாறலாம். மத குருமார்கள் மாறலாம். மதகுருமார்களின் பணி மக்களுக்கு நல்லதை எடுத்துரைப்பது. அதனை அவர்கள் செய்ய வேண்டும்.

மக்களது தேவைகளை இணங்கண்டு பெற்றுக் கொடுப்பதற்கு அரசியல் வாதிகளாக நாங்கள் இருக்கின்றோம். இந்த நாட்டினை வெள்ளையர்களிடம் இருந்து மீட்பதற்காக போராடியவர்களில் தமிழர்களும் முஸ்லிம்களும் இருக்கின்றார்கள் என்பதை மறந்து செயற்பட முடியாது. இனி இந்நாட்டை இன, மத, மொழி, பிரதேச ரீதியாக பிரிக்க முடியாது.

அதற்கு இடம் கொடுக்கப்படமாட்டாது என்பதை கூறிக்கொள்ள விரும்புகின்றேன் என்றும் அமைச்சர் கூறினார். (அ-2)

## பிக்குகளை பாராட்டுகிறார் ஜனாதிபதி மஹிந்த

பௌத்த மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்காக பிக்குகள் எடுத்து வரும் முயற்சி பாராட்டுக்குரியது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டபோது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு உரை நிகழ்த்துகையில்,

காலனித்துவ ஆட்சிக் காலத்தில் பௌத்த மக்களின் உரிமைகளை பறிக்க முயற்சி எடுக்கப்பட்டது. எனினும் குறித்த காலப் பகுதியில் பௌத்த மக்களின் உரிமைகளை உறுதி செய்ய பௌத்த பிக்குகள் பாரியளவில் சேயைாற்றியுள்ளனர்.பௌத்த பிக்குகளுக்கு இடையிலான ஒற்றுமை நாட்டின் சுபீட்சத்திற்கு வழிகோலும். (அ-2)

## ஒரு பெரல் சாராயம் மீட்பு

கரவெட்டி சக்கு சம்பர் கிராம வீடொன்றிலிருந்து ஒரு பெரல் சாராயத்தை நெல்லியடி பொலிஸார் நேற்று முன்தினம் மீட்டுள்ளனர். பொலிஸாரின் திடீர் சோதனையை அடுத்து இச் சாராயம் சிக்கியுள்ளது. இதனுடன் தொடர்புடைய நபருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ப்படவுள்ளது. (அ)

# பிரேரணையின் நான்காம் காரணி நாட்டுக்கு ஆபத்தை ஏற்படுத்தும்

## இலங்.ம.உ.ஆணைக்குழுவின் தலைவர்

(கொழும்பு)

அமெரிக்காவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மானத்தின் 4 ஆம் சரத்து ஆபத்தானது என மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் பிரதீபா மஹாநாமாஹேவா தெரிவித்துள்ளார்.

சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை மாநாட்டில் அமெரிக்கா இலங்கை தொடர்பில் தீர்மானமொன்றை முன்வைத்துள்ளது.

இந்தத் தீர்மானத்தின் நான்காம் காரணி நாட்டுக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில் அமைந்துள்ளது.

குறிப்பாக நாட்டின் சுயாதீனத்தன்மைக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில் அமைந்துள்ளது.

ஏதேனும் ஓர் காரணத்தினால் இந்தத் தீர்மானம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டால் நாட்டுக்கு பாதிப்பு ஏற்படக் கூடும்.

நாட்டில் ஏற்படக் கூடிய குழப்ப நிலைமைகளின் போது அரசாங்கத்தின் அனுமதியின்றி குழுவொன்றை அனுப்பி விசாரணை நடத்தக்கூடிய வகையில் தீர்மானத்தின் நான்காம் காரணி அமைந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# கண்டல் இறுவெட்டு இன்று வெளியீடு

(பூந்தோட்டம்)

விஞ்ஞான கற்கையை அடிப்படையாக கொண்டு உருவாக்கப்பட்ட கண்டல் இறுவெட்டு வெளியீடு இன்று செவ்வாய்க்கிழமை வவுனியா தெற்கு கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா தலைமையில் இடம்பெறும். விஞ்ஞான கற்கை நிலையத்தின் முகாமையாளர் அ.ஜெய்க்கீசனால் தயாரிக்கப்பட்ட இவ் இறுவெட்டு காலை 9 மணிக்கு சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள வவுனியா மாவட்ட விஞ்ஞான களகற்கை நிலையத்தில் வெளியிடப்படவுள்ளது.

இந்நிகழ்வில் வெளியீட்டு உரையினை வட மாகாண விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.ஏ.சிவனருள்ராஜா ஆற்றி வெளியிட்டு வைக்க வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி பராசக்தி கணேசலிங்கம் பெற்றுக் கொள்வார். (அ-2-266)

# கணனி குற்றவியல் சட்டம் சீர்திருத்தப்படவேண்டும்

## அமைச்சர் ரஞ்சித் வலியுறுத்து

இலங்கையின் கணனி குற்றவியல் சட்டத்தை சீர்திருத்தம் செய்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளதாக தகவல் தொழில்நுட்ப அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறுத்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சுடன் விரைவில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளோம். கணனி குற்றவியல் சட்டம் கடந்த 2007ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இது உருவாக்கப்பட்டு 5 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் அது சீர்திருத்தத்திற்கு உட்படுத்தப்பட வேண்டியது அவசியம்.

கடந்த சில மாதங்களில் இலங்கையின் 50 இற்கும் மேற்பட்ட அரசாங்க இணையத் தளங்கள் இணைய முடக்கலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இந்த நிலையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை மக்கள் மத்தியில் கணனி அறிவு 39 சதவீதமாக காணப்படுகின்ற அதேநேரம் பெரும்பாலான மக்கள் இணைய முடக்கல் தொடர்பில் அறியாதவர்களாக இருக்கின்றனர் என்றார். (அ-2)

# டெசோ வேலை நிறுத்தத்தை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றில் வழக்கு

(சென்னை)

டெசோ அமைப்பு இன்று நடத்தும் முழு அடைப்புப் போராட்டத்தை தடை செய்யக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இலங்கை தமிழர்களுக்காக அமைக்கப்பட்ட டெசோ அமைப்பு இலங்கை தமிழர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் ஐ.நா. தீர்மானத்தில் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களிப்பதை வலியுறுத்தியும் இன்றைய தினம் தமிழகத்தில் முழு வேலை நிறுத்தம் செய்யப் போவதாக அறிவித்தது.

இதனை எதிர்த்து வழக்கறிஞர் பாலசுப்ரமணியம் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனு நேற்றுக் காலை தலைமை நீதிபதி ராஜேஷ் குமாரிடம் வழங்கப்பட்டது.

அப்போது மனுவில் எதிர்மனுதாரர் குறிப்பிடப்படாமல் இருந்ததை சுட்டிக்காட்டிய நீதிபதி அதை குறிப்பிடுமாறு உத்தரவிட்டார். (அ-2)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



*மலர்வு:*
*09.09.1958*

*உதிர்வு:*
*22.02.2012*

*திதி: 12.03.2013*

எமது அன்புக்குரிய இல்லத்தரசி

## திருமதி அருந்தவம் செல்வரெத்தினம்

ஓர் ஆண்டு வந்தது அம்மா
எம் உள்ளம் எல்லாம் வெந்தது அம்மா
பாசத்தின் விளக்கே பண்பின் தெய்வமே
ஓடி மறைந்தாய் எம்மை எல்லாம் கதறவிட்டு
என்றும் எம் கண்களில் கண்ணீர் கசியுதம்மா
அள்ளி கொடுத்த கைக்கு என்னம்மா நடந்தது
தேடுகின்றோம் உன் வண்ண நிலா முகத்தை
தேடி வாராயோ எங்களோடு வாழ மீண்டும் ஒரு முறை
காத்திருக்கின்றோம் கண்மணியே
அருந்தவம் இருந்து பெற்ற அருந்தவமே
ஓடி வந்திடடா மீண்டும் ஒருமுறை
[illegible] நீட்டி நிற்கின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**உம் பிரிவால் வாடும் :**
குடும்பத்தினர்
கணவர் செல்வரெத்தினம்
மாரியம்மன் வீதி, திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்ணாவிரதமிருந்த லயோலா கல்லூரி மாணவர்கள் கைது

## மாணவர்கள் கொந்தளிப்பு

இலங்கை மீது அனைத்துலக போர்க்குற்ற விசாரணை நடத்துவதற்கு இந்தியா ஆதரவளிக்க வேண்டுமென வலியுறுத்தி சென்னையில் உண்ணாவிரதம் இருந்து வந்த லயோலா கல்லூரி மாணவர்கள் நேற்று நள்ளிரவு தமிழ்நாட்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கைக்கு எதிராக ஜெனீவாவில் அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்திற்கு இந்தியா ஆதரவு அளிக்க வேண்டும். இல்லாவிடில் தமிழர்கள் சமவுரிமை பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கை மீது பொருளாதார தடை விதிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட 8 கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னை கோயம்பேடு பேருந்து நிலையம் அருகே லயோலா கல்லூரி மாணவர்கள் சாகும்வரையான உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.

நேற்றுமுன்தினம் மூன்றாவது நாளாகத் தொடர்ந்த இந்த போராட்டத்திற்கு அரசியல் கட்சியை சேர்ந்த தலைவர்கள் பலரும் ஆதரவு தெரிவித்தனர்.

இந்நிலையில் உண்ணாவிரதம் இருந்து வந்த லயோலா கல்லூரி மாணவர்கள் எட்டு பேரையும் பொலிஸார் நேற்று முன்தினம் நள்ளிரவில் திடீரென கைது செய்தனர்.

மாணவர்களின் உடல்நிலையை கருத்திற் கொண்டே அவர்கள் கைது செய்யப்பட்டு ராயப்பேட்டையில் உள்ள அரச மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் மாணவர்களுக்கு ஆதரவாக உண்ணாவிரதப் பந்தலில் இருந்தவர்களையும் கைது செய்த பொலிஸார் அருகில் உள்ள சமுதாய நலகூடத்தில் தடுத்து வைத்துள்ளனர்.

மேலும் உண்ணாவிரதம் இருந்த பந்தல் எவரும் நுழைய முடியாதவாறு தடை செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை தாம் நள்ளிரவில் கைது செய்யப்பட்டதற்கு மாணவர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளதுடன் மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதை பல்வேறு தமிழ் அமைப்புக்களும் கண்டித்துள்ளன.

இம்மாணவர்களுக்கு தமிழகம் முழுவதும் மாணவர்களின் ஆதரவு வலுத்து வந்த நிலையில் நேற்று மாணவர்களுக்கு ஆதரவாக அனைத்து கல்லூரி மாணவர்களும் வகுப்பு புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர் என்று அறிவித்ததையடுத்தே உண்ணாவிரப் போராட்டத்தை வலுக்கட்டாயமாக பொலிஸார் முடிவுக்கு கொண்டு வந்தனர்.

இருப்பினும் திட்டமிட்டபடி தமிழகம் முழுவதும் அனைத்துக் கல்லூரி மாணவர்களும் நேற்று வகுப்புப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும் அம் மாணவர்களுக்கு ஆதரவாக திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரி மாணவர்கள் 10 பேர் கால வரையறையற்ற உண்ணாவிரதத்தை மேற்கொண்டுள்ளனர்.(அ-5)



மொரீசியஷ் நாட்டிற்கு அரசுமுறை பயணமாக செல்லும் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜிக்கு பிரதமர் மன்மோகன்சிங் மலர் கொத்து கொடுத்து வாழ்த்து தெரிவித்ததைப் படத்தில் காணலாம்.

# அமெரிக்காவும் தலிபான்களும் இணைந்து செயற்படுகின்றன

## ஆப்கான் ஜனாதிபதி குற்றச்சாட்டு

(காபூல்)

அமெரிக்க படைகள் வெளியேறுவதை தடுக்க அமெரிக்காவும் தலிபான் அமைப்பும் இணைந்து செயற்படுகின்றன என ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீத் கர்சாய் தெரிவித்துள்ளார்.

கடந்த 2001ஆம் ஆண்டு முதல் அமெரிக்க படையினர் ஆப்கானிஸ்தானில் தங்கியுள்ளனர். இந்நிலையில் ஆப்கானில் ஆட்சியை இழந்த தலிபான்கள் அமெரிக்க படை மீது தற்கொலை படை தாக்குதலை நடத்தி வருகின்றனர்.

மேலும் அடுத்த ஆண்டுக்குள் அமெரிக்க படைகள் ஆப்கானை விட்டு வெளியேறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி கர்சாய் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் 2014ஆம் ஆண்டு இறுதியில் அமெரிக்க படைகள் வெளியேற முடிவு செய்யப்பட்டு உள்ளன. இந்நிலையில் அப்படைகள் சென்றுவிட்டால் தலிபான்களின் பயங்கரவாத தாக்குதல்கள் அதிகரிக்கும் என்ற தோற்றத்தை உருவாக்க அமெரிக்கா நினைக்கிறது.

அமெரிக்க அரசு ஒருபுறம் தலிபான்களுடன் சண்டையிட்டுக் கொண்டே மறுபுறம் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறது. படைகள் வெளியேறுவதை தடுக்க அமெரிக்காவும் தலிபானும் இணைந்து செயற்படுகின்றன.

உண்மையில் ஆப்கானில் அமெரிக்க படைகள் தொடர்ந்து இருக்க வேண்டும் என தலிபான் விரும்புகிறது என்று மேலும் தெரிவித்துள்ளார்.(அ-5)

# துப்பாக்கியால் சுட்டு மரண தண்டனை

## சவுதியில் ஆராய்வு

மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களின் தலையை துண்டிப்பவர்களுக்கு ஆள்பற்றாக்குறை நிலவி வருவதால் துப்பாக்கியால் சுட்டு மரண தண்டனையை நிறைவேற்றுவது தொடர்பில் சவுதியில் அமைக்கப்பட்ட குழுவொன்று ஆராய்ந்து வருவதாக சவுதி தினசரியான அல்யுஅம் செய்தி வெளியிட்டுள்ளது.

துப்பாக்கியால் சுட்டு மரண தண்டனையை நிறைவேற்றுவது இஸ்லாமிய சட்டத்தை மீறுவதாகாது என இந்த குழு கூறியுள்ளது.

வல்லுறவு, கொலை, சமய மறுப்பு, ஆயுதம் தாங்கிய கொள்ளை, போதை பொருள்கடத்தல் ஆகிய குற்றங்களுக்காக பழைமை வாத சவுதி அரேபிய இராச்சியத்தில் ஷரிஆ சட்டத்தின் கீழ் மரண தண்டனை விதிக்கப்படுகின்றது.

இந்நாட்டில் கடந்த 2012 ஆம் ஆண்டு 76 பேருக்கு தலை வெட்டி மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த வருடத்தில் இது வரையில் 3 பேருக்கு தலை துண்டிக்கப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

தலையை துண்டித்து மரண தண்டனை நிறைவேற்றும் முறை சவுதி அரேபியாவுக்கும் சர்வதேச சமுதாயத்துக்கும் இடையில் முறுகல் நிலைக்கு காரணமாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(அ-2)

# கடத்தப்படவிருந்த 168 குழந்தைகள் மீட்பு

கொல்கத்தாவிற்கு கடத்தப்படவிருந்த 168 குழந்தை தொழிலாளர்களை பொலிஸார் இராஜஸ்தான் அதிவேக புகையிரதத்தில் இருந்து மீட்டுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து தெரியவருவதாவது, இராஜஸ்தான் மாநிலம் ஜெய்பூரில் இருந்து கொல்கத்தாவிற்கு குழந்தை தொழிலாளர்களை ரயில் மூலம் ஒரு கும்பல் கடத்திச் செல்வதாக பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளது.

இதையடுத்து, அஜ்மீர்- சியல்டா அதிவேக புகையிரதத்தை பொலிஸார் சோதனையிட்ட போது 5 வயதிலிருந்து 12 வயதிற்குட்பட்ட 168 குழந்தை தொழிலாளர்களை கொல்கத்தாவிற்கு ஒரு கும்பல் கடத்திச் செல்வது கண்டுபிடிக்கப்பட்டது.

கடத்தி செல்லப்படவிருந்த குழந்தைகளை மீட்ட பொலிஸார் அவர்களை பெற்றோர்களிடம் ஒப்படைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் ஜெய்ப்பூர் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் உள்ள வளையல் தொழிற்சாலைகளில் முன்னர் வேலை பார்த்து வந்த இவர்களுக்கு கொல்கத்தாவில் அதிக சம்பளம் பெற்றுத் தருவதாக கூறி கடத்திச் சென்ற 12 பேரையும் புகையிரதத்துறை பொலிஸார் கைது செய்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-5)

# திபெத்தின் முக்கிய நகரங்களை இணைக்க ரயில் பாதை அமைப்பு

இந்திய எல்லைக்கு அருகே திபெத்தில் சீனா புகையிரத பாதை அமைத்து வருகிறது.

சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ள திபெத்தில் புத்த மதத்தினர் அதிகம் வாழ்கின்றனர்.

திபெத்தை தனி நாடாக அறிவிக்கக்கோரி தலாய் லாமா தலைமையில் திபெத்தியர்கள் போராடி வருகின்றனர்.

இக்கோரிக்கையை வலியுறுத்தி இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட புத்த துறவிகள் தீக்குளித்து உயிரிழந்து உள்ளனர்.

இந்நிலையில் திபெத்தின் முக்கிய நகரங்களை இணைக்கும் வகையில் ரயில் பாதைகள், விமான நிலையங்களை அமைக்கும் நடவடிக்கையில் சீனா ஈடுபட்டுள்ளது.


இதேவேளை, திபெத் தலைநகர் லாசா, பாம்டா உள்ளிட்ட ஐந்து நகரங்களில் சீனா விமான நிலையங்களை அமைத்துள்ளது.

இது குறித்து திபெத் நிர்வாக தலைவர் நோசாங் ஜம்கான் குறிப்பிடுகையில், சீனாவின் வடமேற்கு மாகாணமான கிங்காய் மற்றும் திபெத் தலைநகர் லாசா இடையேயான புகையிரத பாதை, திபெத்தின் இரண்டாவது பெரிய நகரமான சிகாசே வரை நீட்டிக்கப்படுகிறது. இந்த ஆண்டு இறுதிக்குள் இப்பணி நிறைவு பெறும் என்று தெரிவித்துள்ளார்.

குறித்த நகரங்கள் சிக்கிம், அருணாச்சல பிரதேசம் உள்ளிட்ட இந்திய மாநிலங்களுக்கு அருகில் அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (அ-5)

# இப்படியும் ஒரு திருமணம்;

## 8 வயது சிறுவனுக்கு 61 வயது மனைவி



தென்னாபிரிக்காவின் தஷவான் நகரில் 8 வயதான சிறுவனொருவன் 61 வயதான பெண்ணொருவரை திருமணம் செய்த சம்பவமானது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஐந்து பிள்ளைகளின் தாயாரான ஹெலன் ஷபங்கு என்ற பெண்ணே செனெல் மஸிலெலா என்ற சிறுவனை சுமார் 100 விருந்தினர்கள் முன்னிலையில் திருமணம் செய்துள்ளார்.

ஹெலனும் செனெல்லும் ஒருவருக்கொருவர் மோதிரம் மாற்றிக் கொண்டனர். தனது இறந்த மூதாதையின் உத்தரவின் பேரிலேயே இந்தத் திருமணம் நடத்தப்பட்டுள்ளதாக சிறுவனான செனெல் தெரிவித்துள்ளார்.

எப்படியேனும் மேற்படி மணமகனும் மணமகளும் திருமணப் பதிவில் கைச்சாத்திடவில்லை என்பதுடன் ஒன்றாக வாழப் போவதும் இல்லை.

சட்டபூர்வமான திருமணமாகவன்றி ஒரு பாரம்பரிய சடங்காகக் நடத்தப்பட்ட இத்திருமணத்துக்கு சிறுவன் செனெல்லின் குடும்பத்தினர் ஆயிரத்து 500 ஸ்ரேலிங் பவுண்ஸை செலவிட்டுள்ளனர்.(அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாரும் நீதியை விரும்புகின்றனர். ஆனால் அடுத்தவர் விடயத்தில் மட்டும்.

–ஆண்ட்ரூ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஒழுங்கு கட்டுப்பாட்டை பொலிஸார் நிலைநிறுத்த வேண்டும்

தென் பகுதியின் தற்போதைய ஒழுங்கு கட்டுப்பாட்டு நிலைமைகள் பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளதை ஏற்றுத்தானாக வேண்டும்.

ஒருகாலத்தில் கொழும்பு மாநகரில் நடமாடுதல் என்பது மிகவும் பயங்கரமானதாக இருந்தது.

ஆட்டோக்களில் ஏறினால் உரிய இடத்துக்கு போய்ச் சேர முடியுமா? என்ற பயம். கூடவே வழிப்பறிக் கொள்ளைகள், பஸ்களில் நடந்தேறும் பிக்பொக்கற் மோசடிகள், பாதாள உலகக் கும்பல்களின் வெறியாட்டங்கள், போதைப்பாவனையாளர்களின் அட்டகாசங்கள் என்பன மிகக் கணிசமான அளவு குறைவடைந்து விட்டன.

இப்போது கொழும்பில் ஆட்டோக்களில் ஏறினால் மீற்றர் முறைக் கட்டணங்கள், நாகரிகமாகக் பழகும் பண்பாடுகள் என்றவாறான முன்னேற்றங்கள் சுட்டிக்காட்டப்பட வேண்டியது அவசியமானதாகும்.

அதேநேரம், ஒருகாலத்தில் எந்தப் பயமும்– பயங்கரமும் இன்றி நடமாட முடியும் என்ற எங்கள் வட மாகாணத்தின் நிலைமை இப்போது மிகவும் மோசமாகிவிட்டது.

எங்கும் பயங்கரமான சூழல். ஒரு பெண் பட்டப் பகலில் தங்க நகை அணிந்து சென்றால் போதும் ஆளைத் தள்ளிவிழுத்தி தங்க நகையைப் பறித்து எடுத்துவிடும் பயங்கரமும் நடந்தேறும்.

இதுதவிர கோஷ்டி மோதல்கள், அடிதடிச் சண்டைகள், நாட்டாமைத்தனங்கள், மதுபோதையில் மோட்டார் சைக்கிள் ஓட்டும் ஒழுங்கீனங்கள், எங்களை எதுவும் கேட்க முடியாதென்ற குழுநிலைச் சண்டித்தனங்கள் என்றவாறு வட மாகாணம் ஒழுங்குக் கட்டுப்பாட்டை இழந்து வருகிறது.

ஒரு குற்றத்திற்காக இன்று கைது செய்யப்பட்டால் நாளை விடுதலை என்றளவில், அடாவடித்தனங்களிலும் சண்டித்தனங்களிலும் ஈடுபாடுள்ளவர்கள் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட வேண்டியவர்களுடன் மிகவும் நெருக்கமான உறவையும் செல்வாக்கையும் கொண்டுள்ளனர்.

இதனால் குற்றச்செயல்கள் நாளுக்குநாள் அதிகரித்த வண்ணமுள்ளன. அப்பாவிப் பொது மக்கள் பயந்து போயுள்ளனர்.

வட மாகாணத்தில் நடந்துள்ள குற்றச்செயல்கள் தொடர்பில் பதிவு செய்யப்பட்ட முறைப்பாடுகள் வட மாகாணத்தின் தற்போதைய நிலை எப்படியுள்ளது என்பதை வெளிப்படுத்துவதற்குப் போதுமானதாகும்.

நாளாந்தம் வீதிகளில் நடந்தேறும் விபத்துக்கள், அதனால் ஏற்படுகின்ற மரணங்கள் சட்டம் ஒழுங்கை கடைப்பிடிப்பதில் இருக்கக்கூடிய இறுக்கங்கள் போதாது என்பதையே வெளிப்படுத்தும்.

எனவே இதுவிடயத்தில் பொலிஸார் விழிப்படைய வேண்டும். சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநிறுத்தி மக்கள் அச்சமற்ற வாழ்வு வாழ உதவ வேண்டும். இது அவசரமும் அவசியமும் ஆகும்.

# ஜெனிவா தீர்மான வரைபை திருத்த அமெரிக்காவை கோரியது இலங்கை

## கொழும்பு ஊடகம் தகவல்

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 22-வது அமர்வில் கொண்டு வரப்பட்டுள்ள தீர்மான வரைபில் திருத்தங்களைச் செய்யுமாறு அமெரிக்காவிடம் இலங்கை அரசாங்கம் கோரிக்கை விடுத்திருந்ததாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை மீதான தீர்மான வரைபின் நகலை ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் அங்கத்துவ நாடுகளின் பிரதிநிதிகளிடம் அமெரிக்கா கடந்த வாரம் கையளித்திருந்தது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித வுரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தக்கோரும் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளரின் அறிக்கையை வரவேற்பதாக இவ் வரைபில் கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இத்தீர்மான வரைபில், இந்த விடயம் உள்ளடக்கப்பட்டமைக்கு இலங்கை இராஜதந்திரிகள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

இத்தீர்மான வரைபில் சில திருத்தங்களைச் செய்யுமாறு அரசாங்கம் அமெரிக்காவிடம் கோரிக்கை விடுத்துள்ளது என தெரியவருவதாக இவ் ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் இலங்கையில் இடம்பெற்ற போருக்குப் பின்னரான சாதகமான நிலைமைகள் தொடர்பில் இத்தீர்மான வரைபு கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் அமெரிக்காவிடம் இலங்கை அரசாங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

அதேவேளை, ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் 24-வது அமர்வில் இலங்கையின் மனிதவுரிமை நிலைமைகள் தொடர்பில் விவாதம் நடத்தக் கோருவதற்கும் இலங்கை அரசாங்கம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இத் தீர்மானத்தை அரசாங்கம் முற்றாக நிராகரிப்பதாகவும், இது குறித்து அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தப் போவதில்லை என்றும் ஜெனிவாவிற்கான இலங்கைத் தூதுவர் ரவிநாத் ஆரியசிங்க கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ–11)

# இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க தொண்டு நிறுவனங்கள் ஊடாக முயற்சி

## பாதுகாப்பு செயலர் குற்றச்சாட்டு

தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் ஊடாக மேற்குலக நாடுகள் இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க முயற்சித்து வருவதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு நிதி உதவிகளை வழங்கி நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்த சில தரப்பினர் முயற்சித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஊடகவியலாளர் பாதுகாப்பு உள்ளிட்ட நலத் திட்டங்களுக்காக அண்மையில் அமெரிக்கா இரண்டு தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு பெருந்தொகைப் பணத்தை ஒதுக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் ஏற்படுத்தும் நோக்கில் மேற்குலக நாடுகள் தன்னார்வ தொண்டு நிறுவனங்களை பயன்படுத்திக் கொள்வதாக பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

நாட்டுக்கு எதிராக பிரசாரம் செய்து வரும் தரப்பினர் இந்த நிதி உதவியைக் கொண்டு மேலும் தீவிரமாக பிரசாரங்களை முன்னெடுப்பார்கள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கு எதிரான தரப்பினர் ஒன்றுகூடும் இடமாக ஜெனிவா மாற்றமடைந்துள்ளது. யுத்தம் இடம்பெற்ற காலத்திலும் சில ஊடகவியலாளர்களுக்கு பெருந்தொகைப் பணம் கிடைக்கப்பெற்றுள்ளது.

தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வரும் நிதி உதவிகள் குறித்து தீவிர கண்காணிப்பு செய்யப்பட வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளார். (எ–11)

# டில்லி மாணவி பாலியல் வல்லுறவு பிரதான சந்தேக நபர் தற்கொலை

டில்லியில் ஓடும் பேருந்தில் 23-வயது மாணவி கற்பழிக்கப்பட்டு கொல்லப்பட்ட வழக்கில் முக்கிய குற்றவாளியான ராம் சிங் திகார் சிறையில் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார் என்று இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த டிசம்பர் மாதம் 16ஆம் திகதி டெல்லியில் ஓடும் பேருந்தில் 23 வயது மருத்துவ மாணவி 6 பேர் கொண்ட கும்பலால் கற்பழிக்கப்பட்டு கொடூரமாக தாக்கப்பட்டு தெருவோரம் வீசப்பட்டார்.

இதில் படுகாயமடைந்த அவர் டில்லி மற்றும் சிங்கப்பூர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றார்.

ஆனால் சிகிச்சை பலனின்றி சிங்கப்பூர் மவுண்ட் எலிசபெத் மருத்துவமனையில் கடந்த டிசம்பர் 29ம் திகதி உயிர் இழந்தார்.

இந்த வழக்கில் சிறுவன் உட்பட 6 பேரை பொலிஸார் கைது செய்து சிறையில் அடைத்தனர். அதில் பஸ் சாரதியான ராம் சிங்தான் முக்கிய குற்றவாளியாகக் கண்டறியப்பட்டார். இந்த வழக்கில் அவரது தம்பி முகேசும் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டதில் சிறுவனை தவிர மீதமுள்ள 5 பேரும் திகார் சிறையில் அடைக்கப்பட்டனர். அவர்கள் பிற கைதிகள் தவிர தங்களுக்குள்ளும் பேசிக் கொள்வதை நிறுத்தி விட்டனர். இதையடுத்து அவர்கள் எங்கே தற்கொலை செய்து கொள்வார்களோ என்ற சந்தேகத்தின் பேரில் அவர்கள் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வந்தனர்.

இந்த நிலையில் சிறையில் அடைக்கப்பட்டிருந்த ராம் சிங் நேற்றும் காலை 5 மணிக்கு தூக்கு போட்டு தற்கொலை செய்துகொண்டார்.

அவரது உடல் தீன் தயாள் உபத்யாய மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (எ–11)

# சுவாமியின் முயற்சி தோல்வியடைந்தது

(சென்னை)

போர்க் குற்றம் தொடர்பாக சர்வதேச விசாரணை கோருவதை வலியுறுத்த வேண்டாம் என்று அமெரிக்காவுக்கு அழுத்தம் கொடுக்க ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி முயற்சி மேற்கொண்டார்.

போர்க் குற்றம், இனப்படுகொலை மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சிக்கிய இலங்கையை மீட்க சுப்பிரமணியம் சுவாமி அழையா விருந்தாளியாகவே நுழைந்தார்.

முதல்கட்டமாக கலங்கிப் போயிருந்த இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவைச் சந்தித்து ஆறுதல் கூறினார். இதற்கு தமிழகத்தில் கடும் எதிர்ப்பு ஏற்பட்டது.


பிரபாகரனின் மகனான 12 வயதேயான பாலச்சந்திரனை இலங்கை இராணுவம் கொன்ற ஆதாரம் வெளிவந்தபோது அச்சிறுவனும் தீவிரவாதியே என்று கூறி ராஜபக்ஷவைக் காப்பாற்ற முனைந்தவர் சுவாமி.

இந்நிலையில் அமெரிக்காவுடன் இலங்கையை காப்பாற்ற சமரச முயற்சிகளில் சுவாமி ஈடுபட்டார்.

ஆனால் சுப்பிரமணியன் சுவாமி மற்றும் இலங்கைப் பிரதிநிதிகள் ஆகியோரின் முயற்சிகள் வெற்றி பெற்றதாகத் தெரியவில்லை என்று ஒரு இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (எ–11)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## கடவுளுக்கு அர்ப்பணியுங்கள்



✦ ஆன்மீக உயர்வு பெறவேண்டுமானால் மனதில் குறுகிய எண்ணங்களுக்கு இடம் தராதீர்கள்.

✦ தனக்கு என்று எதையும் வைத்துக்கொள்ளாமல் அனைத்தையும் கடவுளுக்கு அர்ப்பணித்துவிடும் துணிவு பக்திக்கு மிக அவசியம்.

✦ எப்போதெல்லாம் சுயநலம் நமக்குள் எழுகிறதோ அப்போதெல்லாம் மனஆற்றல் அனைத்தும் நாலாபுறமும் சிதறுகிறது.

✦ எப்போதும் உழைத்துக்கொண்டே இருங்கள். ஆனால் செயலால் ஏற்படும் விளைவு மனதில் பதிவுகளை உண்டாக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

✦ புலன்கள் என்னும் குதிரைகளை மனம் என்னும் கடிவாளத்தால் இழுத்துப் பிடியுங்கள்.

✦ அறியாமை நம்மிடம் இருக்கும்வரை நம்மை விட்டுத் துன்பங்கள் விலகாது. இதற்கு ஒரே தீர்வு நாம் ஆன்மீக வலிமைமிக்க தூய்மையானவர்களாக மாறுவது தான்.

✦ நாய்க்கு சோறு இடுவதாக இருந்தாலும் அதற்குள் இருக்கும் கடவுளுக்குத்தான் நீங்கள் சேவை செய்யும் வாய்ப்பைப் பெறுகிறீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் இன்னிங்சில் சாதனைகளுடன் பங்களாதேஷ் முன்னிலையில்



இலங்கை - பங்களாதேஷ் அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் அணி 68 ஓட்டங்களால் முன்னிலையில் காணப்படுகின்றது.

காலியிலே நடைபெற்றுவரும் இந்தப் போட்டியில் முதல் இன்னிசுக்காக துடுப்பெடுத்தாடி வரும் பங்களாதேஷ் அணி 3ஆவது நாள் ஆட்டநேர முடிவில் 4 விக்கெட் இழப்பிற்கு 438 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. முகமது அஷ்ரபுல் 189 ஓட்டங்களுடனும், அணித் தலைவர் முஷ்பிகுர் ரகிம் 152 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

நேற்று 4ஆம் நாள் ஆட்டம் ஆரம்பித்து பங்களாதேஷ் அணி 444 ஓட்டங்களை எட்டிய போது, முகமது அஷ்ரபுல் ஆட்டமிழந்து இரட்டைச் சதத்தை தவறவிட்டார். அவர் 417 பந்துகளில் 20 பவுண்டரிகள், ஒரு சிக்சருடன் 190 ஓட்டங்களை குவித்திருந்தார்.

அடுத்து வந்த ஹொசைன் களத்திலே நின்ற முஷ்பிகுர் ரகிம் உடன் இணைந்தார். அபாரமாக ஆடிய முஷ்பிகுர் ரகிம் முதல் முறையாக இரட்டைச் சதத்தை பதிவு செய்தார். 320 பந்துகளில் 22 பவுண்டரிகள், ஒரு சிக்சருடன் அவர் இந்த சாதனையை எட்டினார். அத்துடன் சர்வதேச போட்டிகளில் இரட்டைச் சதம் அடித்த முதல் பங்களாதேஷ் வீரர் என்ற பெருமையையும் அவர் பெற்றார். ஆனால், குலசேகரா வீசிய அடுத்த பந்திலேயே அவர் ஆட்டமிழந்து வெளியேறினார்.


தொடர்ந்து களத்திலே நின்ற ஹொசைன் 100 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்க ஏனைய வீரர்களும் குறுகிய ஓட்டங்களுடன் பவிலியன் திரும்ப பங்களாதேஷ் முதல் இன்னிங்சில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 638 ஓட்டங்களைப் பெற்றது.

இந்தப்போட்டியில் முஷ்பிகுர் ரகிம் - அஷ்ரபுல் ஜோடி நீண்ட நேரம் களத்தில் நின்று ஆடிய முதல் பங்களாதேஸ் ஜோடி என்ற சாதனை படைத்தது. இந்த ஜோடி 518 பந்துகளை எதிர்கொண்டு 267 ஓட்டங்களைச் சேர்த்தது. இதற்கு முன்பு 2005இல் சிம்பாப்வேக்கு எதிரான போட்டியில் ஜாவேத் ஓமர்- நபீஸ் இக்பால் ஜோடி 498 பந்துகளை சந்தித்ததே இதுவரை சாதனையாக இருந்தது.

பதிலுக்கு தனது 2 ஆவது இன்னிங்சை ஆரம்பித்த இலங்கை அணி 30 ஓவர்களில் ஒரு விக்கெட்டினை இழந்து 116 ஓட்டங்களைப் பெற்று ஆடிவருகின்றது. அணி 17 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கருணாரட்ன 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த சங்கக்கார களத்திலே நின்ற டில்சானுடன் இணைந்து ஆடிவருகின்றார். நேற்றைய 4 ஆம் நாள் ஆட்டம் நிறைவடையும்போது டில்சான் 63 ஓட்டங்களுடனும், சங்ககார 49 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்திலே உள்ளனர்.

## 'சத்தியமா போதைப்பொருள் எண்டு தெரியாது ஊக்கம் தரும் உணவு என்று நினைத்து உண்டோம்' என

# வண்டில் விடுகிறார் குத்துச் சண்டை வீரர்



விஜேந்தர் சிங்

இந்திய குத்துச் சண்டை வீரர் விஜேந்தர் சிங் உடல் வலிமையை அதிகரிக்க போதை மருந்து பயன்படுத்தியதாக, அவரது நண்பரும் சக குத்துச் சண்டை வீரருமான ராம் சிங் பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

பஞ்சாப்பில் சில நாட்களுக்கு முன் குத்துச்சண்டை வீரர் ராம்சிங்கை, போதைப் பொருள் வைத்திருந்ததாக பொலிசார் கைது செய்தனர். இவரிடம் நடத்திய விசாரணையில், அனுப் சிங், குல்விந்தர் சிங் என இருவர் கைது செய்யப்பட்டனர். அனுப் சிங் வீட்டில் இருந்து, ரூ. 130 கோடி மதிப்புள்ள போதைப்பொருள் (ஹெராயின்) பறிமுதல் செய்யப்பட்டது.

இந்தச் சூழலில், போதை மருந்து உட்கொண்டதை ஒப்புக்கொண்ட ராம் சிங். நானும், விஜேந்தரும் ஊக்கம் தரும் கூடுதல் உணவு என நினைத்து, சிறிய அளவில் சில நேரங்களில் உட்கொண்டோம். உடல் வலிமை மற்றும் சக்தியை அதிகரிக்க உதவும் என்றே கூறினர். உண்மையில் இது போதை மருந்து என்று தெரியாது. ஒரு கட்டத்தில் போதைப்பொருள் என தெரிந்தவுடன், வாங்குவதை நிறுத்திவிட்டோம். கடந்த ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் இரண்டு அல்லது மூன்று முறை இதை விஜேந்தர் உட்கொண்டார். அவரும் உண்மை தெரிந்தவுடன் நிறுத்திவிட்டார் என்றார்.

இது குறித்து பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறுகையில், முதன்முதலாக, கடந்த டிசம்பர் மாதம், அனுப் சிங் எவ்வித பணமும் வாங்காமல், 2 கிராம் ஹெராயின் கொடுத்துள்ளார். பாட்டியாலாவில் உள்ள தேசிய விளையாட்டு மையத்திற்கு, சண்டிகரிலிருந்து செல்லும்போது, உட்கொண்டுள்ளனர். போதை பொருளை உட்கொண்டபின், எந்தவித போட்டிகளிலும் கலந்து கொள்ளவில்லை என கூறுகின்றனர், என்றார்.

போதை மருந்து உட்கொண்டது அம்பலமானதை தொடர்ந்து விஜேந்தருக்கு நெருக்கடி அதிகரித்துள்ளது. இவரிடமும் பொலிசார் விரைவில் விசாரணை நடத்துவார்கள் எனத் தெரிகிறது.

இந்திய குத்துச்சண்டை விளையாட்டின் நட்சத்திர வீரராக திகழும் விஜேந்தர் சிங், 2008 இல் நடந்த ஒலிம்பிக் போட்டியில் வெண்கலம் வென்றார். 2010இல் நடைபெற்ற ஆசிய போட்டியில் தங்கம் வென்றார். இவரது சாதனையைப் பாராட்டி விளையாட்டின் உயரிய விருதான கேல் ரத்னா விருது வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சம்பியன் கனவு தகர்ந்தது



பூப்பந்தாட்ட நாயகி சாய்னா நேவால்

இங்கிலாந்தின் பர்மிங்காமில் இடம்பெற்றுவரும் பூப்பந்தாட்டப் போட்டிகளில் முதல் முறையாக சம்பியன் பட்டம் வெல்லும் முனைப்புடன் களமிறங்கிய இந்தியாவின் நட்சத்திர வீராங்கனை சாய்னா நேவால் அரையிறுதி வரை முன்னேறினார்.

அரையிறுதிப் போட்டியில் உலகின் 8 ஆம் தரநிலையில் இருக்கும் தாய்லாந்து வீராங்கனை இன்டானோன் ரட்சனோக்கை, சாய்னா எதிர்கொண்டார். 40 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில், 15-21, 19-21என்ற செட்கணக்கில் சாய்னா போராடித் தோல்வியடைந்தார். இன்டானோனிடம் 3ஆவது முறையாக சாய்னா தோல்வியடைந்துள்ளார். இதன்மூலம் சாய்னாவின் சம்பியன் கனவு தகர்ந்தது.

இதற்கு முன்பு 2011 இல் சுதிர் மேன் கிண்ணம், கடந்த ஆண்டு சுப்பர் சீரிஸ் இறுதிப் போட்டி ஆகியவற்றிலும் சாய்னாவை இன்டானோன் வென்றுள்ளார்.



# மெஸ்ஸியின் புதிய சாதனை

உலகின் தலைசிறந்த ஆர்ஜென்டீன காற்பந்து வீரர் லியோனல் மெஸ்சி ஸ்பெயினில் உள்ள பார்சிலோனா அணிக்காக விளையாடி வருகிறார்.

ஸ்பெயின் காற்பந்து கிளப் போட்டியில் (லா லிகா) டிபோர்ட்டோ அணிக்கு எதிராக மெஸ்சி அடித்த கோல் மூலம் தொடர்ந்து 17 ஆட்டங்களில் மெஸ்சி கோல் அடித்து சாதனை புரிந்துள்ளார்.

இதன் மூலம் 1930ஆம் ஆண்டு சாதனையை மெஸ்சி முறியடித்துள்ளார். மெஸ்சி இந்த 17 ஆட்டங்களில் 27 கோல்கள் அடித்துள்ளார். மெஸ்சி இந்த சீசனில் மொத்தம் 52 கோல்கள் அடித்துள்ளார். சம்பியன் லீக் போட்டியில் 5 கோல்களும் இதில் அடங்கும்.

# சமநிலை

இங்கிலாந்து - நியூசிலாந்து அணிகள் மோதிய முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி டுனிடினில் நடைபெற்றது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து முதல் இன்னிங்சில் 167 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் ட்ரொட் 45 ஓட்டங்களையும் , இயான் பெல் 24 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் வாக்னெர், மார்ட்டின் 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

பதிலுக்கும் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து முதல் இன்னிங்சில் 9 விக்கெட் இழப்புக்கு 460 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. நியூசிலாந்து அணிசார்பாக ரதர்போட் 171 ஓட்டங்களையும் மெக்கல்லம் 74 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஆண்டர்சன் 4 விக்கெட்டுகளையும் ஸ்டூவர்ட் பிராட் 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்.

293 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2ஆவது இன்னிங்சை ஆடிய இங்கிலாந்து 6 விக்கெட்டுகளை இழந்து 421 ஓட்டங்களைப் பெற்றபோது 5 ஆம் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது. இங்கிலாந்து வீரர்களின் தீவிரமான போராட்டத்தால் இப்போட்டி சமநிலையில் முடிவடைந்தது. அணித் தலைவர் குக் 116 ஓட்டங்களையும் மற்றொரு தொடக்க வீரரான கொம்டன் 117 ஓட்டங்களையும் ட்ரொட் 52 ஓட்டங்களையும், ஸ்டீவன் பின் 56 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழந்தனர். இவ்விரு அணிகளுக்கு இடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி வரும் 14ஆம் திகதி வெலிங்டனில் ஆரம்பமாகிறது.


# வொட்சன் உட்பட 4 வீரர்கள் நீக்கம்

சென்னை, ஐதராபத் டெஸ்ட் போட்டிகளில் அவுஸ்திரேலிய அணி தோல்விகளைச் சந்தித்ததன் காரணமாக அணியில் இருந்து 4 வீரர்கள் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளனர். அதிரடி துடுப்பாட்ட வீரர் ஷேன் வொட்சன் உட்பட்ட ஜேம்ஸ் பட்டிசன், உஸ்மான் குவாஜா, ஜான்சன் ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர்.

சக அணி வீரர்களுக்கு சரியான ஒத்துழைப்பு தரவில்லை என்ற புகார் எழுந்ததன் காரணமாக இவர்கள் நீக்கப்பட்டதாக அவுஸ்திரேலிய தேர்வுக்குழு அறிவித்துள்ளது. இது அவுஸ்திரேலியா அணிக்கு மேலும் பின்னடைவை ஏற்படுத்தலாம் என கிரிக்கெட் வீரர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிபாஸ் ஓபன் டென்னிஸ்; மரியா அடுத்த சுற்றுக்கு



(கலிபோர்னியா)

பரிபாஸ் ஓபன் டென்னிஸ் தொடரின் 4-வது சுற்றுக்கு ரஷ்ய வீராங்கனை மரியா ஷரபோவா முன்னேறியுள்ளார்.

அமெரிக்காவின் இந்தியன் வெல்ஸ் நகரில், பி.என்.பி. பரிபாஸ் ஓபன் டென்னிஸ் தொடர் நடக்கிறது.

இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவின் 3-வது சுற்றில் ரஷ்யாவின் மரியா ஷரபோவா, ஸ்பெயினின் கார்லா சவுரஸ் நவரோவைச் சந்தித்தார்.

அபாரமாக ஆடிய ஷரபோவா 7:5, 6:3 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று நான்காவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றைய 3-வது சுற்றுப் போட்டிகளில் இத்தாலியின் சாரா எரானி, ரஷ்யாவின் மாரியா கிரிலென்கோவா, போலாந்தின் அக்னீஸ்கா ரட்வன்ஸ்கா உள்ளிட்ட வீராங்கனைகள் வெற்றி பெற்று 4-வது சுற்றுக்குத் தகுதி பெற்றனர்.

**ஜோகோவிச் வெற்றி:**

ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு 2-வது சுற்றில் உலகின் நம்பர் 1 வீரரான சேர்பியாவின் நோவாக் ஜோகோவிக், இத்தாலியின் போபியோ போக்னியைச் சந்தித்தார்.

இதில் ஜோகோவிக் 6:0, 5:7, 6:2 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று 3-வது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றைய போட்டிகளில் இங்கிலாந்தின் அன்டி முர்ரே, குரோஷியாவின் மரின் சிலிக், அமெரிக்காவின் மார்டி பிஷ், ஆர்ஜென்ரீனாவின் ஜுவான் மார்ட்டின் டெல் பெட்ரொ, ஜப்பானின் கெய் நிஷிகோரி உள்ளிட்டோர் வெற்றி பெற்று 3ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றனர்.

# இந்துக்களின் போர் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கும் இடையில் இந்துக்களின் போர் என்று வர்ணிக்கப்படும் இரண்டு நாட்கள் கொண்ட துடுப்பாட்டப் போட்டி இன்று செவ்வாய்க் கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் காலை 10 மணிக்கு ஆரம்ப மாகவுள்ளது.

2008-ம் ஆண்டு முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட இந்துக்களின் போர் துடுப்பாட்டப் போட்டியானது இம்முறை 6-வது தடவையாக நடைபெறவுள்ளதுடன்,

இதுவரையிலும் நடைபெற்ற போட்டிகளில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி ஒரு போட்டியில் வெற்றி பெற்றதுடன்; மிகுதி 4 போட்டிகள் சமநிலையிலும் முடிபுற்றன.

இதேவேளை இம்முறை போட்டிகள் எளிமையான முறையிலேயே நடைபெறும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

# இமையாணன் ம.வி.க.கால்பந்தாட்டம்

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் பருத்தித்துறை கால் பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடத்தும் யாழ். மாவட்ட கால்பந்தாட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான விலகல் முறையிலான கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நக்கீரன், கொலின்ஸ் அணிகள் வெற்றிபெற்றுள்ளன.

அல்வாய் நக்கீரன் அணிக்கும், திக்கம் விண்மீன் அணிக்கும் இடையில் அண்மையில் நடைபெற்ற போட்டியில் நக்கீரன் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

வல்வெட்டி கருணாகரன் அணிக்கும், கரணவாய் கொலின்ஸ் அணிக்கும் இடையில் நடைபெற்ற 2-து போட்டியில் கரணவாய் கொலின்ஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

# கரைச்சிக் கோட்ட சதுரங்க போட்டி முடிவு

கிளிநொச்சி கல்வி வலயத்திற்குட்பட்ட கரைச்சி கல்வி கோட்டப் பாடசாலைகளின் 19 வயது பிரிவு சதுரங்க அணிகளுக்கிடையில் சதுரங்கச் சுற்றுப்போட்டி கனகபுரம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

15 வயது பிரிவு ஆண்கள் பிரிவில் கிளிநொச்சி மத்திய கல்லூரி முதலிடத்தையும், 2-ம், மூன்றாமிடங்களை முறையே கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலயம், வட்டக்கச்சி மகா வித்தியாலயமும் பெற்றுக் கொண்டன.

15 வயதுப் பிரிவு ஆண்கள் பெண்கள் பிரிவில் கிளிநொச்சி மகாவித்தியாலயம் முதலிடத்தைப் பெற்றதுடன்,

2-ம் ;3-ம் இடங்களை முறையே உருத்திரபுரம் மகா வித்தியாலயம் ;வட்டக்கச்சி மகா வித்தியாலயம் ஆகிய அணிகள் பெற்றுக்கொண்டன.


19 வயதுப்பிரிவு ஆண்கள் பிரிவில் கிளிநொச்சி மகா வித்தியாலயம் முதலிடத்தையும் தொடர்ந்து 2-ம் இடத்தினை கிளி.மத்திய கல்லூரி அணி பெற்றுக் கொண்டது.


19 வயதுப்பிரிவு பெண்கள் பிரிவில் வட்டக்கச்சி மகாவித்தியாலயம் முதலிடத்தையும், இரண்டாம், மூன்றாமிடங்களை முறையே கிளிநொச்சி மகாவித்தியாலயம், இராமநாதபுரம் மகா வித்தியாலயம் ஆகிய அணிகள் பெற்றுக்கொண்டன.

# அக்ரம் சிறந்த பந்துவீச்சாளர்; தென்னாபிரிக்க வீரர் கலிஸ் புகழாரம்

நான் சந்தித்த பந்து வீச்சாளர்களில் வாசிம் அக்ரம்தான் சிறந்த வேகப்பந்து வீரர் என்று தென்னாபிரிக்க வீரர் கலிஸ் கூறியுள்ளார்.

தென் ஆபிரிக்க கிரிக்கெட் அணியின் முன்னணி சகலதுறை வீரர் ஜக் காலிஸ் துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சில் எப்போதுமே எதிர் அணிக்கு சவாலாக இருப்பார்.





இந் நிலையில் அவர் கூறியதாவது, எனது கிரிக்கெட் வாழ்க்கையில் ஏராளமான வேகப்பந்து வீரர்களின் பந்து வீச்சை எதிர் கொண்டு இருக்கின்றேன்.

இதில் பாகிஸ்தான் முன்னாள் அணித் தலைவரான வாசிம் அக்ரம் சிறந்த வேகப் பந்து வீரர் ஆவார். பந்தை சுவிங் செய்வதில் அவருக்கு உள்ள திறமை அபரிமிதமானது.

தொடக்கத்தில் பந்து வீசும் அவரது பவுலிங் மிகுந்த அச்சுறுத்தலாக இருக்கும். அவரது பந்தை எதிர்கொள்வதில் மிகுந்த அபாயம் உள்ளது என ஜக் கலிஸ் கூறியுள்ளார்.

# ஜோர்ஸ் வெப்ஸ்டார் வெற்றிக் கிண்ணம் ஜொலிஸ்டார்ஸ் அணி முதலிடம்

ஜோர்ஸ் வெப்ஸ்டார் வெற்றிக் கிண்ணத்திற்காக நடைபெறும் கிரிக்கெட் போட்டியில் ஜொலிஸ்டார்ஸ் அணி முதலிடத்தில் உள்ளது.

யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் ஜோர்ஸ் வெப்ஸ்டார் வெற்றிக்கிண்ணத்திற்காக யாழ்.மாவட்டத்தில் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப்போட்டிகளினூடாக சிறந்த துடுப் பாட்ட அணியினை வருடா வருடம் தெரிவு செய்து வருகின்றது.

இதன் அடிப்படையில் இவ்வருடம் பெப்ரவரி மாதம் இறுதிவரை நடைபெற்ற26 போட்டிகளின் முடிபுகள் அடிப்படையில் ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழக அணி பங்குபற்றிய 6 போட்டிகளில் 5 போட்டிகளில் வெற்றி பெற்று 32.1 புள்ளிகளுடன் முதலிடம் பெற்றது.

தொடர்ந்து இரண்டாம் இடத்தினை 25.1 புள்ளிகள் பெற்ற கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணியும், 23.6 புள்ளிகளைப் பெற்ற ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

# கைதடி விநாயகர் ச.ச.நி தாச்சி சுற்றுப் போட்டி

கைதடி தென் கிழக்கு விநாயகர் சனசமூக நிலையம் நடத்திவரும் தாச்சி போட்டியில் நேற்று முன்தினம் இரவு 7 மணிக்கு கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்ற தாச்சிப்போட்டியில் மறவன்புலம் அம்பிகை விளையாட்டுக் கழகமும், கைதடி துர்க்கா விளையாட்டுக்கழமும் மோதிக்கொண்டன.

இதில் மறவன்புலம் அம்பிகை விளையாட்டுக் கழகம் 25-5 என்ற கணக்கில் வெற்றி பெற்றுள்ளது.

இன்று இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கைதடி மேற்கு சரஸ்வதி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

# முன்பள்ளி விளையாட்டு

கைதடி நவபுரம் நவசக்தி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

முன்பள்ளி அபிவிருத்திச் சங்க தலைவி திருமதி ம.அன்பழகன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலயத்தின் முன்பள்ளிக் கல்விப் பணிப்பாளர்சு.பாக்கியராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கைதடி மக்கள் நலன்பேணும் நட்புறவுக் கழக தலைவர் ப. செல்லத்துரை; கைதடி எருதிடல் அ.த.க பாடசாலை அதிபர் ந.ஜெயரூபன், கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அதிகாரி வே.தபேந்திரன், தென்மராட்சி சிறுவர் உரிமைகள் மேன்பாட்டு அலுவலர் திருமதி வ. சத்தியயேஸ்வரன்,

தென்மராட்சி ஆரம்ப பிள்ளை அபிவிருத்தி உத்தியோத்தர் தே.வினோதன், சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க தலைவர் கி. பூபாலசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர். (எ-31)


# இங்கிலாந்தில் பிரகாசிக்க காத்திருக்கிறேன் இலங்கையின் முன்னாள் வீரர் சமரவீர

இங்கிலாந்தின் பிராந்திய அணியான வொர்செஸ்டர்ஷெயார் அணிக்காக விளையாடத் தெரிவு செய்யப்பட்டுள்ள இலங்கை அணியின் முன்னாள் வீரர் திலான் சமரவீர, அப்போட்டிகளில் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்த எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் சர்வதேசப் போட்டிகளில் இருந்து ஓய்வுபெற்ற திலான் சமரவீர,அந்த முடிபினை எடுப்பதற்கு முன்னதாகவே வோர்செஸ்டர்ஷெயார் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் அடுத்த வாரம் இங்கிலாந்துக்குப் புறப் படவுள்ள திலான் சமரவீர,

இங்கிலாந்துப் பிராந்திய போட்டிகளில் சிறப்பான பெறுபேற்றினை வெளிப்படுத்த எதிர் பார்பதாகவும், அதன் மூலம் இலங்கையின் இளைய வீரர் களுக்கான வாய்ப்புக்களை ஏற்படுத்த எதிர்பார்பதாகவும் தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜெனிவா கூட...

கள் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள படையினரின் பண்ணைகளில் சிவில் படையாக வேலை செய்பவர்களை இன்றைய தினம் ஒரு உணவுப் பொதியுடன் படையினர் அழைத்திருப்பதாக தெரியவருகிறது.

ஐ.நாவுக்கு எதிராக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த ஊர்வலத்திற்கு சுமார் இரண்டாயிரம் பேரை படையினர் இலக்கு வைத்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை அரசாங்கத்தின் சிவில் பாதுகாப்புத் திணைக்களம் ஏற்கெனவே புனர்வாழ்வுக்குட்பட்ட முன்னாள் விடுதலைப் புலிகளின் போராளிகளான 2200 பெண்களையும் 800 ஆண்களையும் சிவில் உத்தியோகத்தர்கள் என்ற தற்காலிக நியமனத்தில் இணைத்துக் கொண்டது.

எனினும் இவர்கள் அனைவரும் பாதுகாப்பு அமைச்சு உருவாக்கிய பண்ணைகளில் கட்டாயப்படுத்தி வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். (எ-11)

## பொதுநலவா...

அவர் குறிப்பிட்டுள்ளார்.

குற்றச்செயல்களுக்கு தண்டனை விதித்தல் தொடர்பிலான சர்வதேச சமூகத்தின் கோரிக்கையை இலங்கை தொடர்ந்தும் உதாசீனம் செய்து வருவதாகத் தெரிவித்துள்ளார். (எ-11)

## பொது பல...

யும் அபாயாவிற்கு எதிராக விரைவில் போர்க்கொடி தூக்குவோம் என கிரம விமலஜோதி தேரர் மேலும் தெரிவித்தார். (எ-11)

# பொது பல சேனா அமைப்பின் நடவடிக்கைகளுக்கு அச்சப்பட வேண்டும்

## அமைச்சர் பசீர் தெரிவிப்பு

பொது பல சேன அமைப்பின் நடவடிக்கைகளினால் ஆளும் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியே அச்சப்படவேண்டும். கலவரப்படவேண்டும். அது தவிர, முஸ்லிம்களோ தமிழர்களோ அச்சப்படத் தேவையில்லை என்று உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு அமைச்சர் பசீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

சிங்கள முற்போக்கு சக்திகள், பெரும் பான்மையான சிங்கள, தமிழ்,முஸ்லிம் மக்கள் இந்த அரசுக்கு ஆதரவைத் தெரிவிப்பதன் மூலம் தான் சிறுபான்மை மக்களுக்கு எதிராகக் கூக்குரலிடுகின்ற, கல்லெறிகின்ற, காடைத்தனம் புரிகின்ற, மத வழிபாடுகளில் தலையீடு செய்கின்ற சிறிய சிங்களப் பெருந்தேசியவாத சக்திகளை நாங்கள் கீழ்ப்படிய வைக்க முடியும் என்றும் அமைச்சர் கூறினார்.

ஏறாவூர் நகரசபையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், இலங்கையில் இருக்கின்ற எல்லா முஸ்லிம் கட்சிகளையும் ஒன்றிணைக்க வேண்டும் என்று நான் கடந்த காலங்களில் கடுமையாகப் பாடுபட்டேன்.

ஏனென்றால் இனிமேல் வருகின்ற அரசியல் என்பது ஒரு வித்தியாசமானதாக இருக்கும். நெருக்கடிகள் நிறைந்த இந்தக்காலகட்டத்திலே நாங்கள் எங்களுடைய பலத்தை மாத்திரமல்ல ஏனைய சமூகங்களோடு புரிந்துணர்வை வளர்ப்பதன் மூலம் அவர்களுக்குள் நாங்கள் எங்களது நம்பகத்தன்மையை நிலைநிறுத்துவதன் மூலம் ஏனைய சமூகங்கள் எங்களைப்பற்றி அச்சப்படாதிருக்கின்ற அடிப்படையிலே நாங்கள் செயற்படுகின்ற போதுதான் எதிர்காலத்திலே இந்த நாட்டிலே மேலோங்கி வருகின்ற பெருந்தேசியவாத சக்திகளின் சவால்களை முடியடித்து நாம் அனைவரும் இலங்கையர் என்ற அந்த ஒரே நிழலின் கீழ் வாழ்வதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக்கொள்ள முடியும். இல்லாது போனால் எப்போதுமே சச்சரவுகள் நிலவுகின்ற ஒரு இடமாக எமது நாடு மாறிவிடும் ஆபத்து இருக்கின்றது. இந்த விடயத்தில்ஜனாதிபதிமிகவும்உறுதியாகஇருக்கின்றார்.

சிங்கள மக்களுக்குள் மிகப்பெரும் பான்மையான ஆதரவைப்பெற்ற ஒரு அரசியல் தலைவரினால் தான் சிறுபான்மை மக்களுக்கும் சரியான உரிமையைத்தர முடியும். அவர்களைப்பாதுகாக்கவும் முடியும் என்றும் பசீர் குறிப்பிட்டார். (எ-11)

## இலங்கையில் பௌத்...

வில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

அபிவிருத்திகளைச்செய்வதன் மூலம் நாட்டைக்கட்டியெழுப்ப முடியுமென அரசாங்கம் நினைக்கிறது. ஆனால் இனங்கிடையே மதங்களுடையே முரண்பாடு நிலவுமானால் அந்த அபிவிருத்தியினால் எந்த பயனும் கிடைக்கப்போவதில்லை.

தற்போது ஜெனிவாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் இலங்கை விவகாரம் தொடர்பாக பலரும் பல்வேறுவிதமாகபேசிக்கொள்கிறார்கள்.

கடந்த ஆண்டு ஜெனிவா மனித உரிமை பேரவைக்கூட்டம் நடைபெற்ற போது முஸ்லிம்கள் இலங்கை அரசாங்கத்திற்கு ஆதரவாக வாக்களிக்குமாறு குறிப்பாக அரபு நாடுகளைக் கேட்டிருந்தார்கள். ஆனால் தற்போது முஸ்லிம்கள் கூட தமது மத உரிமையைப்பாதுகாப்பதற்காகப் போராடுகிறார்கள்.

இந்துக்கள் கடந்த வருடம் கார்த்திகை தீப நாளைக்கூட கொண்டாட முடியாத நிலை காணப்பட்டது. எமது தாயக பூமியில் இந்து ஆலயங்கள் இருந்த இடங்களில் பௌத்த விகாரைகள் அமைக்கப்படுகின்றன.

தெற்கிலே சில கத்தோலிக்க தேவாலயங்கள் தாக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பௌத்த மதம் இல்லாத ஏனைய மதத்தினர் தமது மத அனுஷ்டானங்களை செய்வதில் பல சவால்களை எதிர் நோக்குகின்றனர்.

கிழக்கு மாகாண சபையின் தற்போதைய அரசாங்கம் தனித்தோ அல்லது கூட்டாகவோ ஆட்சி அதிகாரத்தை வைத்திருக்கும் வரை அது சுதந்திரமாக இயங்கும் என நாம் எதிர்பார்க்க முடியாது .

இது தான் கிழக்கு மாகாண சபையின் இன்றைய நிலை. தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தனித்தோ அல்லது கூட்டாகவே ஆட்சி அதிகாரங்களைக்கைப்பற்றிருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது என்றார். (எ-11)

## அரசாங்கத்...

காணி மற்றும் காணி அபி விருத்தி அமைச்சின் மாவட்ட அலுவலகம் ஒன்று யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட அமைச்சர் பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றினை மாவட்ட செயலகத்தில் நடத்தியிருந் தார். இதன் போதே மேற் கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள அதாவது உயர் பாதுகாப்பு வலயம் எனக் கூறப்படும் வலி வடக்கில் உள்ள 6 ஆயிரம் ஏக்கர் காணியில் 3 ஆயிரம் ஏக்கர் காணி அரசாங்கத்திற்கு சொந்தமான காணி. மிகுதி மூவாயிரம் ஏக்கர் காணியே பொது மக்களுடைய காணியாகும்.

இந்தக் காணிகளில் பல காணிகளை பொது மக்கள் அரசாங்கத்தின் தேவைக்காக வழங்க முன் வந்துள்ளனர் அவ்வாறு வ[illegible]த வதற்கு முன்வந்த பொதுமக்களுக்கு காணிக்கான நஷ்ட ஈடு வழங்கப்படும் என்றார்.

அத்தோடு வலி வடக்கிலுள்ள குறிப்பாக மயிலிட்டி, வசாவிளான், தெல்லிப்பழை, பலாலி போன்ற இடங்களிலுள்ள பொதுமக்களின் காணிகளை இவ் வருட இறுதிக்குள் விடுவிக்கவும் நடவடிக்கை எடுத்து வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)


UK, Australia, New Zealand, Canada, America & Malaysia
பல்கலைக்கழக அனுமதிகள் தொடர்பான
கருத்தரங்கும் உடனடி அனுமதியும்


2012 ஜுலையில் நடைபெற்ற கருத்தரங்கு


அனுமதி பெற்றுச் சென்ற மாணவர்கள்

INTI INTERNATIONAL UNIVERSITY LAUREATE INTERNATIONAL UNIVERSITIES | UNIVERSITY OF WOLLONGONG AUSTRALIA | UNIVERSITY OF BRADFORD MAKING KNOWLEDGE WORK | University of Bedfordshire

| | |
|---|---|
| க.பொ.த. (உ/த) 3 பாட சித்தி (3Cs) => | 3 வருடங்களில் பட்டக்கல்வி பூர்த்தி |
| க.பொ.த. (சா/த) 5 பாட சித்தி (5Cs) => | 4 வருடங்களில் பட்டக்கல்வி பூர்த்தி |

50 - 70% கட்டணக் கழிவு
IELTS வங்கிப்பணம் தூதரக நேர்முகத்தேர்வு இல்லை

உலகம் முழுவதும் 29 நாடுகளில் 100க்கும் மேற்பட்ட பல்கலைக்கழக வலைப்பின்னலான
INTI Laureate International Universities
பிரதிநிதி Kumara Raj ஐச் சந்தித்து அனுமதி பெறுங்கள்
(சான்றிதழ்கள் மற்றும் பெற்றோர்/பாதுகாவலருடன் வரவும்)

On 14-03-2012 வியாழன் மு.ப. 10.00 - பி.ப. 3.00
@ ஞானம்ஸ் ஹொட்டேல்

பல்கலைக்கழக அனுமதி முதல் பட்டம், தொழில்வாய்ப்பு பெறும் வரையில் கூடவே இருந்து வழிகாட்டும் ஒரே நிறுவனம்

MEDIA & EDUCATION சிகரம் SIKARAM கல்வி - தொழில் வழிகாட்டி
221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.;
தொ.பே.: 021 300 80 60
நேரடி: 0773 616 798
மி.அ.:edusikaram@gmail.com இணையம்:www.sikaram.lk



பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ் பல்கலைகழகத்தில் 28.02.2013 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கல்வியியல் முதுமாணி (திறமைச்சித்தி) Master of Education (Merit) பெற்று மு/கலைமகள் வித்தியாலய அதிபர் திரு க.ஜெயவீரசிங்கம் அவர்கள் தனக்கும் எமது பாடசாலை சமூகத்திற்கும் பெருமையை தேடி தந்ததையிட்டு அவரை மனதார வாழ்த்துவதோடு அவர் மென்மேலும் பல பட்டங்கள் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

முள்ளியவளை
முல்லைத்தீவு

வாழ்த்துவோர்
பழைய மாணவர்கள்
ப.டிருஷாந் பா.அஜந்தன்



பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் DMI அமெரிக்க நிறுவனமானது மன்னார்,முல்லைத்தீவு,கிளிநொச்சி,வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் உள்ளதமது கிளைகளுக்கு O/L,A/L படித்த சாதிக்கத்துடிக்கும்இளைஞர்,யுவதிகள், தேவைப்படுகின்றன.

- 6 மாத கால பயிற்சி வழங்கப்படும். பயிற்சியின் போது கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
- பயிற்சி முடிவில் அடிப்படை சம்பளம் 35000 -50000 பெறலாம்.
- நிரந்தர வேலைவாய்ப்பு உண்டு.
- குறிப்பு:- வயதெல்லை 18-35 தங்குமிட வசதிகள் உண்டு.

T.P:-0776219536,0770771377,0217200867

(2142)



DMI - யாழ்ப்பாணம்
A/L 2013
DAY CLASS
புவியியல்:- N.[illegible]
அலகுகள்- புள்ளிவிபரவியல்
புற விசை
விவசாயம்
(திங்கள், புதன், வெள்ளி-7am)
புதிய அனுமதிகள் வழங்கப்படும்.



NALIN IT இன் MEGA OFFER
hp DELL Laptops, Branded PC மற்றும் Assembled PC என்பன அதிரடி விலைக்குறைப்புடன்....
1 வருடம் முதல் 3 வருட உத்தரவாதம்
ஏராளமான வெகுமதிகள்...
மேலதிக விபரங்கள் எமது facebook தளத்தில்
NALIN Information Technologies Pvt Ltd
NALIN INFORMATION TECHNOLOGIES PVT LTD TP-0212221121 0777667975
195/2, Palaly road,Parameswara Junction, Jaffna.
www.facebook/nalinit.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.03.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.